உ

கணபதி துணை

ஸ்ரீ சிவசுப்பிரமண்ணியக்கடவுள்

அகஸ்திய மகாமுனிவருக்கு திருவாய் மலர்ந்தருளிய

# ஸ்திரீ புருஷ

# சாமுத்ரிகா லக்ஷண

# சாஸ்திரம்.



சோ. வெங்கடாட்சசர்மா,
"அருள்மனை," அச்சக வீதி,
கொக்குவில், (இலங்கை.)

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

*Registered Copy Right.*

ரூபா 1-50 விலை

உ.

கணபதி துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமண்ணியக்கடவுள்

அகஸ்திய மகாமுனிவருக்கு திருவாய் மலர்ந்தருளிய

# ஸ்திரீ புருஷ

# சாமுத்திரிகா லக்ஷண

# சாஸ்திரம்.

சோ. சிவகடாட்ச சர்மா,
★ "அருள்மனை" அச்சக வீதி,
கொக்குவில், (இலங்கை.)

இஃது

கீர்வாண பாஷையினின்று திராவிட பாஷையில்

மொழிபெயர்க்கப்பட்ட பிரதிக்கிணங்கியது.

9165

★ ★ ★

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

Registered Copy Right, விலை ரூபா 1-50.

ஸ்டான்காட் பிறின்டர்ஸ் லிமிட்டெட்,
196, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

உ
கணபதி துணை.

# புருஷலக்ஷணம்.

உள்ளங்கால்:—சிவப்பாயிருந்தாலும், வேர்வைவிடாமலிருந்தாலும், தனவந்தனவான். மிருதுவாயிருந்தால் சாசுவதமான புண்ணியகாரியங்களைச் செய்கிறவனையும், தைரியசாலியாயும், ஜாக்கிரதையுள்ளவனையும், தனவந்தனையும் ஆவான். வேர்வைவிடாமல் மிருதுவாய் தாமரை வர்ணமுடையதா யிருந்தால், ராஜாவாவான். முறத்தைப்போல் விசாலமாயிருந்தால், தரித்திரனவான். நீளமாயிருந்தால், தேச சஞ்சாரியாவான்.

கால் நகங்கள்:—மாமிசத்தைப்போல் சிவப்பா யிருந்தால் ராஜாவாவான். தாம்பிரத்தைப்போல் சிவப்பாயாவது தாமரையைப்போல் வெண்மையாயாவது இருந்தால், தனவானவான். கொஞ்சம் சிவப்பா யிருந்தால், பூஸ்திதிகள் உண்டாகும். கொஞ்சம் வெண்மையாயிருந்தால், சாமானிய ஸ்திதி உண்டாகும். கறுப்பாயிருந்தால், ரோகியாவான். பச்சையா யிருந்தால், துராசாரனையும், பாவியாயும் இருப்பான். விசாலமாயிருந்தால், தனவந்தனவான். முனைகள் வக்கிரமாயிருந்தாலும் திரிசூலத்தைப்போல் கூராயிருந்தாலும் தரித்திரனவான். புழுத்துப்போயிருந்தால் துக்கியாவான்.

கால் விரல்கள்:—சிவப்பாயிருந்து மத்தியில் சந்தில்லாமல் ஒன்றேடொன்று சேர்த்து கூடோடு அழகாயிருந்தால், ராஜனவான். ஒன்றேடொன்று சேராமலிருந்தால், சாமான்னிய ஸ்திதி உண்டாயிருக்கும், கிழிந்தமாதிரியாக சன்னமாயிருந்தால் தரித்திரனவான், அடிவைக்கும்போது விரல்கள் சந்தில்லாமலிருந்தால் தரித்திரனவான். கட்டைவிரலைக்காட்டிலும் அடுத்தவிரல் நீளமாயிருந்தால் அநேக ஸ்திரீகளோடு போகம் அனுபவிப்பான். சுண்டுவிரல் மிருதுவாயிருந்தால் நல்ல பிரசித்தனவான், நீளமாயிருந்தால் தனிகனவான். கோணலாயாவது மேல்திரும்பியாவது உலர்ந்தாவது இருந்தால் துக்கியாவான்.

சோ. [illegible] சர்மா,
"அருள்[illegible]"
கொக்குவில், (இலங்கை.)

புறங்கால்:—ஆமை ஓட்டைப்போல் இருந்து கொஞ்சம் கூடாயிருந்தால், ராஜ்ய பரிபாலனமாவது லோக பூஜ்யதையாவது கிடைக்கும். வெகு சாதுர்யவானாயு மிருப்பான்.

கணுக்கால்:—எலும்புகள் தென்படாமலிருந்தால், பூபதியாவான். அவைகள் சமமாயிருந்தால் தனவந்தனாவான்.

குதிக்கால்:—பூச்செண்டைப்போல் மிருதுவாயும் உருண்டையாயு மிருந்தால், ராஜ்ய பரிபாலனமாவது விசேஷ சம்பத்தாவது கிடைக்கும்.

கண்டைக்கால்:—சிறுத்தும் உருண்டையாயும் இருந்து மயிர் மூடிக்கொண்டிருந்தால், ராஜனாவான். யானை துதிக்கையைப்போல் இருந்தால், தனவானாவான். நாயிக்கிருப்பது போலாவது நரிக்கிருப்பதுபோலாவது இருந்தால், தரித்திரனாவான். குட்டையாயிருப்பது சுபம்.

முழங்கால்:—பெரிதாய் இரண்டும் சமமாயிருந்து மாமிசம் மூடிக்கொண்டிருந்தால் பூபாலகன் ஆவான். பெரியவைகளாய் மாமிசமில்லாமலிருந்தால், தீர்க்காயுசுள்ளவனாயிருப்பான். சின்னவைகளாயிருந்தால், லோகபூஜ்யதை உண்டாகும். விசாலமாயிருந்தால், தரித்திரனாயிருப்பான் குழிகள்விழுந்திருந்தால் ஸ்திரீகளின் வலைக்குள் அகப்பட்டுக்கொள்வான்.

தொடைகள்:—யானைத் துதிக்கையைப் போலிருந்தால் பூபாலகனாவான். பெரியனவாயும், உயரமாயும் வட்டமாயும் மயிர்களில்லாமலிருந்தால் தனவானா யிருப்பான். மயிர்களிருந்து சன்னமாயிருந்தால் தரித்திரனாவான்.

சிசினம்:—சின்னதாயிருந்தால் தனவந்தனாயிருப்பான். பெரியதாயிருந்தால் பிள்ளைகள் இல்லாமல் போகும். சன்னமாயிருந்து குட்டையாயிருந்தால், ராஜனாவான். அகலமாயும் நீளமாயு மிருந்தால், தரித்திரனும் துஷ்டனுமாவான். இடப்பக்கம் சாய்வாயிருந்தால், துராத்மாவாவது தரித்திரனாவது ஆவான். அதிக நீளமாயிருந்தால் துக்கியும் தரித்திரனும் ஆவான். நேராயிருந்தால், சந்தான முடையவனாவான். கீழுக்குச்சாய்ந்திருந்தால், ஏழையாவான். மிருதுவாயிருந்தால் மூத்திரவியாதியினால் கண்டம். நரம்புகள் மூடியிருந்தால், அல்பசந்தானம். கொனையில் கீற்றுயிருந்தால் தனவான்களுடைய ஸ்திரீகளோடு

சம்போகம் கிடைக்கும். லிங்கம் சிவப்பாயிருந்தால், தனவந்தனாவான். வெண்மையாகயிருந்தால், தரித்திரனாவான்.

பீஜங்கள்:—இரண்டும் எல்லா விஷயத்திலும் சமமாயிருந்தால் அவன் ராஜனாவான். இரண்டும் ஒரேவிதமாயில்லாதவன் ராஜனாவான். அவை மேலுக்கு ஒட்டிக்கொண்டிருந்தால் அல்பாயுசு. கீழுக்கு நழுவி யிருந்தால் தீர்க்காயுசு, ஒன்றுமேலே யிருந்து இரண்டாவது நழுவியிருந்தால், பிரமேகத்துக்கு பாத்திரனாவான், புட்டையாவது உண்டாகும், கோணலாயிருந்தால் சேவகனாவான். தோல் மாத்திரம் முள்ளவைகளாய் இருந்தால் நபும்ஸகனாவான். ஒரு விஷண மாத்திரம இருக்கிறவனுக்கு நீர்கண்டம்.

சுக்கிலம்:—இரண்டு மூன்று தாரையாய் மிகவும் தாட்டியாய் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாய் விழுந்தால், ராஜாவாவான். சொட்டுச் சொட்டாய் நீர் தெளித்தமாதிரியாய் துளி துளியாக விழுந்தால், தரித்திரனாவான். ஒரே தாரையாய் சன்னமாய் விழுந்தால், புத்திமானும் ரூபவானுமான புத்திரனுடையவனா யிருப்பான். பெரிய தாரையாய் வெகு தாட்டியாக வந்தால், தனவந்தனாவான். அதிக இரைச்சலோடு வந்தால், சௌக்கியம் உண்டாகும். இரைச்சல் இல்லாமல் வந்தால், தரித்திரம் உண்டாகும். துவாரம் உலர்ந்திருந்தால், ஏழையும், குரூபியும் ஆவான்.

வீரியம்:—புஷ்பத்தைப்போல் வாசனை யுடைத்தானதாயும் ஸ்படிகத்தைப்போல் வெண்மையாயுமிருந்தால் ராஜனாவான். தேன் வாசனையையுடைத்தானதா யிருந்தால் தனவந்தனும் ஸ்திரீலோலனுமாவான். மீன் நாற்றம் அடித்தால், ஜாரனும், புத்திரவானுமாயிருப்பான். துர்க்கந்தமாயிருந்தாலும், கறுப்பாயிருந்தாலும், தரித்திரனாவான். மாமிச வாசனையடித்தால், மஹா போகியாவான். கள் வாசனையடித்தால், புத்திரவானையும், கர்மநிஷ்டனையும் இருப்பான். உப்புவாசனையானால், தரித்திரனாவான். நீராயிருந்தால் பெண் சந்தான முடையவனாவான். சீக்கிரத்தில் விழுந்தால் பூரணாயுசு உடையவனாவான். தாமதித்து விழுந்தால் அல்பாயுசுடையவனாவான்.

கால்கள்:—நீளமாயிருந்தால், சீக்கிரமாய் நடக்கிறவனாய் ராஜசன்மானத்தை யடைவான். குட்டையாயிருந்தால் தரித்திரனாவான். முழங்காலுக்குமேல் உயரமாயும்,

கீழே குட்டையாயு மிருப்பது நல்லது மிருதுவா யிருந்தால் வாகனபதவி, சக்கிரமிருந்தால் தேச சஞ்சாரி.

அரை:—பெரியதாயிருந்தால் தரித்திரனவான். மாமிச புஷ்டியாயிருந்தால், சுக ஜீவனம் செய்வான். இருக்க வேண்டியதற்கு பாதியேயிருந்தால், ரோகியாவான். தவளை யிடுப்பைப்போ லிருந்தால், பூபரிபாலனம் செய்வான்.

சூத்தாம்பட்டை:— சிம்மத்தினுடையது போலிருந்தால் ராஜனவான், குரங்கு பட்டையைப் போலாவது ஒட்டை பட்டையைப்போலாவது இருந்தால், தரித்திரம்.

அடிவயிறு:—சமானமாயிருந்தால், போகியாவான். பானையைப் போலிருந்தால், தரித்திரனவான்.

வயிறு:—எடுப்பாயிருந்தால், ராஜனவான். ஏத்தக் குறைச்சலாயிருந்தால், கபடியாவான். சமமாயிருந்தால் சுகஜீவனம் செய்வான். உள்ளுக்குப்போயிருந்தால், கஷ்ட ஜீவியாவான். பாம்பு வயிற்றைப் போலிருந்தால், தரித்திரனும் சாப்பாட்டு ராமனுமாவான். விசாலமாயிருந்தால், புத்திரவந்தனவான். சக்கிரமிருந்தால், மிருஷ்டான்னம் சாப்பிடுவான்.

நாபி:—விசாலமாய் சுற்றிலும் எடுப்பாயிருந்தால், போகியாவான். ஒரு முடிப்புநடுவிலிருந்தாலும், எடுப்பாக இருந்தாலும், தரித்திரனய் வயிற்றுவலியால் அவஸ்தை படுவான். வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்கு சுழி திரும்பியிருந்தால் மோசக்காரனவான். இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கு சுழி திரும்பியிருந்தால் நல்ல விஷயத்தில் பிரவர்த்தி யுள்ளவனும், கியாபகசக்தியுடையவனும் இருப்பான். இரண்டுபக்கத்திலும் குறுக்கே வியாபித்திருந்தால் தீர்க்காயுசுள்ளவனவான், உயரமாய் மேலுக்கு வியாபித்திருத்தால், தனவானவான். உயரமாய் கீழ்ப்பக்கத்தில் இறங்கியிருந்தால், பசு விருத்தி உண்டாகும். மயிர் இருந்தால், விசேஷ சந்தானங்கள் உண்டாகும். தாமரை இதழைப்போலிருந்து வலது பக்கத்தில் திரும்பியிருக்கிற சுழி யிருந்தால், ராஜனவான்.

மடிப்புகள்:— ஒன்றுமில்லாமலிருந்தால் ராஜனவான். ஒன்றிருந்தால், ஆயுதத்தினல் மரணம் இரண்டிருந்தால், ஸ்திரி லோலன், மூன்றிருந்தால், பாண்டித்தியமும்,

படிப்பு சொல்லுவதனால் சுகஜீவனமும், நான்கிருந்தால், புத்திரவானையும் தனிகனையும் பண்டிதனையும் இருப்பான். மடிப்புகள், கோணலாயிருத்தால், துஷ்டனையும் குலஸ்திரீயை கெடுக்கிறவனையு மிருப்பான். கோணல் இல்லாமலிருந்தால், மரியாதையாய் சுகஜீவனம் செய்வான் முனைகள் கோணலாயிருந்தால் சந்தோஷி யாவான், பக்கங்களுக்குத் திரும்பி யிருந்தால் தரித்திரனாவான்.

பக்கங்கள்:—கொழுத்து மிருதுவாய் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு சுழியுள்ள வர்களா யிருந்தால், ராஜனாவான். சுழி யில்லாமல் கொழுத்திருந்தால் தனவந்தனாவான் சதை யில்லாமலிருந்தால், தரித்திரனாவான். சக்கிரங்களிருந்தால், நிலத்திலே விழுந்திருக்கும்படியான தரித்திரனாவான்.

முலைகள்:—கோணலாய் ஒன்றேடொன்று நெருங்கியிருந்தால் அல்பாயுகள்ளவனாவான். மத்திய பாகம் விசாலமாயிருந்தால், தனவந்தனாவான். விம்மி மேலுக்குத் தோன்றினால் புத்திர ஹீனனாவான்.

முலை காம்பு:—எடுப்பா யிராமலிருந்தால் ஜனசம்மானத்தை அடைவான். இரண்டும் சமானமாயிராமலிருந்தால், தரித்திரனாவான். பெரியதாயிருந்து உப்பியிருந்தாலும் உள்ளடங்கியிருந்தாலும் மஹாதனிகனாவது, ராஜனாவதாகி புத்திரசோகத்தையடைவான். சமானமாயிருந்தால் சுகி விசாலமாயிருந்தால், சேவகனாவான்.

மார்:—எடுப்பாயும் விசாலமாயும் கெட்டியாயும் புஷ்டியாயும் இருந்தால், ராஜனாவான் உள்ளடங்கி சன்னமாயும், மிருதுவாயும், துர்ப்பலமாயும் இருந்து முரட்டு மயிரோடு கூடியிருந்தால். பரம துர்மார்க்கனாவான், தட்டையாயிருந்தால் தனவந்தனாவான் விசாலமாயிருந்தால் பிரசித்தனாவான். நெருங்கி யிருந்தால், தரித்திரனாவான். மயிர் ஒன்றும் இல்லாமலிருந்தால் கபடியாவது சமர்த்தனையாவது இருப்பான் மேடும் பள்ளமா யிருந்தால், தரித்திரனாவான் எலும்புகள் காணப்பட்டு மேடும் பள்ளமா யிருந்தால் துக்கியாவான் சிவப்பாயிருந்தால் போகியாவான், கறுப்பாயிருந்தால், தரித்திரனாவான்.

தோள்பட்டை:—சமானமாயில்லாம லிருந்தால் துர்மார்க்கனாவான். எடுப்பாயிருந்தால், கீர்த்திவானாவான் உப்பியிருந்தால், தரித்திரனாவான். பெரியதாயிருந்தால் தனவானாவான்.

**தோள்கள்:**—விசாலமாய் சதைபிடித்து ஒன்றைப்போலொன்றிருந்தால், தனவந்தனும் சுகபோகியாயுமாவான் சதை யில்லாமல் சிறியதாய் மயிர் முளைத்திருந்தால், தரித்திரனவான். யானை கும்பஸ்தலங்களைப்போல் உயர்ந்து சதையில்லாமல் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு மடிப்புகளும் மயிரும் இருந்தால், பூமியை பரிபாலனம் செய்வான். பள்ளம் விழுந்து மயிர்கள் விசேஷமாய் இராமலிருந்தால், தரித்திரனாய் துக்கத்திற்கு பாத்திரனவான் குழிகள் விழுந்திருந்து இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு சுழிகள் இருந்தால், காவடியைத் தூக்கிஜீவனம் செய்வான்.

**கக்ஷங்கள்:**—வேர்வைவிடாமல் விசாலமாய் உயர்ந்து சுகந்தமாயும், விசேஷ மயிர்களுள்ளனவாயும் இருந்து இரண்டும் சமானமாயிருந்தால், ராஜாவாயாவது, மகா தன சம்பத்துள்ளவனாயாவது ஆவான் இரண்டும் சமானமாயிருந்தால் சுகியும், ஏத்தக்குறைச்சலா யிருந்தால் துக்கியும் தரித்திரனுமாவான். விசாலமாயிருந்தால் தனவானவான். நெருக்கமாய் குழிவிழுந்திருந்தால் தரித்திரனவான்.

**முதுகு:**—கொழுத்து எலும்புகள் காணப்படாமல் மயிர்களிருந்தால், தனவந்தனும் போகியுமாவான். மாமிசமில்லாமல் எலும்புகள் காணப்பட்டால், தரித்திரனும் துக்கியும் ஆவான். குட்டையாயிருந்தால், தணிகனவான், சக்கிரமிருந்தால் மூட்டையெடுத்து ஜீவனம் செய்வான்.

**கைகள்:**—குண்டாயிருந்து, யானைத்துதிக்கையைப்போல் வரவர சிறுத்து நீளமாய் முழங்கால் வரையிலும்பட்டு இரண்டும் சமானமாயிருந்தால், ராஜனவான் இதில் சில லக்ஷணங்கள் குறைந்திருந்தால், தனவானவான். குட்டையாயிருந்து மயிர்கள் நிறைந்திருந்தால், தரித்திரனும் கஷ்ட ஜீவனமுள்ளவனுமாவான் ஏத்தக்குறைச்சலாயிருந்தால் பாபியாவான் கெட்டியாயிருந்தால் தனவானவான் குரங்குகைகளைப்போலிருந்தால், தனவானையும், புலிகளைப்போ லிருந்தால் குரூரனயும் இருப்பான்.

**முழங்கைகளுக்கு:**—முழங்காலைப்பற்றி சொல்லியிருக்கப்பட்ட லக்ஷணங்களையே பார்த்துக்கொள்ள வேண்டியது.

**மணிக்கட்டுகள்:**—சதைக்குள் மறைந்து கெட்டியாயும் இரண்டும் ஒரேமாதிரியாயு மிருந்தால் ராஜனவான் முடிகள்

காணப்பட்டாலும், தொனி கேழ்க்கப்படாலும் தரித்திரனு வான் தளத்தலாய் ஆடிக்கொண்டிருந்தால்,ஆயுதங்களினுல் கண்டம். மணிக்கட்டுகளில் இரண்டு ரேகைகளிருந்தால் ஸ்திரீலோலனுவான். நாலு ரேகைகளிருந்தால் பிரபுத்வம் கிடைக்கும். இவைகளுக்கு கங்கண ரேகைகளென்று பெயர்.

உள்ளங்கை:—விசாலமாய் காந்தியோடு விசேஷ ரேகைகள் இல்லாமலிருந்தால், தீர்க்காயுசுள்ளவனுயும் போகியுமாவான். சிவப்பா யிருந்தால், தனவானுவான். பச்சையாயிருந்தால், ஸ்திரீ லோலனுவான். கலியாண முருக்கம்பூவைப்போல் சிவப்பாயிருந்து நான்கு மூலையும் சமானமான உயரத்தோடு தட்டையா யிருந்தால், பூபாலகனுவான். மத்தியில் பள்ளமாயிருந்தால் தரித்திரனு வான் பள்ளமாயும் உருண்டையாயும் இருந்தால், தன வானுவான். கெட்டியாயிருந்தால் ஸ்திரீ லோலனுவான். மெதுவாயிருந்தால், தரித்திரனுவான் இரண்டும் ஒரே மாதிரியாய் இருந்தால் பாபியும் தரித்திரனுமாவான் உப்பி யிருந்தால் தர்மிஷ்டனுவான். உலர்ந்திருந்தால் தரித்திர னுவான்.

சுண்டுவிரலுக்கு:—கொஞ்சம் தூரத்திலிருக்கும் பெரியரே கைக்கு ஆயுசுரேகை என்றுபெயர். அது காட்டுவிரல் வரையிலும் வியாபித்திருந்தால் அந்த புருஷனுக்கு வயது நூறு வருஷம். அது எந்த விரலின் கீழ் முடிகிறதோ அத்தனை இருபத்தைந்து வருஷங்களென்று ஆயுசைக் கணக்கிட வேண்டியது. ஆயுசுரேகை பிளந்தாவது, சித றியாவது யிருந்தாலும், குறுக்கே அனேக கீறுகளிருந் தாலும் அனேக கண்டங்கள் உண்டாகும்.

ஆயுள்ரேகையின்:—கீழ் இருக்கும் பெரிய ரேகைக்கு ஸ்திரீரேகை என்று பெயர். கட்டைவிரலின்கீழ் மணிக் கட்டு சமீபத்தில் உண்டாகி மேலுக்குப்போகும் ரேகைக்கு புருஷரேகை என்றுபெயர். இந்த இரண்டு ரேகைகளும் பெரு விரலுக்கும் சுட்டுவிரலுக்கும் மத்தியில் கலந்திருக் கும். அப்படி சேர்ந்திருந்தால் தம்பதிகளுக்கு பரஸ்பரம் பிரியம் உண்டாயிருக்கும். சேராமலிருந்தால் வியோகம் உண்டாகும். புருஷ ரேகை அதிகமாய் நீண்டிருந்தால் புருஷ சந்ததியும், ஸ்திரீரேகை அதிகமாய் போயிருந் தால் ஸ்திரீ சந்ததியும் அதிகமாகும். இந்த ரேகைகள் சேராமலே யிருந்தால் விவாகமே ஆகமாட்டாது. ஆனு லும் உபயோகமில்லை. இவை இரண்டும் சேர்த்து எது வும் மேலே போகாமலிருந்தால் சந்தானம் உண்டாக மாட்டாடாது, உண்டானுலும் நிற்காது.

ஆயுசு ரேகையும் ஸ்திரீ புருஷ ரேகைகளும்:—இந்த மூன்று மாத்திரமே உள்ளங்கையி லிருந்தால் சம்பத்து உண்டாகும். கோணல் கோணலாய் அனேக ரேகைகள் இருந்தால், துரதிஷ்டனும் துக்கியுமாவான். முழுவதிலும் ரேகைகளே யில்லாமல் இருந்தால், தரித்திரனுவான்.

மணிகட்டினுடைய மத்தியபாகத்தில் உண்டாகிஸ்திரீ புருஷரேகைகளுக்குமத்தியிலிருந்து நீளமாய்ப்போய்ஸ்திரீ ஆயுசு ரேகைகளின்பேரில் குறுக்கேபோகும் ரேகைகளுக்கு தனரேகையென்று பெயர். அது மேல்சொன்ன பிரகாரம் தெளிவாயிருந்தால் ஜனனம் முதல் ஸ்ரீமானய் ஏராளமாய் தனம் சம்பாதிப்பான். அது முதலில் வளைந்து புருஷ ரேகையோடுகலந்திருந்தால், தனமெல்லாம் ஸ்வயார்ஜிதமென்று தெரிந்துகொள்ளவேண்டியது. தனரேகை மத்தியில் கத்திரிரேகைகள் என்றால் குறுக்கே ஓடும் ரேகைகள் இருந்தால், தனம் அப்போதுக்கப்போது திருடர்களுடைய பங்காகும் அல்லது செலவாய் விடும். மூன்று கத்தரி ரேகைகள் இருந்தால், தரித்திரனுவான். தனரேகை துண்டு துண்டாயிருந்தால், அப்போதுக்கப்போது தனம் சம்பாதித்துக் கொண்டிருப்பான், தனரேகையே இல்லாமலிருந்தால் ஜீவனம் நடப்பது அசாத்தியம் உபாயமாயிருந்தால், சாமானியமான வரும்படியோடு ஜீவனம் செய்வான்.

ஆயுசுரேகைக்குமேல்:—தனரேகைக்கு வலது பக்கத்தில் நீளமாயிருக்கும் ரேகை வித்தியா ரேகையென்று சொல்லப்படும். இது எவ்வளவு பிரபலமா யிருக்குமோ அவ்வளவு வித்தியா வந்தனுவான்.

உள்ளங்கையின்:—ஓரத்தில் சுண்டுவிரலின் கீழ்பாகத்திற்கும் ஆயுசு ரேகைக்கு மத்தியிலிருக்கும் குறுக்கு ரேகைகளுக்கு பத்தினிரேகைகளென்று பெயர். இவைகள் ஒன்றுக் கதிகமா யிருந்தால், அத்தனை சம்சாரங்களாவது ஒரு சம்சாரமும் மற்றவர்கள் வேசியர்களாவது இருப்பார்கள்.

யானை குதிரை, பல்லக்கு குடை கிரீடம், சங்கம், தாமரை, கொடி, இந்த ரேகைகள் உள்ளங்கையிலிருந்தால் பிரபு ஆவான் சூரிய ரேகையாவது சந்திர ரேகையாவது இருந்தபக்ஷத்தில் தெய்வபக்தி உண்டாகி லோக பூஜ்யவானுவான். மீன் ரேகையுள்ளவன் மகாதனவானய் அநேகர்களுக்கு அன்னதானம் செய்து புண்ணியவானுயும், புத்திர வந்தனுயுமிருப்பான். தராசு ரேகையுள்ளவன்

பாக்கிய வந்தனவான். விரல்களில் சக்கிரங்களிருந்தால் போகியாவான். இரண்டு சக்கிரங்களிருந்தால் ராஜ பூஜ்ய னவான். மூன்று சக்கிரங்களிருந்தால் லோக சஞ்சாரியா வான். நான்கிருந்தால் பண்டிதனவான்.

புருஷனுக்கு:—வலது கையை பரிக்ஷை செய்து அதி லிருக்கும் பலாபலன்களை நிர்ணயம் செய்யவேண்டியது இடது கையிலிருக்கும் பலாபலன்களை நிர்ணயம் செய்ய வேண்டியது இடது கையிலிருக்கும் ரேகைகளைப்பார்த்து அகப்படும் சுபா சுபங்கள் அவனுடைய சம்சாரத்திற்கு சபமந்தப்பட்டிருக்கும்.

கைவிரல்கள்:—நீளமாயிருந்தால் போகியாவான். தோல் மடிப்புகள் இல்லாமலிருந்தால், ஜனரஞ்சகன் ஆவான். சின்னதா யிருந்தால், புத்திசாலியாவான், அகலமாயிருந் தால் இதராளுக்கு ஊழியம் செய்வான். கனமாயிருந்தால், தரித்திரனவான். மேலுக்கு வளைந்திருந்தால், ஆயுதங்க ளால் மரணம் அடைவான். அல்லது தரித்திரனவான். அடியில் கொழுத்து. விரித்தபோது விரல்களின் மத்தியில் சந்துகள் யில்லாமலிருந்தால் தனவானவான். சந்துகளி ருந்தால் தனம்செலவாய்விடும்.

கை நகங்கள்:—மிருதுவாய் சிவப்பாயிருந்தால் சம்பத்து உண்டாகும். வெண்மையா யிருந்தால் தரித்திரனவான்.

உள்ளங்கையில்:—கட்டை விரல் கணுவண்டை அரிசி மணியைப்போல் அல்லது கோதுமை மணியைப்போல், இரண்டு கோடுகள் கூடின ரேகைக்கு யவரேகை என்று பெயர் அந்த ரேகை நன்ருய் காணப்பட்டால் அவன் ஆடுமாடுகளையும் தனதானிய சம்பத்துகளையும் உடைய வனய் மகா போகங்களை அனுபவிப்பான். கட்டை விரல் நுனியானது. சுட்டு விரலின் மத்திய கணுவு வரைக்கும் இருந்தால், சிற்ப சாஸ்திரத்திலாவது இரணவயித் தியத்திலாவது அல்லது நன்ருய் எழுதுவதிலாவது பெயர்பெற்றவனய் இருப்பான். கட்டைவிரலின் வெளி ஓரத்தில் அதனுடைய இரண்டு கணுவுகளுக்கு மத்தியில் இருக்கும் கோடுகள் ஸந்தானத்தைக் காட்டும், அந்தக் கோடுகள் கிளையோடு இருந்தால், பெண் என்றும், பின் னல்போல் இருந்தால் ஆண் என்றும் தெரிந்து கொள்ள வேண்டியது. நீண்டு இருந்தால், தீர்க்காயுசு என்றும், குறுகி இருந்தால் அல்பாயுசுவென்றும்,

அறியவேண்டியது. ரேகைகள் இல்லாமல் இருந்தால் சந்தானம் கிடையாது.

சுட்டு விரலின்:—கீழ், குறுக்காய் இரண்டு சின்னக்கோடுகள் இருந்தால் காரியசித்தியாகும். நடுவிரலின் கீழ், அப்படிப்பட்டரேகைகள் இருக்குமாயின், தனமும், ஸ்திரீ சுகமும், சந்தானமும் போகமும் உண்டாகும். மோதிர விரல், அல்லது 4-வது விரலில் கீழ் அப்படிப்பட்ட ரேகைகள் இருக்குமாயின் பண்டிதனயிருப்பான். சுண்டு விரலின்கீழ் இருந்தால் பாலியத்தில் விளையாடி சுகித்திருப்பான்.

கழுத்து:—சங்கம்போல் இருந்தால் கீர்த்தியாவது, அல்லது பிரபுத்வமாவது அடைவான். மேலே ஊர்த்துவ ரேகைகள் இருக்குமாயின் தர்மிஷ்டனுவான். ஆரம்போல் கழுத்தை ரேகைகள் சுற்றி இருந்தால், தனவானுய் அநேககுடும்பங்களைக்காப்பாற்றுவான். கழுத்து உயர்ந்து, வளைந்து இருந்தால் பேருண்டி தின்பான், குறுகி இருந்தாலும் பின் புறம் மயிர் இல்லாமல் போனலும், திரவியவானுகி இருப்பான். கழுத்துப் பெருத்து இருக்குமாயின், சாமானியனுயிருப்பான். குறுங்கழுத்தன், கோணக்கழுத்தன், இவர்கள் தரித்திரர்கள். கொக்கைப்போல் நீண்ட கழுத்துடையவன், திருடர்களால் பிராணஹானி அடைவான். செம்மறி ஆட்டுக்கடாபோல் கழுத்துடையவன் ஆயுதத்தினல் மரணமடைவான்.

மோவாய்க்கட்டை:—நீண்டு, சிறுத்திருந்தால், தரித்திரனுயிருப்பான், நன்ருய் சதை பிடித்திருந்தால் தனவானுக இருப்பான், மீசைக்கு முன்னமே தாடி முளைத்துவந்தால், தீர்க்காயுசு, அந்த தாடிசிவப்பாய், ஓரிடத்தில் நெருங்கியும் மற்ருெருஇடத்தில் கொஞ்சமாயும் இருந்தால், கஷ்ட ஜீவனம் பண்ணுவான். மெத்தக் கறுத்திருந்தால், பாக்கியசாலியாயும், சௌக்கியமாயும் இருப்பான்.

மீசை-தாடி:—முளைப்பதற்கு முன்னமே முளைத்து வந்தால் அல்பாயுசு நெருங்கியும், தடித்து மிருந்தால், துன்மார்க்கன். சிவப்பு நிறமாயிருந்தால், பராக்கிரமசாலியாவான். நீண்டும் கறுத்தும் இருந்தால் இராஜனுவான்.

வாய்:—சிறியதானல், சுகியும் தனிகனுமாவான். வாய் அகலமானல், பேருண்டி யுண்பவனும், தெத்து வாயனுமாய் தூஷித்துக்கொண்டு இருப்பான், சிவந்திருந்தால்

சுகியாவான், வெளுத்தாவது கறுத்தாவது உலர்ந்தாவது இருக்குமாயின் தரித்திரன்.

உதடுகள்:—மிகச்சிறுத்தவையாயின்ஏழைவெடித்தாவது வளைந்தாவது ஏற்றக் குறைச்சலாயாவது உலர்ந்தாவது கறுத்தாவது விகாரமான நிறமாயாவது இருந்தால், அதிக தரித்திரன். கீழ் உதடுசிவந்து கோணல் இல்லாமல் இருந்தால் இராஜனாவான் அதிக பெருத்திருந்தால் பயங்காளியாயும், சபலசித்த முடையவனாயு மிருப்பான்.

பற்கள்:—பிரகாசமாயும், தடித்தும், நுனி கூர்மையாயும் நேர் ஒழுங்காயும், வரிசை தவறாமலும், இருந்தால், தனவானாய் சுக ஜீவனம் பண்ணுவான் மிகவும் எடுப்பாயாவது பள்ளமாயாவது சந்து விட்டாவதுசிறியது பெரியதாயாவது இருந்தால் தரித்திரன், அல்லது பாபி தந்தவரிசை தவறினால் தரித்திரன் ஒன்றின்மேல் ஒன்று முளைத்திருந்தால் துக்கத்தை அனுபவிப்பான்.

நாக்கு:—சிவந்தும், குறுகியும், மிருதுவாயும் இருந்தால், தனத்தையும், போகத்தையும் அனுபவிப்பான். கறுத்தாவது வெளுத்தாவதிருந்து உலர்ந்தும் இருக்குமாயின் தரித்திரன்.

மூக்கு:—கிளியின் மூக்குப்போலிருக்குமாயின் போகத்தையனுபவிப்பான். உலர்ந்திருந்தால் பூரணாயுசு கத்தி வெட்டுப்போல் கோடுகள் இருந்தால், குல ஸ்திரீகளைக் கெடுப்பான். நீண்டிருந்தால் தனவந்தனாவான், வளைந்திருந்தால், திருடன், தட்டையானால், ஸ்திரீயினால் கொல்லப்படுவான், திருடன் மூக்குப்போல் நுனி கூராயிருந்தால் தனவந்தன், அந்தநுனி வலது பக்கம் வளைந்திருந்தால், கொடூரனாயும், பெருண்டி யுண்பவனாயுமிருப்பான்.

கண்கள்:—தாமரை இதழைப் போலிருந்தால் தனவானாவான். அல்லிபோலிருந்தால் பண்டிதனாயிருப்பான். விசாலமாயின் மந்திரியாவான். தேன்வர்ணம் போலானால் மிகுந்த தனவந்தனாவான். பூனைக்கண்ணனன், பாபி, கலைமான் உடும்பு, பேடைகை, இவைகளின் கண்போல் இருந்தால் திருடன், யானைக்கண் போலானால் ராஜன். வளைந்த பாவையுடையவன் திருடன் தைரிய திருஷ்டியுள்ளவன் தனவான். குழிக்கண் சிவந்திருந்தால், சம்பத்தும், அபிவிருத்தியு முடையவனாவான். கண் விழிகள் கெச்சக்காய்போல் இருந்தால் தரித்திரன் ரெப்பைகளில் மயிர் இல்லையானால் தரித்திரன்.

புருவங்களில்:—மயிரில்லாமலிருந்தால் தரித்திரனவான். அவைகள் எடுப்பாயிருந்தும்,அகலமாயில்லாவிட்டால் அல்பாயுசு, எடுப்பாயும், விசாலமாயும் இருந்தால் தீர்க்காயுசோடு சுகமாய் இருப்பான். இரண்டு புருவங்களும் ஒரே விதமாயிராவிட்டால் தரித்திரன். பிறையைப்போல் வளைந்து யிருப்பவன் அதிக சம்பத்துடையவன். நீண்டு ஒன்றோடொன்று சேராமலிருந்தால் தனவானவான். அங்கங்கே மயிர்கள் இல்லாமலிருந்தால், தரித்திரனாய் துக்கத்தை யனுபவிப்பான். நடுவில் வளைந்திருந்தால் குல ஸ்திரீகளைக் கெடுப்பான்.

முகம்:—அழகாயும், சிறுவாயுள்ளதாயும், மிருதுவாயும் இருந்தால், இராஜனவான். விசாலமாயிருந்தால் ஞானியாயும் சுகியாயும் இருப்பான். ஸ்திரீமுகம்போல் இருக்குமாயின் புத்திரவந்தனவான். வட்டமானல் மோசக்காரன். உயர்ந்திருந்தால் ஏழை. விசாலமாயும், நான்கு புறமும் சமமாயிருந்தால், மோசக்காரன். சொட்டையாயும் பள்ளமாயும் இருந்தால் சந்ததி, இல்லாதவன், பூர்ணமாயும் சொகுசாயும் இருந்தால், சுகி. நெற்றி சமமானல், தரித்திரன். முத்துச் சிப்பிபோல் விசாலமாயின், வேதாந்தியாயும், பண்டிதனயு மிருப்பான். நரம்புகளால் சூழப்பட்டிருந்தால் கொடூரன். அந்த நரம்புகள், தெளிவாயும், முக்கோணமாயும் இருந்தால், தனவந்தனவான். நெற்றி, பள்ளமானல் கெட்ட காரியங்களைச் செய்வான். குறுகி இருந்தால் மூடனயும், தரித்திரனயும் இருப்பான், அர்த்த சந்திரனைப்போலானல் தனவான்.

தாடைகள்:—சொட்டை யில்லையானல் போகி, புஷ்டியாய் பருத்திருந்தால், மந்திரியாவான். சிவப்பானல், தனவந்தனவான். கண்ணடிபோல் பளபளப்புள்ளவன், தனமும் சந்தானமும் அடைவான். தாடை நீண்டிருந்தால், சுகியும் தனவானுமாவான்.

காது:—மாம்சம் இல்லாமல் இலைபோல் இருந்தால், கஷ்டமான மரணமுண்டாகும். சதைபிடித்து, தொங்கிக் கொண்டிருந்தால் தீர்க்காயுசா யிருப்பான், நரம்புகள் தெரியுமாயின், துராத்துமா, கிண்ணிபோலானல், சுகஜீவன முண்டாகும் சங்கைப்போல் நுனியிருந்தால் ராசனவான். சிறியதாயின் லோபி, விசாலமானல், தனவான். மயிர் நிறைந்திருந்தால் ஆரோக்கியமும், தீர்க்காயுசுமுடையவன். கீழ்க்காது விசாலமாய் இருப்பவன் தனிகன்.

கன்னப்பொரிகள்:—எடுப்பாயும் அகலமாயு மிருந்தால் தனவானவான். பள்ளமாயிருந்தால்சந்தானமும்திரவியமும் கிடைக்கும்.

சிரசு:—வட்டமாயின் பசு விருத்தியுண்டு. குடைபோல் விசாலமாயின் ராஜதிசை, தட்டையானல் பாலியத்திலேயே தாய் தந்தையர்கள் மரணம் அடைவார்கள், உயர்ந்திருந்தால். தீர்க்காயுசு பானை போலானல் தீர்க்க ஆலோசனை யுடையவன். இரண்டுதலை சேர்ந்தாற்போலிருந்தால், குரூரனயும், ஏழையாயும் இருப்பான் அனேக நரம்புகளும் வீக்கங்களும் இருந்தால், தரித்திரன்.

தலைமயிர்:—துவாரத்துக்கு ஒன்று இருந்து, பிரகாசமாயும், கறுப்பாயும், நுனிவெடிக்காமலும், அதிகமாயில்லாமலும், மிருதுவாயுமிருந்தால் ராஜனய் எப்போதும் சுகமாயிருப்பான். துவாரம் ஒன்றுக்கு அனேகம் முளைத்து எல்லாம் சமானமா யில்லாமல் ஏற்றக் குறைச்சலாயாவது கோதுமை நிறமாயாவது தடித்தாவது நுனிபிளந்தாவது காந்தி யில்லாமலாவது மிருதியாய்ச் சுருட்டிக்கொண்டாவ திருந்தாலும், விசேஷ மயிரிருந்தாலும், தரித்திரனவான் துவாரம் ஒன்றுக்கு, இருண்டுமயிர் வீதமிருந்தால் தனிகன், மூன்ருனல் தரித்திரன். நான்கானல் துக்கம் அடைவான்.

சரீரம்:— பளபளப்பாயின் தனவான். மிருதுவாயின் சுகியாய் அபிவிருத்தி அடைவான். மெல்லியதாயிருந்தால், தெளிவு உள்ளவனயும் பலசாலி யாயும் இருப்பான்.

தேக சாயை:—பளபளப்பா யிருந்தால் சுகியும் தனவானுமாவான். வெளுத்துப் பிரகாசமாயாவது, பசுமையாய் ரம்மியமாயாவது, இருந்தால், சுகமும் கரியசித்தியு முடையவனவான். கண் சிதறும்படியாய் பொன் நெருப்பு தாமரைப்பூ நிறமாயாவது இருந்தால், பலவந்தனயும் திடகாத்திரனயும் தைரியசாலியாயும் இருப்பான். அழுக்காயும், கறுப்பாயும் அசங்கியமாயும், அருவருப்பாயுமிருந்தால் அல்பாயுசுள்ளவன், தரித்திரன், ரோகி, நிர்ப்பாக்கியன் ஆவான். கண்ணடிபோல் தேகமுடையவன் கௌரவமடைவான்.

புருஷ லக்ஷணம் முற்றிற்று.

# புருஷ சாமுத்திரிகம்

புருஷனல் ஜந்மாந்திரத்தில் செய்யப்பட்டிருந்த நல்வினை தீவினைகள் எந்த அடையாளத்தினல் காணப்படுகின்றனவோ அவை லக்ஷணமெனப்படும்.

லக்ஷணம் பாஹ்யமென்றும் ஆந்திரமென்றும் இருவகைப்படும்

வர்ணம் ஸ்வரம் இவைமுதலாக உடைய லக்ஷணமானது பாஹ்யமாகும், என்ருல், வெளியிலுள்ளது.

பலம் ஸ்வபாவம் இவை முதலாக உடைய லக்ஷணமானது ஆந்திரமாகும், என்ருல் உள்ளடங்கியது.

புருஷர்களுக்குச் சரீரலக்ஷணம்—சுழி, நடை, காந்தி, ஸ்வரம், வர்ணம், கந்தம், ஸத்வம் என்று இவ்வெட்டும் முக்கியமானவை.

புருஷருடைய சரீரலக்ஷணம் அறிகின்ற முக்கியவிதம் எவ்வாறெனில்:—

உள்ளங்கால், அதன் ரேகைகள், பெருவிரல், மற்ற விரல்கள், நகம், புறங்கால், கணுக்கால், குதிக்கால், கீழ்க்கால், முழங்கால், மயிர், தொடை, இடுப்பு, புருஷ்டம், குதம் பீஜம், ஆண்குறி, சிஸ்னத்தின் முனை, சுக்கிலம், சிறுநீர் அல்லது மூத்திரம், நாபியின் கீழ்ப்புறம், நாபி, குக்ஷி இரண்டுபக்கங்கள், வயிறு, இடை, சதைமடிப்பு, இதயம், மார்பு முலைநுனிகள், தோள்சந்திகள், தோள், தோள்சிகரம், அக்குள், புஜம், கை, மணிக்கட்டு, புறங்கை, உள்ளங்கை, அதின் ரேகைகள், பெருவிரல், மற்ற விரல்கள், நகம், முதுகு, பிடரி, கழுத்து, மோவாக்கட்டை, மீசை, தவடை, கன்னம், முகம், உதடு, பல், நாவு, தவடையி னுட்புறம், உள்நா, மூக்கு, தும்மல், கண், இமை மயிர், இமைகொட்டுதல், அழுகைமுகம், புருவம், நெற்றி, செவி, நெற்றியின் ரேகைகள், தலை, தலைமயிர், என்றிவ்விதமாக முக்கியமானதும், முக்கிய மல்லாததும் ஆகிய அங்கங்கள் இவையென்று அறியக்கடவன:

புருஷருக்கமைந்த இலக்ஷணங்கள் பலவாயினும், அவற்றுள் சிறந்தவை முப்பத்திரண்டாம். அவையாவன:—

ஐந்து இடம் நீண்டும், ஐந்து மிருதுவாயும், ஆறு உயர்ந்தும், ஏழு சிவந்தும், மூன்று விசாலமாயும், மூன்று குறுகியும், மூன்று தாழ்ந்தும் இருக்கவேண்டும்.

நீண்டு இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:— கண், கை, கதுப்பு, முழங்கால், மூக்கு, இவைகளாம். மிருதுவாய் இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன,— மயிர், விரல், நகம், தோள், பல் இவைகளாம். உயர்ந்து இருக்கவேண்டிய ஆறு இடங்களாவன,— நெற்றி, தோள், வயிறு, அக்குள், மார்பு, புறங்கை இவைகளாம், சிவந்திருக்கவேண்டிய ஏழிடங்களாவன,—கடைக்கண், உள்ளங்கை நகம், வாய், ஆண்குறி உள்ளங்கால், உதடுஇவைகளாம், விசாலமாய் இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன,—மார்பு பீஜங்கள்,இவைகளாம்.குறுகிஇருக்கவேண்டிய மூன்றிடங்களாவன,—கழுத்து,முழங்காலின் கீழ், ஆண்குறி இவைகளாம், தாழந் திருக்கவேண்டிய மூன்றிடங்களாவன,—நடுமார்பு, நெற்றியின் கீழ்ப்பாதி, உந்தி இவைகளாம், இந்த இலக்ஷணங்கள் சிறிதேனுங் குறைவின்றி அமையப்பெற்றவன் இராஜனாவான்.

மற்றபடிச் சாதாரணமாய் அவரவருக்குரிய விலக்ஷணங்களையும், அவற்றின் பலன்களையும் பின் விவரிப்பதனாலறிக.

தலை:—யானையின் கும்பஸ்தலம், விரிந்தகுடை, மங்கையின் கொங்கை இவைபோன்றிருந்தால், அரசு அல்லது இராஜரீகம், வட்டமாகப் பருத்திருந்தால், பசு விருத்தி வட்டமாகச் சிறுத்திருந்தால், அழகு, செல்வம், மண்டை ஓடு ஒருபக்கத்திற் கொருபக்கம் ஒவ்வாதிருந்தால், தரித்திரம். நீண்டும், எலும்பு பருத்துமிருந்தால், தீர்க்காயுசு, தட்டையாயிருந்தால், துக்கம் தாய்தந்தை மரணம். இரட்டைத்தலையாயிருந்தால், தனமில்லாமை, பாபபுத்தி. மீன் தலையை யொத்திருந்தால், மிகுந்ததுக்கம். பானைபோன்றிருந்தால், அதர்மத்தில் பிரியம். அதிகமாக வணங்கிருந்தால் பரநிந்தை.

தலைமயிர்:— பருத்துக்கறுத்திருந்தால், செல்வம். பருத்துச் சிவந்திருந்தால், வறுமை. யானைமயிர் போன்றுருந்தால், நோய், செல்வம், நெருங்கிய மயிரிருந்தால், தீர்க்காயுசு. சிறுத்துங் சிவந்திருந்தால், அதிககாமம். சுருண்டமயிரிருந்தால், விகாரம், சொற்பசெலவு. மிகவும் நீண்டமயிருந்தால் அதிகபழிக்குரிமை. நுனியில் பிளவாமல்

மழமழப்பாய்க் கறுத்து மிருதுவாகிச் சரியாக அதிக நீண்டு, வெகு அலையையொத்த மடிப்புகளைப் பெற்றிருந்தால் இராஜரீகம் குறுகி மழமழப்பில்லாமல் பிளவுற்ற நுனியுள்ளதாயும் பொன்னிறமாய் ஒன்றோ டொன்று சரியாகாமல் அதிக கோணியும், நீண்டும், ஜடைப்பற்றியும், விலகியுமிருந்தால், தரித்திரம்.

தலையின் சுழி:—தலைமத்தியில் ஒருசுழி இருந்தால் மிகுதியான செல்வம். இடத்தில் ஒருசுழி இருந்தால், வறுமை. இரண்டுசுழி இடம் புரியாதிருந்தால், ஆயுள் பரியந்தம் வறுமை. இடதுபுறத்தில் வலஞ்சுழி இருந்தால், பூர்ணயுசு வலத்தில் ஒருசுழி வலம்புரியா யிருந்தால், மிகுந்த சம்பத்து. இடதுபுறத்தில் மூன்றுசுழி இடம்புரியாக இருந்தால் தந்தை தாயார்களை இழத்தல். மூன்று சுழி இடம் புரியாகத் தெங்குகண்போற் கூடியிருந்தால், வெட்டுப்படுதல் ஒருசுழி வலம்புரியும், ஒருசுழி இடம்புரிமாயிருந்தால், சிறிதுநாள் வறுமை, சிறிதுநாள் செல்வம்.

முகம்:—சிங்கம், யானையைப்போன்று மூடியவாயும், பரிசுத்தம், மெல்லியதும், மழமழப்பும் அழகாயும், உயர்ந்ததுமாய், இருந்தால், அரசு, அல்லது இராஜரீகம் தாயைப் போன்றிருந்தால் புண்ணியம். நீண்டும், விசாலமாயும், கோணியும், உயர்ந்து, சதைமடிப்பும், குதிரைமுகம் போன்றிருந்தால், தரித்திரம், பெண்முகமாயிருந்தால், பிள்ளையில்லை பாபி. நாற்சதுரமாயிருந்தால், மூர்க்கத்தன்மை, சீலமின்மை. மோசம் குறுகியிருந்தால், உலோபகுணம், வட்டமா யிருந்தால், மிகுந்தபாக்கியம் கழுதை, ஒட்டகம், குரங்கு, புலிபோன்றிருந்தால், துக்கம். சிறிதாயிருந்தால், அழகு பருத்துக் கறுத்து மிகுந்தமயிரிருந்தால், வசிகரம், செல்வம். மிருதுவான மயிரிலிருந்தால், அழகு. மயிர் நெருங்கியிருந்தால் காமம். அற்பமாயிருந்தால், ஸ்திரீபோகம்.

முகத்தின் சுழி:—முகத்தின் வலத்தில் ஒருசுழி வலம் புரியாதிருந்தால், சுகபோஜனம். இடத்தில் ஒருசுழி இடம் புரியாதிருந்தால், சிலநாள் வறுமை சிலநாள் செல்வம். இடத்தில் வலம்புரிசுழி இருந்தால், நல்ல நினைப்பு, நினைத்து முடியாமை, தாழ்வாயின் கீழே இரண்டுசுழிவலம்புரியாயிருந்தால், அதிகசெல்வம். இடம் புரியாயிருந்தால், வறுமை, வியாதி.

நெற்றி:—விசாலமா யிருந்தால், செல்வம், உயர்ந்து, மூன்றும் பிறைசந்திரன் போன்றிருந்தால், ராஜ்ஜியம். முத்துச் சிப்பிபோல் அகன்றிருந்தால் ஆசார்யபக்தி. குறைந்திருந்தால், தருமத்தில் சிரத்தை, சுருக்கியும், மேடுபள்ளமாயுமிருந்தால், தனமில்லாமை, பள்ளமா யிருந்தால், போகமின்மை, கொலை, பாவம், சிறை, நரம்பு எழும்பியிருந்தால், அதமம். முக்கோணம்போன்ற ரேகை யிருந்தால் தனம். ஐந்துரேகை யிருந்தால், தீர்க்காயுசு, லக்ஷ்மி கடாக்ஷம். நான்குரேகைகளிருந்தால், எண்பது வயது, அரசு மூன்றிருந்தால் எழுபது வயது. இரண்டி ருந்தால், அறுபது வயது. ரேகையில்லாதிருந்தால், இரு பத்தைந்து வயது, சகலசெல்வம். குறுக்காகிய மூன்று ரேகைகள் நீண்டிருந்தால், நூறுயுசு. குறுக்காகிய நான்கு ரேகைகள் நீண்டிருந்தால், தொண்ணூற்றைந்து வயது. விசேடபூமி ரேகைகளோடி யிருந்தால், தொண்ணூறு வயது. தலை மயிர் வரையில் நீண்டரேகை யிருந்தால், எண்பது வயது. குறுக்காகிய ஐந்துரேகைகளிருந்தால், எழுபது வயது. குறுக்காகிய ஆறு ரேகைகளிருந்தால், அறுபது வயது. வெகு ரேகைகளிருந்தால், ஐம்பது வயது. கோணிய ரேகைகளிருந்தால், நாற்பது வயது. புருவங்களைச் சேர்ந்தாப்போலிருக்கிற ரேகைகளிருந்தால், முப்பது வயது. இடது பக்கத்தில் கோணி இருப்பவை யான ரேகைகளால் இருபது வயது. ரேகைக ளறுந்த வையாயிருந்தால் புணரத்தகாத மாதரைப் புணருதல், ஸ்ரீவர்ஸம், தனுசு போன்ற ரேகைகளால், அரசு. நான்கு விரலகலமிருந்தால், ஞானம். மூன்று விரலகலமிருந்தால், ஞானம், செல்வம், இரண்டுவிரலகலமிருந்தால், அதிக செல்வம் ஒரு விரலகல மிருந்தால், மூடத்தன்மை.

நெற்றியின் சுழி:—நெற்றி நடுவிலொரு சுழி வலம்புரி யாயிருந்தால், செல்வம். இடம்புரியாயிருந்தால் வறுமை முன் நெற்றியில் இடமாக ஒரு சுழி இருந்தால், தாய் தந்தைகள் விரைவில் இறந்து விடுவார். இரண்டு சுழி வலமாயிருந்தால், காமவிகாரம், பாபம். நெற்றியில் மயிர் அதிகமாக விருந்தால், மிகுந்த கபடம்.

புருவம்:— நாசிகையென்னும் மூங்கிலில் இருந்து உண்டான இலைகள் போன்று, இளம்பிறைபோலச் சாய்ந்து, ஒன்றோடொன்று கூடாமல், மிருதுவான மயிர் களோடும் மழமழப்பாய் இருந்தால், அதிக செல்வம், நீண்டு, மிகவும் கறுத்து விசாலமான கண்களைப்பற்றிருந்

ந்தால், சுகம் ஸ்தூலமாயும் அற்பமாயும், குரூரமாயும், பொன்னிறம், பெற்றும், துண்டு துண்டாயிருந்தால் தரித்திரம். குறுகியிருந்தால் அதிகதுக்கம், நடுவில் வளைந்திருக்குமாகில், புணரத்தகாத மாதரைப்புணருதல். மிகவுயர்ந்து அதிக வளைவாயிருக்குமாகின் அற்பாயுசு. கூட்டுப் புருவமாயிருந்தால் தாய்தந்தைகளை விரைவிலிழப்பர்.

கண்:—கமலம்போன்ற கண்களிருந்தால் அரசு. முத்துப்போல் வெளுத்திருந்தால், சிறந்த சாஸ்திரஞானம் தேன், பொன், கோரோசனை, இவைகள் போன்றிருந்தால், அதிகதனம் யானையின் கண் போன்றிருந்தால், சேநாதிபத்தியம், நீண்டிருந்தால், சிரஞ்ஜீவி, விசாலமாயிருந்தால், மஹாபோகம் மாடப்புருவினைப் போன்றிருந்தால், மிகுந்தகாமம், கறுப்பு, மஞ்சள், கலந்திருந்தால், நல்லபாக்கியம். பருத்தகண்களை யுடைத்தாயிருந்தால், விஷேசபுத்தி ஈனமாயிருந்தால், தரித்திரம். கீரி, மயில், இவைகளின் கண்போன்றிருந்தால், மத்திபம், தவளையைப் போன்றிருந்தால், அதமம். புகைபோன்றிருந்தால் தீர்க்காயுசு, உருண்டும், அசைவற்றுமிருந்தால், யௌவனத்தில் மரணம். நேர்பார்வையாயிருந்தால் நிஷ்களங்கம் மேற்பார்வையாயிருந்தால், புண்ணியம். கீழ்பார்வையாயிருந்தால், பாவம். குறுக்குப்பார்வையாயிருந்தால், கோபம் எப்போதும் ஒரு குறியைப்பற்றுததாகிக் காரணமின்றிச் சுழலுகிலதும்' வாடினதும் குரூரமும் ஆகியும் பூனைக் கண்ணையு மிருந்தால், பாவத்தொழில். பொட்டககண்ணையிருந்தால், அதமம், கொடுமை காய்புண்டிருந்தால், அதமாதமம், குரூரமாயிருந்தால், ஜனங்களுக்குப் பயம், கோழிக்கண்ணையிருந்தால் துஷ்டத்தனம். பாம்புக்கண்ணையிருந்தால், கண்ணோய். ஒருகண்பெரிதும் ஒருகண்சிறிதுமாயிருந்தால் துக்கம். ஹம்ஸத்தைப் போன்றிருந்தால், தநஹாநி, புலியொத்தகண்ணானால், கோபம். அதிகக்றுத்தகண்ணையிருந்தால் சேதம். அதிக மழமழப்புடைய கண்ணையிருந்தால், அற்பாயுசு, விகாரவர்ணமும், சுழல்கிறதுமானால் அசுபம், மிகவும் சிவந்து மிகக்கொடிதாகி ஜலத்தோடு கூடியிருந்தால் தரித்திரம். ஆழ்ந்த கண்ணாகில், செல்வம்.

கண்மச்சம்:—வலதுகண்ணின் வெள்ளைவிழியில் மச்சமிருந்தால் புத்திக்கூர்மை. இடதுகண்ணின் வெள்ளைவிழியில் மச்சமிருந்தால் காமவிகாரம். பிறவிக்குருடாயிரு

ந்தால், மனக்குறை, விழிக்கண் குருடாயிருந்தால், விஷேசித்த அறிவு.

மூக்கு:—நாலங்குலமுள்ளதும், மிகப்பருத்த நுனியுடையதும், குறுகிய உள்ரந்தரங்களைப் பெற்றதும், மிகப்பருத்த சதைமடிப்பு இல்லாததுமாயிருந்தால், தீர்க்காயுசுமிகுந்தசுகம், நேராயும் உயர்ந்துமிருக்கில் நல்லபாக்யம் யானையின் துதிக்கைபோன்றதாகில் சுகம், தனம். எள்ளின் பூவையும், கிளிமூக்கையும் ஒத்திருந்தால், அரசு. நுனியில் கோணியிருந்தால், தனம். சிறுமூக்கானல், சீலம் தர்மம். விசாலமாகி உயர்ந்து, புல்லாங்குழலையொத்திருந்தால், மிகுந்த ஐஸ்வர்யம். இரண்டாகப் புரிந்திருக்கிற நுனிப்புறத்தையுடையதும், மிக நீண்டதும், மிகக் குறுகியுமிருந்தால், தரித்திரம். கோணியிருந்தால், சூரத்தன்மை. தட்டையாயிருந்தால் ஸ்திரீயினல் மரணம். அறுந்த மூக்குப் போன்றிருந்தால், புணரத்தகாத மாதரைப் புணர்தல். விகாரமானதும் நடுப்புரமில்லாமல், நுனியில் பருத்ததும், பிசினுடையதுமாயிருந்தால், மிகுந்ததுக்கம், வலதுபுறம்தில் பள்ளமாயிருந்தால், பிரரன்னம், புசித்தல் மிகக்கொடுமை.

மூக்கின்மச்சம்:—மூக்கு முனையில் மச்சம் மிருந்தால் சொற்பசிலவு. வலத்தில் மச்சமிருந்தால், செல்வம், இடத்தில் மச்சமிருந்தால், வறுமை, வடு இருந்தால், வெகு செல்வம்.

வாய்:—வாய் சிறுத்தால் செல்வம். வாயினிடமாக மருவிருந்தால், பிடித்ததைச் சாதித்தல் மரு சிவந்தால் அழகு மருகறுத்திருந்தால், வறுமை. வாய்க்குள் சுவேதையிருந்தால், ஞானம். கமலமிருந்தால் வித்தை. குடையும், அங்குசமிருந்தால், அரசு. பாம்பு போன்றிருந்தால். வறுமை, கபடம் வார்த்தை வலுவானல், முன்கோபம், கபடில்லை வார்த்தை மெதுவானல், கபடம் கீச்சகுரலாயிருந்தால், செய்தநன்றி சொல்லுதல். ஊமையானல் மிக்கபாவம்.

கன்னம்:—உயர்ந்திருந்தால், சுகம், சதை பருத்திருந்தால் பூர்த்தியான செல்வம், மிகுந்த போகம். சிங்கம் யானை, யொத்த கன்னமிருந்தால், தேசாதிபதித்வம். மாம்சமின்றி, சுஷ்கி, ஆவ்ந்து, அற்பமீசையைப் பெற்றிருந்தால், பாபம்: துக்கம். பாக்கியஹீனம், அடித்தொழில் நீண்டால், அரசு, சிறுத்தால், செல்வம் மருவிருந்

தால் செல்வம். கல்வி. இரண்டு கன்னத்திலும் வலப்புற மயிர்சுழியானால், வார்த்தை சிரேஷ்டம். இடப்புற மயிர்ச் சுழியினால், வறுமை.

தாள்வாய்:—தாள்வாய் பருத்து இரண்டாகவிருந்தால் அரசு. தாள்வாய் ஒருமையானால், வறுமை. வலச்சுழி மயிரானால், பொசிப்பு இடச்சுழி மயிரானால்' வறுமை. தாள்வாயில் மருவிருந்தால், போகம். கிலேசம், நடுதாள் வாயில் மருவிருந்தால், தீர்க்காயுசு. கீழ்த்தாள்வாயில், மருவிருந்தால், சுகபோசனம். மேல்த்தாள்வாயில் மருவிருந்தால், சோரம்.

செவி:—தொங்குகிற காதானால், தனம். அழகியசுழியோடு பருத்து மிருதுவாயிருந்தால், சுகம். எலிக்காது போன்றிருந்தால், புத்திபூர்த்தி. முளைபோன்றிருந்தால் தெசாதிபதித்வம். தட்டையாயிருந்தால், மிகுந்தபோகம். நீண்டுமயிர் நெருங்கியிருந்தால், தீர்க்காயுசு, மிகவும் பருத்த காதானால், மஹாபோகியான அரசு. குறுகியிருந்தால், தரித்திரம், சுஷ்கியிருக்கிறதானால் பாவத்தொழில் தொங்கியும் நரம்புள்ளதும், கேமணி யிருக்கியதானால், கொடிய தொழில். மேல்செவி உங்ளடங்கியிருந்தால், வஞ்சகம், உள்செவி பருத்திருந்தால் வறுமை. வலது செவியில் மருவிருந்தால், ஞானம். இருசெவியில் மருவிருந்தால்' பழிச்சொல். விசாலமான ரந்திரத்தைப் பெற்றிருந்தால், குரூரத்தன்மை, வறுமை, அற்பாயுசு.

கழுத்துபிடரி:—பிடரி, மயிர் நரம்புகளோடிருந்தால், சிறந்தது. பிடரி விசாலமாயிருந்தால், நோய், வறுமை. பிடரியில் ரேகையிலிருந்தால், சுகம். கழுத்து சங்குபோன்றிருந்தால், தேசாதிபத்வம். உருண்டையாயிருந்தால், சுகம், தனம். எருமைக்கிடாக் கழுத்தைப் போன்றிருந்தால், சூரத்தன்மை. வக்கிரமாயிருந்தால், கோட்சொல்லல்' மான்கழுத்தையொத்திருந்தால், ஆயுதத்தினால் மரணம், கழுதை, ஒட்டகம் இவைகளின் கழுத்தையொத்திருந்தால், மிகுந்த துக்கம். கொக்கை யொத்திருந்தால், டம்பம் தட்டையான கழுத்திருந்தால் வறுமை. கழுத்து தன்கையினால் நான்கு அங்குல நிகளமாய்த் திரண்டும், நரம்பு எழும்பித் தெரியாமலிருந்தால், செல்வம், அழகு, தீர்க்காயுசு. கழுத்தில் நரம்பு தடித்து தெரிந்தால், வறுமை கடன். கண்டத்தில் நான்கு வரையிருந்தால், தீர்க்காயுசு. இரண்டு வரையிருந்தால் கபடம். ஒரு வரையிருந்தால், நினைத்தது முடியாது. வரையில்லாவிட்டால் கிலேசம்.

பற்கள்:—பற்கள் சிறுத்திருந்தால், அழகு. பற்கள் விலகியிருந்தால், காமம். பருத்திருந்தால், தரித்திரம், தெத்துகின்ற பல்லிருந்தால், அழியும்வித்தை. மேற்பல், கீழ்ப்பல், நடுப்பல், இவைகளுடன் சிறுபற்கள் இருந்தால் செல்வம், புத்தியின்மை. பற்கள் முல்லை அரும்பு போன்று, ஒன்றோடொன்று சரியாகி நெருங்கி, மழமழப்பை உடையதாகி, மேடுபள்ளமில்லாமல், கூராயிருந்தால், செல்வம். கழுதை யானை இவைகளின் பற்களை ஒத்திருந்தால் தனம். கரடி, குரங்கு இவைகளின் பற்களை ஒத்திருந்திரல், தரித்திரம். முப்பத்திரண்டு பற்களிருந்தால், அரசு. முப்பத்தொருபற்களிருந்தால் போகம். முப்பது பற்களிருந்தால், அற்பதனம். இருபத்தொன்பது பற்களிருத்தால், சுகம். இருபத்தெட்டுப் பற்களிருத்தால், வறுமை, துக்கம்.

நாக்கு:—நாவானது சிவந்து, மெல்லியதாகி இருந்தால், நல்ல உணவு வேதம்ஓதல் வெளுத்திருந்தால், ஆசாரம், கறுத்திருந்தால், வறுதை பலநிறமாயிருந்தால் பாவம். பருத்தும், அழுக்கடைந்தும் பொன்னிறம் போன்றும் இருந்தால், துக்கம்.

தோள்:—வளைந்தும், அடியில் பருத்தும், சற்றுயர்ந்தும், உறுதியான சந்தபந்தங்களைப் பெற்றும், குறுகியும் எருதின் முசிப்புக்குச் சரியானதுமாயிருந்தால் செல்வம். சதைவற்றியும் மயிர்களடர்ந்தும் கோணியும், சிறுத்ததுமாயின், தரித்திரம். தாழ்ந்திருந்தால் தீர்க்காயுசு. சரியாயிருந்தால், அறிவு. இரண்டு தோள்களிலும்மயிர் அதிகமாயிருந்தால், நினைத்தகாரியம் முடிதல். வலது தோளில் மருவிருந்தால் வெற்றி, அன்னம் கிடைத்தல் அரிது. இடது தோளில் மருவிருத்தால், போகமின்மை, திரவியச்சேதம் பழிச்சொல்.

அக்குள்:—அக்குள் உயர்ந்ததாகி, சிறுத்து கறுத்த மயிர்களை உள்ளதாகி, துர்கந்தமின்றி யிருந்தால், சம்பத்து கற்றாழை நாற்றமிருந்தால், காமவிகாரம், சுண்ணாம்பு நாற்றமுடையதாகவிருத்தால் துன்பம். யானை மூத்திரம் போன்ற நாற்றம் பொருந்தியிருந்தால், அற்பபோகி. இளநீரின் மணத்தை ஒத்திருந்தால், தீர்க்கபோகி தாமரையின் வாசனை போன்றிருந்தால், அநேக பெண்களை அணைதல், அக்குளில் மயிரில்லாதிருந்தால், கோழி போகத்தை ஒத்த போகம், மயிர் நெருங்கி இருந்தால்

வறுமை. வலது அக்குளில் மருவிருந்தால், தனம். இடது அக்குளில் மருவிருந்தால், திரவியசேதம்.

கை:—குரங்கின் கையை ஒத்திருந்தால், மிகுந்த செல்வம். புலியின் கையை ஒத்திருந்தால், பாவம். மழமழப்பானதும், வேர்வையற்றதும், சதைபருத்து ரத்தரமில்லாததும், சிவந்ததும், எவ்வித வேலையுமின்றியே உரத்ததும், சூடுள்ளதும் நீண்ட விரல்களையுள்ளதும், மேடு பள்ள மில்லாததுமாயிருந்தால் அரசு. கைகள் முழங்காலுக்குக் கீழ் நீண்டிருந்தால், ஆயுசு, திரவியம். கைகள் முழங்கால் மட்டும் நீண்டிருந்தால், செல்வம் முழங்காலுக்கு மேல்ஒருவிரல் உயரமிருந்தால், நல்ல போஜனம், இரண்டு விரல் உயரமிருந்தால், சொல் செல்லல். மூன்று விரல் உயரமாயிருந்தாலும், கைமுழுதும் மிருதுவாயிருந்தாலும், ஆயுசு, அழகு, ஐசுவரியம், நான்கு விரல் உயரமாயிருந்தால், சொற்ப செல்வம், ஐந்து அல்லது அதற்கு மேலுயரமிருந்தால், வறுமை, கபடு, கிலேசம், கைகள் பருத்திருந்தால், கிலேசம், சிறுத்திருந்தால், தரித்திரம்.

முழங்கை:—வலது முழங்கை வரையில், மருக்களிருந்தால் வசீகரம். இடது முழங்கை வரையில் மருக்களிருந்தாலும், முழங்கை சிறுத்தாலும் வறுமை, பகை. முழங்கையில் இடஞ்சுழியிருந்தால், உலுத்தத்தன்மை, முழங்கை மயிர் சிறுத்தால் பெண்போகம், முழங்கை ஆழமாயிருந்தால், செல்வம். முழங்கைகளில் மயிர் சிவந்தால், வறுமை. நரம்பு தோன்றியிருந்தால், துக்கம், முழங்கை முதல் தோள்வரையும் மயிரில்லாதிருந்தால் அழகு. அவ்விடங்களில் மயிரில்லாதிருந்தால் ஈயாத்தன்மை.

உள்ளங்கை:—உள்ளங்கை பூர்ணமான பள்ளமாய் இருந்தால், மிக்க செல்வம். உள்ளங்கை உயர்ந்திருந்தால், தானம். நடுவிரல் அதிக பள்ளமாய் இருந்தால், பிதிர் தனமின்மை. உள்ளங்கை சிவந்திருந்தால், தனம், பொன்னிறமாயிருந்தால், புணரத்தகாத மாதரைப் புணர்தல். கறுத்தும், வெளுத்தும் இருந்தாலும், மேடு பள்ளமாய் இருந்தாலும், மெல்லியதாகி மழமழப்பில்லா திருந்தாலும் தரித்திரம் கறுத்திருந்தால் குடிக்கத் தகாததைக் குடித்தல்.

உள்ளங்கை ரேகை:—வலது உள்ளங் கையில் சங்கு சக்கரம் போன்ற ரேகைகளிருந்தால் - திரவியச்செலவும் - வரவும் வலது கையில் மச்சரேகை - அல்லது யவதானியம் போன்ற ரேகையிருந்தால் - செல்வம் - ஈஸ்வரபக்தி - யாகம் குடம் போன்றிருந்தால் பொறுமை சூரியன் - கண் - சந்திரன் இவை போன்றிருந்தால் லக்ஷிமிவாசம் திரவியம். மாது போன்றிருந்தால், எந்நாளும் அதிக போகம் வேல் போன்றிருந்தால் - வெற்றி சிங்கம்போன்றிருந்தால் தேவபக்தி ரிஷபம் போன்றிருந்தால் - வாகனம். பெருவிரலடியில் யவரேகையிருந்தால் - புத்திரரைப் பெறுதல் அழகுள்ளவையும் - ஆழ்ந்தவையுமான ரேகைகளிருந்தால் தனம் வஜ்ஜிராயிதம் - மாலை தெப்பம் தேவாலயம் போன்ற ரேகையிருந்தால் - செல்வம் கப்பல்வர்த்தகம். மீன்வாலை யொத்த ரேகையிருந்தால், வித்தை குடை - பல்லக்கு யானை குதிரை இவைகளை ஒத்த ரேகையிருந்தாலும் - கையில் மூன்று ரேகைகள் மணிக்கட்டினின்றும் உண்டாகி உள்ளங்கையை அடைந்தாலும் - இராஜரீகம். உள்ளங்கையில் தாமரைத்தண்டு - கொடி - அங்குசம் இவை போன்ற ரேகையிருந்தால் குபேரசம்பத்து. கத்தி, கோடாரி, அம்பு, வில் ஈட்டி இவைகளை ஒத்த ரேகையிருந்தால், சேனாதிபதித்வம். உரல், கலப்பை, உலக்கை, இவை போன்ற ரேகையிருந்தால், யாகஞ்செய்தல். முதலை, யோனி, முக்கோணம் இவைகளை ஒத்த ரேகையிருந்தால், அதிக செல்வம், திரிகோண எண்கோண நவகோண ரேகையிருந்தால், தடாகப் பிரதிஷ்டை. சுகம், தேவாலய பிரதிஷ்டை, உள்ளங்கை ரேகை பருத்து, புகைபோல் கறுத்திருந்தால் பாவம். உப்பரிகை, கயிறு இவை போன்ற ரேகைகளிருந்தால், பசு உடைத்தாயிருத்தல். பிராமணன் கையில். பூணூல், யூபம், யாகவேது இவைகளை ஒத்த ரேகையிருந்தால், இராஜரீகம், அக்கினி ஹோத்திரம். ரேகைகள் பிரகாசமின்றி, இடையில் அறுந்திருந்தால், திரவிய நாசம். திராசு, கிராமம் இவை போன்ற ரேகை இருந்தால், நல்லவியாபாரம். சூலம்போன்ற ரேகையிருந்தால். யக்யம், தர்மம், தானம், தேவபிராமண பூஜை, மலை, மனிதன் தலை, கடகம் இவை போன்றரேகை இருந்தால், மந்திரத்வம். மேற் சொன்னவற்றில் ஏதாவது ஒன்று குறைவாயின், நற்குண சேர்க்கை, இலிங்கம் போன்றிருந்தால், சிவபக்தி. ஆட்டின் தலை போன்றிருந்தால், தேக சவுக்கியம்.

கை பெருவிரல்:—பெருவிரலடியில் ஒருரேகை சங்கிலி போன்றிருந்தால், பாவம், நடுரேகை இரண்டாயிருந்தாலும், பலவாயிருந்தாலும், தானியம், கபடு, அலேச்சல், வலதுகை பெருவிரலின், இறைமேல் வலச்சுழி இருந்தால். வெகு செல்வம், இடச்சுழி இருந்தால், ஆயுசு, வறுமை, வலதுகை பெருவிரலில் மருவிருந்தால், பாவம் பெருவிரலடியில் யாகவேதிகை ஒத்த ரேகை இருந்தால், அக்கினி ஹோத்திரம். பெருவிரலடியில் களத்த ரேகைகளிருந்தால், பெண்களைப் பெறுதல், பெருவிரலடியில் யவ ரேகையிருந்தால், பாக்கியம், போஷணம், தர்மம், தீர்க்காயுசு. பெருவிரலின் நடுக்கணுவில் யவரேகை இருந்தால், செல்வம், போகம். ஆபரணம். பெருவிரலின் அடிப்புறத்தில், யவமலே ஒத்தரேகை மூன்று சுத்தாயிருந்தால், அரசுமஹாபாண்டித்யம், இரண்டு சுத்தாயிருந்தால், பூஜிக்கப்படுதல். ஒத்தைச்சுழியாயிருந்தால். அதிக செல்வம், பெருவிரலின் கீழ்ப்புறத்தில், காக்கையின் கால்போன்ற ரேகையிருந்தால், சூலேரோகத்தினுல் மரணம். பெருவிரல்கள் மிருதுவாகியும், மழமழப்பாயும், உயர்ந்தும், உருண்டும், பிரதக்ஷிணமான சுழியைப் பெற்றும், கணுக்கள் சரியானவைகளுமாகி இருந்தால், அதிகதனம். பெருவிரலின்மேல் இறை மடிப்பாயிருந்தால், வறுமை. பெருவிரலினடியில் கனத்த ரேகைகளிருந்தால், பிள்ளேகள். மெல்லிய ரேகைகளிருந்தால், பெண்கள்.

கை சுட்டுவிரல்:—சுட்டுவிரலின் அடிவரை ஒன்ருகில், வறுமை. பலவாயிருந்தால் வெற்றி. நடுரேகை ஒன்ருயிருந்தால் சிக்கனம். பலவாயிருந்தால் விதரணம். மேல்வரை ஒன்ருனுல் வித்தை. பலவாயிருந்தால், கபடு. மேலிறையில் வலச்சுழியிருந்தால், உலகாளுதல், இடச்சுழியிருந்தாற், புத்தி, மந்திரித்வம். இடது சுட்டுவிரலில் மருஇருந்தால், மந்தபுத்தி.

கை நடுவிரல்:—இடதுகை நடுவிரலில் மருவிருந்தால், ஆயுசு. நடுவிரல் அடிவரை ஒன்றில் மருவிருந்தாலும், நடுவரை அடியில் ஒரு மருஇருந்தாலும், வித்தை. மேல் இறை ஒன்றில் மருஇருந்தால். போகம், மேல் இறைச்சுழியில் மருஇருந்தாலும், இடச்சுழியில் மருஇருந்தாலும், இடச்சுழியிறையில் மருவிருந்தாலும், போஜனம். நடுவிரல் மடிப்பில் மருஇருந்தால் வீண்சிலவு. நடுவிரல் ரேகைகளில் பலமரு இருந்காலும், நடுவிரல் அடியிலும், அப்படியே இருந்தால்: செல்வம், போகம், மேலிறையில்

மருவானல் சுகம், போகம் இடது நடுவிரலில் மருஇருந்தால், அற்பாயுசு.

கைஅணிவிரல்:—அணிவிரலின் அடிவரையில், ஒரு மரு இருந்தாலும், மேல்வரையில் மரு இருந்தாலும், தேசாந்திரியாதல். பலவானதைல், இனங்களை ரக்ஷித்தல், அணிவிரலில் மரு இருந்தால், பூஷணம் மேல்வரையில் பல மரு இருந்தால், வெகு காமம். மேலிறையில் வலச்சுழி மருவிருந்தால், யாவரையும் உபசரித்தல். இடச்சுழி மரு இருந்தால், நல்ல வார்த்தை. இடதுகை அணிவிரல் மடிப்பில் மருஇருந்தாற் கிலேசம்.

கை சிறுவிரல்:—சிறுவிரல் கீழ் ஒரு ரேகை இருந்தால், ஒரு விவாகம். இரண்டு ரேகை இருந்தால், இரண்டு விவாகம். மூன்று ரேகை இருந்தால், மூன்று விவாகம். நான்கு ரேகையிருந்தால், நான்கு விவாகம், இடதுசிறு விரலில் மருவிருந்தால், மலடு. சிறுவிரலானது, அடுத்த விரலின் கணுக்களைக் கடந்து, அதிகமாயிருந்தால், அதிக செல்வம். கையில் சிறுவிரல் அணிவிரல் மட்டும் நீண்டிருந்தால், நூறுவயசு. அணிவிரலின் மேல்ரேகைக்கு உயரமாயிருந்தால், தொண்ணூறுவயசு. அணிவிரலின் மேல் ரேகைக்குச் சரியாயிருந்தால், எண்பதுவயசு, அணிவிரலின் மேல் ரேகைக்குச் சற்று கீழ் இருந்தால் எழுபத்தைந்துவயசு, அணிவிரலின் மேல் கீழ் ரேகைகளின் மத்திக்குச் சற்று உயரமாயிருந்தால், எழுபதுவயசு. மத்தியிலேயே இருந்தால், அறுபது வயசு. அதற்குக் கீழிருந்தால் ஐம்பது வயசு. மேல் சொன்னவற்றிற்கு கீழிருந்தால், முறையே வயசு குறைவாகும், கிலேசம்.

வலதுகை பெருவிரல்:—வலதுகை பெருவிரலில் மருவிருந்தால், ஞானம், வலதுகை சுட்டுவிரலில் மருஇருந்தால், அறிவு. வலது நடுவிரலில் மருவிருந்தால், தீர்க்காயுசு. வலது அணிவிரலில் மருவிருந்தால், ஆயுசு. புத்தி சம்பத்து.

இடதுகை பெருவிரல்:—இடதுகை பெருவிரலில் மரு இருந்தால், பாவம். சுட்டு விரலில் மருவிருந்தால், புத்தி மந்தம். நடுவிரலில் மருவிருந்தால், அற்பாயுசு. அணிவிரலில் மருவிருந்தால், வறுமை. சிறுவிரலில் மருவிருந்தால், மலடு.

கை விரல்கள்பொது:—விரல்களெல்லாம் சிறுசாக இருந்தால், அழகு, பருத்திருந்தால் வறுமை. திருடு. குறுகியி

ருந்தால், அடிமை. செல்வம். குறுக்கே ஒருரேகையிருந் தால், அரசு. நீண்டிருந்தால், தீர்க்காயுசு. கோணி மடங்கி, இராமல், நிமிர்ந்திருந்தால், பாக்கியம். வெளிப் புறத்தில் வணங்கி இருந்தால், ஆயுதங்களால் மரணம். கைவிரல்கள் மெல்லியவைகளாயும், சதை மடிப்பையுடை யவைகளுமாக இருந்தால், மங்களகரம், பாக்கியம். வலது கையில் ஆறுவிரலிருந்தால், அதிக செல்வம். எல்லா விரல்களிலும், விரற்கணுக்களின் பின்புறத்திலும் ரேகை கள் பிரகாசமாக இருந்தால், இராஜரீகம். கைவிரல்களுக்கு நடுவிரல் ரந்த்ரம் இருந்தால் எப்பொழுதும் தனம்.

மணிக்கட்டு:—மணிக்கட்டில் மூன்று சுற்றை உடைய தாகிய யவமாலை ரேகையிருந்தால், தனம், அரசு. அந்த ரேகை இரண்டு சுற்றை உடையதாயிருந்தால் நல்ல புத்தி. அந்த ரேகை ஒற்றைச் சுற்றை உடையதாகில், தனம், தானியம் முதலியன அடைதல். மூன்று யவமாலை ரேகைகள் மணிக்கட்டின் பின்புறத்தில் சுற்றிக்கொண்டி ருந்தால், அரசு, தனம், புத்தி முதலியன. கெட்டியாயும் எலும்பு சந்திகள் தெரியாமலும், சேர்ந்த சந்தியையுடை யவைகளுமான மணிக்கட்டுகளிருந்தால், அரசு. மணிக் கட்டு பலஹீனமுள்ளதாயும் சிறியவையுமாக இருந்தால் காயப்படுதல். தளர்ந்து, சந்திக்கிற மணிக்கட்டுகளிருந் தால், தரித்திரம்.

கை நகங்கள்:—கைநகங்கள் பவழம் போன்றும், மழ மழப்பாயும், மேடுபள்ளங்களின்றியும், ஆமை போல் உயர்ந்தும், நுனிகளை உடையதுமாக இருந்தால், அதிக தனம். கைநகங்கள் நீண்டும், கோணியும், சூக்ஷ்மமாயும் வெளுத்தும் ஒளி, மழமழப்பு இவைகள் இன்றியுமிருந் தால், தனம், தானியம், போகம். புஷ்பத்தைப் போல் அதிக வெளுத்திருந்தால். பழிக்கப்படும் சீலம், உமியை ஒத்திருந்தால், நபும்ஷகனுதல், விகாரவர்ணமாயிருந்தால், வஞ்சித்தல். தட்டையாகிப் பிளந்திருந்தால், தந்திரம். நகங்கள் சொத்தையாயும், விகார வர்ணத்தைப் பெற்றும் இருந்தால், நூல்வேலை செய்தல். சிவந்திருந்தால் அரசு.

மார்பு:—மார்பானது, அகன்று, உயர்ந்து, கஸ்தூரி, பச்சிலை, இவைகளின் நிறம் போன்றிருந்தால், அரசு. மேடு பள்ளம் இல்லாதிருந்தால் அதிகதனம். பளுத்தி ருந்தால். சூரத்தன்மை. மெல்லியதாயிருந்தாலும், மேடு பள்ளமாயிருந்தாலும், ஆயுதத்தினுல் மரணம். மயிர்

நெருங்கியும், மார்பு சிறிதாயுமிருந்தால், தரித்திரம். குவிந் திருந்தால், விகாரம். விரிந்திருந்தால் அனுகூலம். சிவந் திருந்தாலும் இருபத்தினன்கு அங்குலமிருந்தாலும் செல் வம், வெளுத்திருந்தால், மிடி கறுத்திருந்தால், வியாதி. மார்பில் நுனிபிளந்த மயிரிருந்தால், கபடு. வலஞ்சுழி மயிரிருந்தால், அதிக செல்வம். இடஞ்சுழி மயிரிருந்தால் வறுமை, இடது மார்பில் மருஇருந்தால், பழி. சுகபோஜ னம். புருஷர்களுடைய ஸ்தானங்கள் உருண்டு மழமழப் பாகி, ஒன்றோடொன்று சரியாயிருந்தால், சிறந்தவை. விசாலமாயும் சரியாகாத வைகளுமாயிருந்தால், துக்கம். மாம்சங்கள் உள்ளதாகி, இரட்டையாகி அமிழ்ந்த, முலை நுனிகளிருந்தால், அரசு, சுகம். முலைக்காம்பு சிறுத்திருந் தால், அழகு. பருத்திருந்தால் வியாதி. முலை நுனிகள் கோணியும், நீண்டுமிருந்தாற் தரித்திரம்.

வயிறு:—சமானமாயிருந்தால் சூரத்தன்மை, சுகம். உயர்ந்திருந்தால், தனம், அரசு. மேடு பள்ளமாயிருந் தால், மாயை. வக்கிர சுபாவம். ஆழ்ந்து பள்ளமாயிருந் தால், விரைவில் மரணம். மேடாயிருந்தால், நபும்ஸகனு தல். சிங்கத்தின் வயிறு போன்றிருந்தால், சக்கரவர்த்தி யாதல். தவளையின் வயிறு போன்றிருந்தாலும், சிறிய தாயிருந்தாலும், அரசு, எருது, மயில் இவைகளின் வயிறு போன்றிருந்தால், போகம். உருண்டையாய் இருந் தால், சுகம். மத்ஸியம், புலி, இவைகளின் வயிறு போன் றிருந்தால், பாக்கியம், பருத்திருந்தால். தரித்திரம். பானையை ஒத்திருந்தால் செல்வம். பாம்பின் வயிற்றை ஒத்திருந்தால், தரித்திரம். வேலை. அதிகமாய்ப் புசித்தல். பூசனிப்பழம் போன்றிருந்தால், பொசிப்பு. மிருதுவாயிரு ந்தால், புத்திரசம்பத்து. கடினமாயிருந்தால், பழிச்சொல். குவிந்திருந்தால், வாதம். வெதும்பி இருந்தால், பித்த சரீரம். காமம். உலர்ந்திருந்தால், மூலக்கிராணி வட்ட மாக இருந்தால், வியாதி. குறுக்கே நீண்டிருந்தால், மலடு, வயிற்றில் ஒரு மடிப்பிருந்தால், அலைந்து திரிதல். ஆயுதத்தினல் மரணம். இரண்டு மடிப்பிருந்தால் வெற்றி, ஸ்திரிபோகம். மூன்று மடிப்பிருந்தால், அறிவு, குருவா தல். நான்கு மடிப்பிருந்தால் பகை, புத்திரசம்பத்து. ஐந்து மடிப்பிருந்தால், இரக்கம். மடிப்பில்லாதிருந்தால், அரசு. மடிப்புகள் கோணியிருந்தால், புணரத்தகாத மாத ரைப் புணர்தல். மடிப்புகள் நேராகவிருந்தால், சுகம். அயல் மாதரைத் துவேஷித்தல்.

தொப்புள்:—தொப்புளின் கீழ்ப்புறமானது அகன்று சதைபருத்து, உயர்ந்திருந்தால், சிறந்தது. உயர்ந்து மேடு, பள்ளம், கடினமாயிருந்தால், தரித்திரம். துக்கம். நாய், நரி, ஒட்டகம், எருமைக்கடா இவைகளின், நாபியின் கீழ்ப்புறத்தை ஒத்திருந்தாலும், நெருங்கி வேர்வையினல் நனைந்திருந்தாலும், தனமில்லாமை. விசாலமாயும், ஆழ்ந்தும் உருண்டும், பிரதக்ஷணமான சுழியை உடைத்தாயுமிருந்தால், சௌக்கியம், புத்தி. தொப்புளானது தாமரைக் காயைப் போன்றிருந்தால், இராஜரீகம். இருபக்கங்களிலும் நீண்டிருந்தால், தீர்க்காயுள், மேல் புறத்தில் நீண்டிருந்தால், அரசு. கீழ்ப்புறத்தில் நீண்டிருந்தால், பசுக்களை அடைதல். சதை மடிப்புகளின் நடுவில் உள்ளதும், கோணியுமிருந்தால் வறுமை, தாழ்ந்திருந்தால், சூலைவியாதி, உயர்ந்து அற்பமாயிருந்தால், கஷ்டம். அப்பிரதக்ஷணமான சுழியிருந்தால், புத்தியில்லாமை. வலஞ்சுழி இருந்தால் அரசு, அதிக செல்வம். இடஞ்சுழி இருந்தால், வறுமை. கீழ் நோக்கி இருந்தால் பசி. உயர்ந்திருந்தால் திரவியம். ஆழமாய் இருந்தால் நற்குணம். நாபியைச் சுற்றி நாபியைப் பார்த்த வண்ணமாக மயிர் இருந்தாலும், செல்வம். தொப்புளின் நடுவில் மரு இருந்தால், உலகாள்வான்.

விலா:—வலது விலாப்புறத்தில் மயிர் வலச்சுழி இருந்தால், ஸ்திரீபோகம் மிகுதி. இடச்சுழி இருந்தால், விர்த்தி, பெண்டிழத்தல். இடது விலாப்புறத்தில், வலச்சுழியிருந்தால், இகழ்ச்சி, இரத்தல். இடச்சுழி இருந்தால் கீர்த்தி விலாப்புறத்தில் நரம்பு எழும்பாமலிருந்தால் செல்வம்' நரம்பும் மயிரும் பொருந்தி இருந்தால் வறுமை. விலாப்புறங்கள் சதைபருத்து, மெதுவாகி, பிரதக்ஷிணமான மயிர்ச்சுழியை, உடைத்தாயிருந்தால், அரசு. சதையின்றி உயர்ந்து அப்பிரதக்ஷிணமான மயிர்ச்சுழியை உடைத்தாயிருந்தால், திரவியம், சுகம், இவைகள் இன்மை. அடிமைத்தொழில். பள்ளமாயிருந்தால், ஆகாரங் கிடைத்தலரிது. மெல்லிய நரம்புகளோடு கோணி, மழமழப்பில்லாதிருந்தால், அடிமைத்தொழில்.

முதுகு:—முதுகானது ஆமை முதுகை ஒத்திருந்தால், அரசு. குதிரை முதுகை ஒத்திருந்தால், சுகம். புலியின் முதுகை ஒத்திருந்தால், தனம், சேனாதிபதித்வம். மயிர்கள் அடர்ந்திருந்தால் கஷ்டம். விசாலமாக இருந்தால், பந்து மரணம். மாம்சமின்றிக் கோணி, நரம்புகளை

உடையதாயிருந்தால், துக்கம், அடிமைத்தொழில். அதிகமான மயிர்களை உடைத்தா யிருந்தால், தீரம். முதுகில் கொஞ்ச மயிர்களிருந்தால், பயம். மயிரில்லாதிருந்தால், தனம். முதுகு இரண்டு பிரிவாயிருந்தால், அழகு. ஒன்றுயிருந்தால், புத்திமந்தம். முதுகின் மயிர் வலச்சுழியாயிருந்தால், ஆயுசு. இடச்சுழி மயிரிருந்தால், பாபம். மூன்று அதற்கு மேற்பட்ட சுழி இருந்தால் தரித்திரம். இரண்டு வலச்சுழி இருந்தால், வெற்றி. இரண்டு இடச்சுழி இருந்தால், வெகுகாமம். ஒரு வலச்சுழி இருந்தால், அதிக வறுமை. ஒரு வலச்சுழியும், ஒரு இடச்சுழியும் இருந்தால், உலகத்தில் திரிதல், சுழியே இல்லாமலிருந்தால், மலடு முதுகின் நடுவில் மருவிருந்தால், உலகாள்வான். முதுகின் வலப்புறத்தில் மருவிருந்தால், செல்வம். இடப்புறத்தில் மருவிருந்தால், வறுமை.

இடை:—இடுப்பானது புலியின் இடுப்பைப் போன்றிருந்தாலும், சிங்கத்தின் இடுப்பைப்போல் சிறியதாயிருந்தாலும், தவளை இடுப்பைப் போன்றிருந்தாலும், அரசு. நாய், குரங்கு, ஒட்டகம், இவைகளின் இடுப்பைப் போன்றிருந்தாலும், மயிர்களாலடர்ந்தாலும், தரித்திரம், இடது இடையில் மருவிருந்தால், அதிக செல்வம், வலது இடையில் மரு இருந்தால் வறுமை. இடையானது நீண்டு பருத்து விசாலமாயிருந்தால், நிறைந்த செல்வம். நெருங்கி இருந்தால், பாபம்.

ஆண்குறி:—ஆண்குறியானது அவரவர் கையால் பதின்மூன்றங்குலமானல், பாபம். பன்னிரெண்டு அங்குலமானல், வறுமை, விசாரம், வியாதி. பதினொரு அங்குலமானல், வறுமை. பத்து அங்குலமானல், பலம் ஒன்பது அங்குலமானல், வித்தை. எட்டு அங்குலமானல், தீர்க்காயுசு. ஏழு அங்குலமானல், இராஜரீகம். ஆறு அங்குலமானல், செல்வம். அதிகமான மயிர்களை உடைத்தாயிருந்தால், தீரம். சிறுத்திருந்தால், ஐஸ்வரியம், இந்திரியம் இல்லாமை. பருத்திருந்தால் வெகுபோகம். ஆண்குறியின மேல், மயிரில்லாதிருந்தால், போகம், அமிழ்ந்து உயர்ந்து, நீண்டு, உருண்டு, கெட்டியான ஸந்திகளைப் பெற்றிருந்தால், தன, தானியம் முதலியன உடைத்தாயிருத்தல். ஆண்குறியின் முடிச்சானது மெல்லியதாகி, சதையினல் முழுதும் மறைக்கப்பட்டு இருந்தால், அரசு. ஆண்குறியானது புலி, சிங்கம், குதிரை, இவைகளின்

லிங்கம் போன்றிருந்தால், மஹாபோகம். நரம்புகளால் வியாபிக்கப்பட்டு. அதிக தோலின்றி, அழுக்கற்று மெது வாய் பரிமளத்தைப் போன்றிருந்தால், நற்பாக்கியம், செல்வம். அதிக நரம்புகளோடு கூடியிருந்தால் புத்திர னில்லை. வலது பக்கத்தில் வணங்கி இருந்தால், பிள்ளை யுடைமை. இடது பக்கத்தில் வணங்கி இருந்தால், பெண் கள்உடைமை, தனமின்மை. உட்கார்ந்திருக்கையில், லிங் நமானது கணுக்கால் வரையில் தொங்கினால், மிகுந்த சுகம். பூமியில் பட்டால், துக்கம். லிங்நமானது மெது வாயிருந்தால், மேஹரோகம், நோயால் மரணம். லிங் கத்தின் முனை பச்சை நிறமாய், பொன்னிறமாயிருந் தால், அல்லது சமமாகவும், புஷ்பத்தின் பரிமளத்தை ஒத்துமிருந்தால், அதிபதித்வம். சிவந்திருந்தால், தனம், மழமழப்பாய் இருந்தால், சுகம். நடுவில் உயர்ந்திருந் தால், பசுஉடமை. பொன், வெள்ளி, முத்து இவைகளை ஒத்திருந்தால், அரசு. கறுத்தும், வெளுத்தும் இருந்தா லும், அழுக்கடைந்திருந்தாலும், தரித்திரம். நடுவில் வணங்கி இருந்தால், பெண்மகவுடைமை. நடுவில் பிளந் திருந்தால் துக்கம். லிங்கத்தின் முனையிலுள்ள ரேகை கள் பவழம், பொன் இவைகளை ஒத்திருந்தால் மிகுந்த தனம்.

இந்திரியம்:—இந்திரியமானது மலர்மணத்தை ஒத்தி ருந்தால், அரசு. கள்மணத்தை ஒத்திருந்தால், யாகம் செய்தல். தேன் மணத்தை ஒத்திருந்தால், செல்வம். மீன் மணத்தை ஒத்திருந்தால், பிள்ளை, செல்வம். பரிமளமாயிருந்தால், புத்திரசம்பத்து. மாமிசத்தின் மணத் தை ஒத்திருந்தால், சுகம். அழுகல் வாசனையானால், வறுமை. இரத்தத்தின் வாசனையானால், பக்தி. இளநீர் வாசனையானால், ஸ்திரீவாஞ்சை. உப்பு, சுண்ணாம்பு இவற்றின் வாசனையானால் தரித்திரம். தாமரைப்பூ வாசனையானால், உலகாளுதல். சோறு வாசனையை ஒத் திருந்தால், தீராப்புணர்ச்சி. சுக்கிலமானது நாவற்பழத் தின் வர்ணத்தை ஒத்திருந்தால், சுகம். பாலின் நிறத் தையொத்திருந்தால், சிரேஷ்டம், அழகு, வியாதி. கறுத் துச் சிவந்திருந்தால், துக்கம். கறுத்திருந்தால் நிலை யின்மை. பழுப்பு நிறமானால், கபடு. வாழைக்காய் நிற மானால், அலைந்து திரிதல். அதிகமாகப் புணர்ந்த பின் சுக்கிலமானது மழமழப்பாயிருந்தால், தீர்க்காயுசு. அற்ப மாக இருந்தால் அற்பாயுள், தரித்திரம், இந்திரியம்

விடுக்கையில் வாய்ப்புறம் பெருந் தாரையாக தரித்தால் உலகாளல் இடப்புறமாக விழுந்தால், வறுமை. சிதறி விழுந்தால், வியாதி.

பீசம்:—புருஷனுடைய பீஜங்கள் நன்ருக மயிர் சிறுத்து தொங்குகிறதாயும், உட்காரும் போது பூமியில் படுகிறதாயு மிருந்தால், அதிபதித்வம், நூறு வயசு. மயிர் பருத்து, நெருங்கி, ஒன்றுக்கொன்று சரியாயிருந் தால், அரசு. தொங்கியிருந்தால், தீர்க்காயுள். ஒற்றைப் பீஜமிருந்தால், ஜலத்தில் மரணம், குல நாசம். பீஜமா னது வலது புறத்தில் உயர்ந்திருந்தால், புத்திரருண்டு. இடது புறத்தில் உயர்ந்திருந்தால், கஷ்டம், பெண்கள் உண்டு. மெல்லியதா யிருந்தால், தரித்திரம். குதிரை யின் வருக்ஷணத்தை ஒத்திருந்தால், புணரத் தகாத மாதரைப் புணருதல். உருண்டிருந்தால், அழகு, ஆயுசு. திரண்டு, பருத்து, நீண்டு, சிவந்திருந்தால், செல்வம். கறுத்திருந்தால், உலகாளல். பிறிவின்றி கூடியிருந்தால் பேடியாதல். வலது பீஜம் நீளத்தில் குறைந்தால், கபடு. விரை ஒன்ருனல் மலடு. விரை குட்டையானல், அதிக பிள்ளைகள். உயர்ந்து, சிறுத்து, நரம்பு எழும்பி இருந் தால், வறுமை. மாறுபடாத சுழியிருந்தால், தரித்திரம். வலது பீஜத்தில் வலஞ்சுழி யிருந்தால் வியாதி. வலது பீஜத்தில் மருவிருந்தால், பெண்ணாசை, செல்வம். நடுவில் மருவிருந்தால், ஸ்திரீ போகம். இடது புறத் தில் மருவிருந்தால், ஸ்திரீபோகத்தில் மனம் இன்மை. பீஜத்தில் மச்சரேகை இருந்தால், அயல் மாதரை நோக்கல். இடது பீஜத்தில் மருவிருந்தால், ஞானம், மோகமின்மை.

சிறுநீர்:—மூத்திரமானது ஒரு சுழியாய் சுழன்று விழுந்தால், சுகம் நற்புத்திரப்பேறு. இரண்டு மூன்று நான்கு தாரைகளாய் பிரதக்ஷணமாகிய சுழலோடு விழு ந்தால், அரசு. இரைச்சலுடன் ஒன்று அல்லது இரண்டு தாரையாகவும், சப்தமின்றி வெகு தாரைகளாகவும் விழுந் தால், தரித்திரம், சப்தத்தோடு கூடி விழுந்தால் செல் வம்.

குதம்:—குதமானது அதிக மாம்சத்தை உடையதும். ஆழ்ந்து, மெதுவாகி, உருண்டு, சிவந்ததுமா யிருந்தால் சுபபலன். இதற்கு மாருயிருந்தால், அசுபபலன். பருத் திருந்தால், தரித்திரம். சதையால் பருத்திருந்தால் சுகம்.



சோ. ... சர்மா,
அருள் ... வீதி,
...

தவளையின் குதத்தைப் போன்றிருந்தால், அரசு. ஒட்டகம், குரங்கு இவைகளின் பிருஷ்டத்தை ஒத்திருந்தால், தன தானியமுடைமை.

துடை:—துடைகள் மெதுவாயும் மழமழப்புள்ளதாயும் கிரமமாகப் பருத்தவைகளுமாக விருந்தால், செல்வம். விசாலமாயிருந்தால், ஸ்திரீ வல்லபனாதல், ஒன்றோடு ஒன்று சேர்ந்து மயிர் சிறுத்து உருண்டிருந்தால், நற்குணம், செல்வம் நூறு ஆயுசு. நடுவில் வணங்காமலும், நடப்பதனால் உரத்தவைகளாயும், தட்டையாகவும், மாம்சமில்லாதவைகளுமாக விருந்தால், துர்ப்பாக்கியம். துடைகளில் உள்ள மயிர் சிவந்திருந்தால் மிடி. பருத்திருந்தால் விகாரம். நெருங்கியிருந்தால் கபடு. நுனியில் பிளவு பட்டிருந்தால், வறுமை, பிதாமரணம். மயிரில்லாதிருந்தால், அற்பபோகம். வலது துடையில் வலச்சுழியிருந்தால், அதிக செல்வம். இடது துடையில் இடச்சுழி யிருந்தால், செல்வம். வலது துடையில் இடச்சுழியும், இடது துடையில் வலச் சுழியும், இருந்தால், அலைந்து திரிதல். வலது துடையில் மச்சமிருந்தால், நன்மை. துடைகள் யானை துதிக்கையைப் போன்றிருந்தால், அரசு. வலது துடையில் மருவிருந்தால், நன்மை போகம். இடது துடையில் மரு இருந்தால். வறுமை, உண்மை, அலைந்து திரிதல்.

முழங்கால்:—முழங்கால்கள் யானையின் முழங்காலை ஒத்திருந்தால், சுகம். பருத்திருந்தால், அரசு. ஒன்றோடொன்று சேர்ந்திருந்தால், நூறுயுள். ஆழ்ந்து, அமிழ்ந்திருந்தால், ஸ்திரீக்குப் பாரதீனம் ஆதல். சந்திரன் போல் உருண்டு, மறைந்து, சதை பருத்திருந்தால், ராஜரீகம். நீண்டு அற்பங்களா யிருந்தால், துற்பாக்கியம். மாம்சங்களின்றி, உலர்ந்திருந்தால், தேசாந்திரத்தில் மரணம். குடத்தை ஒத்திருந்தால், தரித்திரம், பனம்பழத்தை ஒத்திருந்தால், அதிக துக்கம். சரியின்றியிருந்தால், வறுமை. வட்டமாயிருந்தால், அழகு. தாழ்ந்திருந்தால், செல்வம், சிறுத்திருந்தால், பாக்கியம் உயர்ந்திருந்தால், வியாதி. முழங்காலில் மயிர் மிகுதியாக இருந்தால், அலைந்து திரிதல். வலது முழங்காலில் வலச்சுழி இருந்தால், சுகம். இடது முழங்காலில், இடச்சுழி இருந்தால் அநேகம் பேர் வணங்கத்தக்கவனாதல். வலது முழங்கலில் இடச்சுழியும், இடது முழங்காலில் வலச்சுழியும் இருந்

தால், தாய், தந்தைகளை விரைவில் இழத்தல். வலது முழங்காலில் மரு இருந்தால், செல்வம். இடது முழங் காலில் மரு இருந்தால், தூஷணம்.

ஜங்கை அல்லது கீழ்க்கால்:—ஜங்கையானது, மாம்சம் உள்ளதாயும், எலும்புள்ளதாயும், மானின் ஜங்கையை ஒத்ததாயும், மெதுவாயும், மயிர்களடர்ந்தும், உருண்டும் இருந்தாலும், சிங்கம், மத்ஸியம், புலி இவைகளின் கீழ்க்காலை ஒத்திருந்தாலும், செல்வம். எருதின் ஜங் கையை ஒத்திருந்தால், வதம், பந்தம், வறுமை, ஸ்தூலமாயும் நீண்டு, மேல்தூக்கி கட்டியது போலுருண்ட மாம்சத்தை யுடையதுமாய் இருந்தால், வழி நடை. நாய், நரி, ஒட்டகம், கழுதை, காக்கை இவைகளின் ஜங்கையை ஒத்திருந்தால், அசுபபலன்.

கணைக்கால்:—கணைக்காலில் மயிர் சிறுத்து கறுத்து இருந்தால், செல்வம். மயிர் பருத்து நெருங்கியிருந்தால் விகாரம். மயிர் சிவந்திருந்தால், கிலேசம். மயிர் நுனிகள் பிளந்திருந்தால், அலைச்சல். வலது கணைக்காலில் வலச்சுழி யிருந்தால் திரவியம். இடது கணைக்காலில் இடச்சுழி யிருந்தால், வெற்றி. கால் கொடி போல் சிறுத்து, உருண்டிருந்தால், பெண்போகம். கணைக்கால் வரால் மீன் போன்றிருந்தால், உலகாளல், வலது கணைக்காலில் மருவிருந்தால், அழகு. இடது கணைக்காலில் மரு, மச்சம் இருந்தால், மிடி, வலிமை.

பரடு:—பரடு பந்து போன்றிருந்தால், செல்வம். நீண்டிருந்தால் அலைச்சல். திராசுத் தட்டுப் போன்றிருந்தால் அரசு சம்பத்து. பருத்திருந்தால், காமம். பரடில் மயிர் இருந்தால், தந்தை தாயார்களை இழத்தல். கணைக்கால் கறடுகள் உட்புறத்தில் அமிழ்ந்து, மறைந்து தாமரை மொட்டை ஒத்திருந்தால், செல்வம். தளர்ந்து பன்றியின் கால் கறடுகளை ஒத்து, சரியாகாமல், இருந்தால், பந்தம், வதம். எருமை கிடாவின் கறடுகளை ஒத்து, தட்டையாகிப் பருத்திருந்தால், துக்கம். பரடுகளில் மயிர் அடர்ந்திருக்கில், புத்திரனின்மை.

குதிக்கால்:—குதிக்காலானது உருண்டிருந்தால், லட்சுமி விலாசம். அழகாயிருந்தால், சுகம். பெரியதா யிருந்தால், தீர்க்காயுள். அற்பமாயிருந்தால், அற்பாயுள். உயர்ந்திருந்தால், அரசு. குதிக்காலில் நரம்பு மயிர்

மரு இவைகளிருந்தால், வறுமை. வலது குதிக்காலில் மருவிருந்தால், திரவியம். இடது குதிக்காலில் மருவிருந்தால், கபடு.

புறங்கால்:—புறங்காலானது மாம்ச முடையதாயும், மழமழப்பாயும், மறைந்திருக்கிற நரம்புகளை யுடையதும், மயிர் வேர்வை இவைகளற்றதும், ஆமை முதுகை ஒத்திருந்தால், அரசு. நடுவுயர்ந்து, மயிர் சிறுத்து கறுத்திருந்தால், சம்பத்து. பதிந்திருந்தால், குருவாதல். புறங்காலில் மயிரில்லாதிருந்தால், வறுமை. வலது புறங்காலில் மச்சமிருந்தால், காரியானுகூலம். வலச்சுழி இருந்தால், செல்வம். இடது புறங்காலில் மச்சமிருந்தால், நினைத்தகாரியம் முடியாமை. இடச்சுழியிருந்தால், மறுக்குந் தன்மை. சுழிகள் மாறியிருந்தால், தரித்திரம்.

பாதம்:—பாதங்கள் வேர்வையற்றதும், மெதுவான உள்ளங்காலை யுடையதும், தாமரை மலரின் உட்புறம் போன்றவையும், சிவந்த நகங்களை உடையவையும், நரம்பு தோற்ற மில்லாதவையும் கணுக்காலை யுடையவையும், நரம்புத் தோற்ற மில்லாதவையும் ஆமை போல் உயர்ந்த வையுமாகில், ராஜரீகம். முறம் போன்றதாகி கோணி வெளுத்த நகங்களை யுடையவையும், கோணி வெளியில் காணப்படுகிற நரம்புகளை யுடையவையும், நன்ருக உலர்ந்தவையும், விலகியிருக்கிற விரல்களை யுடையவையுமாயிருந்தால், தரித்திரம். பெரியதா யிருந்தால், வழிநடத்தல். அழுக்கடைந்து, சிவப்பு நிறமுடையதாகில், வம்சநாசம். சுட்ட மண்ணிற முடையதாயிருக்கில், பிர்மஹத்தி. மஞ்சள் நிறமுடையதா யிருந்தால், புணரத்தகாத மாதரிடத்தில் அன்பு மிருதுவாய். யானை முதுகை ஒத்திருந்தால், உலகாளல். பூமியில் பதிந்திருந்தால், குருவாதம். புத்தகம் போலவும், நடு உயர்ந்து மயிர்போக இடமிருந்தால், அற்பஜைதல். துரும்புபோக சந்திருந்தால், வறுமை. கனமாயிருந்தால், துன்பம்.

உள்ளங்கால்:—மிருதுவா யிருந்தால், அற்பகாரியத்துக்கு பயப்படுதல். வேர்வையற்று, குடுள்ளவையாகி, சிவந்து, தாமரைமலரின் நிறத்தைப்பெற்று. சதைபருத்து, மேடு பள்ளமின்றி, மழமழப்பாய், ஒன்றேடொன்று சரியாயிருந்தால், அரசு. காஷாய நிறத்தை ஒத்திருந்தால், குலநாசம் சுட்ட மண்ணிறமா யிருந்தால், பிரமஹத்தி. பொன்னிறமாயிருந்தால், புணரத்தகாத மாதரைப்புணர்தல்.

கறுத்தநிறமாயிருந்தால் கள்குடித்தல், வெண்மை நிறமுடைய தாயிருந்தால், புசிக்கத்தகாததைபுசித்தல் சிறுத்திருந்தால், வறுமை. ரேகைகளில்லாததும், கடினமானதும், மழமழப் பில்லாததும், வெடித்தது மாயிருந்தால், துக்கம், சுருங்கியிருந்தால், ஸ்திரீ புணர்ச்சியில் அற்பமுதல் மாம்ஸமின்றி உலர்ந்திருந்தால், நோய். பருத்து, அகன்றிருக்கில் வழிநடத்தல். உள்ளங்கால்களின் குறுக்கே எறும்பு நுழைய இடமில்லாதிருந்தால், சம்பத்து. வலது உள்ளங்காலில் மச்சமில்லாதிருந்தால், தீர்க்காயுள். இடது உள்ளங்காலில் மச்சம் இருந்தால், அலைச்சல். உள்ளங்கால் நடுவே வலப்பக்கமாக ஒரு மருவிருந்தால், அழகு. இடதுபக்கத்தில் மரு இருந்தால் மிடி.

உள்ளங்கால் ரேகை:— புருஷனுடைய உள்ளங்காலில் உள்ரேகையானது, சங்கு, குடை, அங்குசம், வஜ்ராயுதம் இவைபோன்ற ரேகைகள் பிரகாசமா யிருந்தால் செல்வம், சுகம் உடும்பு, எருமைக்கடா, பெருச்சாளி, குள்ளநரி, கிளி, காக்கை இவைகளை ஒத்திருந்தால், வறுமை, எறும்பு போலிருந்தால், உலகாளல். தாமரைப்பூ போன்றிருந்தால், வித்தை. உரலை ஒத்திருந்தால், போகம் செல்வம். கும்பம் போன்றிருந்தால், பலம் மத்தளம்போன்றிருந்தால், தீரம். வெண்சாமரைமாலை போன்றிருந்தால், புத்தி. மச்சம் போன்றிருந்தால், திரவியம், கட்டில்கால் போல் நான்குரேகைகளிருந்தால், வெகுஜனங்களை ரக்ஷித்தல், குதிக்கால் முதல் நடுவிரல் நுனிவரையில் ஒரு ரேகை யிருந்தால், அதிக செல்வம். குறுக்கே ஒரு ரேகை புள்ளடி போன்றிருந்தால், துக்கம். குடைபோன்றிருந்தால், நன்மை. கொடி போன்றிருந்தால், ஆயுள்விர்த்தி. யானை போன்றிருந்தால் அதிக செல்வம். தமரகம் போன்றிருந்தால், சொற்செல்லல்.

கால்பெருவிரல்:—கால் பெருவிரலானது ஸர்பத்தின் படத்தை போன்று அகன்று, சதை பருத்துமிருந்தால், சுபம். நரம்புகளடர்ந்து சப்பட்டையாகி, கோணி, மிகவும் அகன்றிருந்தால், அமங்களகரம். பெருவிரலுக்கு வலத்தில் மருவிருந்தால், அரசு. இடது கால் பெருவிரலில் மருவிருந்தால், காரியானுகூலம், அரசு. வலது கால் பெருவிரல் மருவில் வலச்சுழியிருந்தால், உலகாளல், இடது கால் பெருவிரல் மருவில் இடச்சுழி மயிரிருந்தால், தனம். காற்பெருவிரலில் மூன்றுவகை மருவிருந்தால், செல்வம்.

காற் பெருவிரலை அடுத்த விரல்:—கால் பெருவிரலுக்கு அடுத்த விரல் நீண்டிருந்தால், திருடு. ஸ்திரீசம்போகம். அதிகமாக நீண்டிருந்தால், வெகுபூஷணம். ஸ்தூலமாயிருந்தால் அசுபபத்தினி அடைதல், குறுகியிருந்தால் துக்கம்.

காற் சிறுவிரலை அடுத்த விரல்—சிறுவிரலை அடுத்தவிரல் நீண்டிருந்தால், ஞானம், குறுகியிருந்தால், இனத்தை விட்டு நீக்கல். சிறுவிரலை அடுத்த விரலில் மருவிருந்தால், செல்வம். மயிரிருந்தால், திரவியம்.

சிறுவிரல்:—கால் சிறுவிரல் மிக நீண்டிருந்தால், பழிச்சொல். காற்சிறு விரலில் மருவிருந்தால், செல்வம். மயிரிருந்தால், திரவியம். சிறுவிரல் நீண்டிருந்தால், அதிக செல்வம். மிகச் சிறுத்திருந்தால், அயல் மாதரிடத்தில் அன்பு. மிகப்பருத்திருந்தால், தாய் இழத்தல்.

கால் விரல்கள் பொது:—கால் விரல்கள் மேடு பள்ளங்களின்றி மெதுவாகி, உருண்டு, நெருங்கி, மழமழப்பாய், கமலத்தின் இதழ் போன்றிருந்தால், இடைவிடாத சௌக்கியம். நெருக்கமற்று, தட்டையாகி, மாம்சமில்லாமல், உலர்ந்து கோணி, நரம்புகளை உடைத்தாயிருப்பதாயிருந்தால், ஒருவனுக்கு வேலை செய்தல். ஒன்றுக்கொன்று, சிறுத்திருந்தால், அரசு. கலக்காதிருந்தால், இனஞ்சேராமை, விரல்களில் மயிர் நெருங்கியிருந்தால் திரவியம். ஒன்றுக்கொன்று குறுகி மேல் ஏறியிருந்தால் வறுமை. அதிக சுருண்டிருந்தால் செல்வம் வலது கால்விரல்களில் மயிரிருந்தால், வறுமை. இடது கால் விரல்களில் மயிரிருந்தால், வறுமை. இடது கால் விரல்களில் மயிரிருந்தால், நினைத்ததை முடித்தல், கால் விரல்களில் வலச்சுழி மயிரில்மரு இருந்தால்காமம், நூறுவயசு, இடச்சுழிமயிரில் மருவிருந்தால் பாவம், வலது காலில் ஆறுவிரலிருந்தால், வெகுசெல்வம் இடதுகாலில் ஆறு விரலிருந்தால் அலைச்சல்.

கால் நகங்கள்:—நகங்கள்பவழத்தின் நிறத்தை பெற்று, மழமழப்புள்ளவைகளாய், ஆமைபோலுயர்ந்து, மேடு பள்ளமின்றி, கண்ணடி போன்று, மெல்லியவைகளுமாயிருந்தால், சௌக்கியம், பருத்து, விகாரவர்ணமாகி, முறம் போன்ற உருவத்தைப்பெற்று, நீண்டு கறுத்து, வெளுத்து இருந்தால், தரித்திரம்.

தாடி-மீசை:—தாடி, மீசைகள் தொங்குவதும் பிளந்த நுனியையுடையதும், நெருக்கமுற்றதும், மழமழப்புடையதும், கறுத்துமாயிருந்தால், சிறந்தது. மீசைகள் சிவந்து, ஸ்தூலங்களாகியிருந்தால், அயல்மாதரிடத்தில் அன்பு, திருட்டு. மழமழப்பில்லாமல், அற்பங்களாய் பொன்னிறமுடையதாயிருந்தால், கஷ்டம். பிளவாமலிருந்தால் சுபம்.

தேகவாசனை:—தேகத்தில் நல்லவாசனை வீசினால்' அரசு, கற்றாழைவாசனை வீசினால், காரியானுகூலம், பயம். சுண்ணாம்புவாசனை வீசினால், துன்பம். யானை மூத்திரத்தை ஒத்தவாசனை வீசினால் அற்பபோகம். கற்பூரம், சாம்பராணி, சந்தனம், ஜாதிமல்லி, பச்சிலை, மழைத்தூரலினால் நனைந்த பூமி இவைகளின் மணத்தை ஒத்தமணம் வீசினால், போகம் மீன்முட்டை, காக்கைகூடு, கொக்கு இவைகளின் வாசனைபோன்ற வாசனையும், துர்க்கந்தமான நாற்றமும் வீசினால், தரித்திரம்.

கயறு அளக்கும்விதம்:—கால்பெருவிரல் தொடுத்து நெற்றி வரையில் உள்ள அளவையுடைய கயற்றையும் உடம்பைச்சுற்றி மூலைமார்புக்கு சரியானதாகிய கயற்றையும், ஒன்றாய்ச்சேர்த்து, அந்த அளவின் நான்கில் ஒரு பங்கையும் அதனோடு சேர்த்து அளந்த அளவில் அந்த அளவானது தன் கையால் நூற்றெட்டு அங்குலமிருந்தால், குபேர சம்பத்து. நூற்றெட்டு அங்குலத்திற்கு அதிகமாயிருந்தால், குறைந்த ஆயுசு. நூற்றெட்டு அங்குலத்திற்கு குறைவாயிருந்தால், வறுமை. வலதுதோள் தொடுத்து நடுவிரல் நுனிவரையில்வந்தநூலை இரட்டித்து காலின் பெருவிரல் நுனியில் வைத்து அளந்து பார்க்கில், அக்கயிறானது நெற்றி மயிர் வரையில் வந்திருந்தால், நூறுவயசு. செல்வம். நெற்றி நடுவில் வந்திருந்தால் தொண்ணூறுவயசு. புருவம் வரையில் வந்திருந்தால், எண்பது வயசு, செல்வம். மூக்கு நடுவரையில் வந்திருந்தால், எழுபது வயசு, இரக்கம், திரவியம். மூக்கு நுனிமட்டும் வந்திருந்தால், சகலருக்கும் நன்மை. வாய் நடுவரைக்கும் வந்திருந்தால், அறுபது வயசு, சொற்ப போகம். மோவாய்க் கட்டை வரையில் வந்திருந்தால், நாற்பது வயசு, மார்பு வரையில் வந்திருந்தால், முப்பது வயசு. வறுமை மேற்சொன்ன அளவிற்குக் குறைவாகில், அற்பாயுசு. வலது கைவிரல்கள் ஐந்தின் அளவையும், முறையே ஓர் கயிற்றால் அளந்துகொண்டு, அக்கயிற்றை முழங்கையில் வைத்து, அளந்து

பார்க்கில் அது நடுவிரலின் நடு இறைமட்டும் வந்திரு ந்தால், மந்திரித்வம். நடுவிரலின் அடிவரையும் வந்தி ருக்கில், உத்தமம். உள்ளங்கை வரையும் வந்திருந்தால், வறுமை.

மேற்சொன்னவாறு அளக்கும் நூலுக்கு மஞ்சள் சந் தனம் வாசனைத் திரவியம் முதலியன பூசி, கற்பூர தீப தூபம் காண்பித்து, விக்கினங்களைப் போக்குபவராகிய விநாயகமூர்த்தியை மிகுந்த அன்புடன் தியானித்து, அளக்க வேண்டியது. வெறுங் கயிற்றால் அளந்தால் ஆயுசு குறையும். இந்த அளவானது பதினாறு வய துக்கு மேற்பட்டவர்களுக்கே தக்கது.

புருஷ சாமுத்திரிகம் முற்றிற்று.

---

# ஸ்திரீ லக்ஷணம்

உள்ளங்கால்:—தாமரை யிதழ்போன்ற நிறத்தையுடை யவள், இராஜாத்தியாவாள். வெளுத்தாவது பொன்னி றமாவது இருந்தால், செல்வமுடையவள். பச்சிலை போன்ற நிறமுடையவள், குரூரமாயிருப்பாள். கறுத்தி ருந்தால் துக்கத்தை யனுபவிப்பாள். மிருதுவானால் போகியாய், லோக பூஜ்யத்தை அடைவாள். உள்ளங் காலில் அடிக்கடி வேர்வையுடையவள், தரித்திரியாயும், சம்போகத்தில் ஆசை யுடையவளுமாயிருப்பாள், தடித்தி ருந்தாலும், தேய்ந்திருந்தாலும் தரித்திரி. பள்ளமாயிருந் தால், விபசாரி. உள்ளங்கால் உலர்ந்திருந்தாலும் பசிய ரேகை தாமரைப்பூ ரேகையாயிருந்தாலும், சம்பத்து அடைவாள்.

கால் விரல்கள்:—கோணலாய் இருந்தால் மலடியும் விதவையும் ஆவாள். நெருங்கி ஒன்றோடொன்று சேர்ந் திருந்தால், சுகமுண்டாகும். கட்டை விரலைக் காட்டிலும் பக்கத்து விரல் நீண்டிருந்தால், குரூரம் உடையவளா யும், விபச்சாரியாயும் இருப்பாள். இந்த இரண்டும் சம

மாயிருந்தால் தீர்க்க சுமங்கிலியாயிருப்பாள். சுண்டுவிரல்கள், நடக்கும் போது பூமியில் படாம லிருந்தால், விதவையும் பேதையாயுமிருப்பாள்.

**கால் நகங்கள்:**—ஒரே அளவாயும் அழகாயுமிருந்தால், இராஜாத்தியாக இருப்பாள். செவ்வையாய்ப் பிரகாசித்திருந்தால், சம்பத்து உண்டாகும். சொத்தையாயிருந்தால், தரித்திரியாயியும், லோபியாயும் இருப்பாள். நக நுனிகள் காந்தியாயும் மடியாமலும், எடுப்பாய் வளர்ந்து இலேசாயும், சிவப்பாயும் இருக்குமாயின் இராஜாத்தி ஆவாள். பசுமை நிறமானால் குரூரமாயும், கறுப்பானால் துக்கியாயும், வெளுத்திருந்தால், சாமான்னிய ஜீவனமுடையவளாயும், வளைந்திருந்தால், தரித்திரியாயுமிருப்பாள்.

**பாதங்கள்:**—சிறியவைகளானால், தரித்திரியாவாள். புறங்கால் ஆமை முதுகுபோல் இருந்தால், தீர்த்த யாத்திரை கிடைக்கும். தடித்திருந்தால் புருஷனுக்கு கண்டம். நிற்கும் போது இடது கால் பூமியில் ஊன்றியும் வலது கால் ஒதுங்கியும் இருக்குமாயின், சுமங்கலியாக மரணம் அடைவாள். வலது கால் ஊன்றில் விதவையாவாள்.

**கணுக்கால்:**—இரண்டும் சமமாயும் அழகாயும், உருண்டையாயும் இருந்தால், தனவந்தியாயிருப்பாள்.

**குதிக்கால்:**—பின்புறம் ஆலமரத்தின் பழம்போல் சிவப்பாயும், உருண்டையாயுமிருந்தால், செல்வ முடையவளாவாள்.

**நடை:**—மதம் பிடித்த யானை நடைபோலும் அன்ன நடை போலும் இருந்தால் சம்பத்துண்டாகும். பூமியதிரும்படி நடந்தாலும், நடக்கும்போது உள்ளங்கால் பூமியின்மேல் தங்காமலிருந்தாலும் தரித்திரியாவாள். நடக்கும்போது, சுண்டுவிரல் அல்லது பக்கத்துவிரல் பூமியில் படாமல் இருந்தால் விபசாரியாவாள்.

**கண்ட சதை:**—மயிரில்லாமலும் நரம்புகள் தெரியாமலும் உருண்டையாயு மிருந்தால், சௌக்கியமும் செல்வமு முடையவளாவாள். நரம்புகள் மேலே தெரிந்தாலும் மயிரிருந்தாலும் விஷேசமாய் சதையே யில்லாமலிருந்தால் விதவை. அதிகம் பெருத்திருந்தால் துக்கமும்,

தரித்திரமும் அடைந்து இதரவர்களுக்கு வேலை செய்து ஜீவனம் பண்ணுவாள். குட்டையாயிருந்தால் கவுரவம டைவாள். நீண்டு இருந்தால் தீர்க்காயுசும் ஐஸ்வரிய மும் புத்திர சம்பத்தும் அடைவாள். விசாலமாயிருந் தால் மகா ஐஸ்வரியம் அடைவாள். முழங்காலுக்குக்கீழ் தடித்திருந்தால் புருஷனுக்கு கண்டம்.

தொடைகள்:—யானை துதிக்கையைப் போலிருந்து மயிர்களில்லாமல் கெட்டியாயிருந்தால், ராஜ பத்தினியா வாள். இதில் சில லக்ஷணங்கள் மாத்திரமிருந்தால் தன சம்பத் துள்ளவளாவாள். உருண்டையாயிருந்தால், விதவையாவாள். மயிர்களிருந்தால் தரித்திரமும், புருஷ னுக்கு கண்டமும் உண்டாகும். மயிரில் சுழியிருந்தால், தரித்திரம், வைதவியம், துக்கம், விபசாரித்தனம், குலபி ரஷ்டத்தனம் உண்டாகும். ஒன்றுக்கொன்று உரைத்தி ருந்தால் புருஷனுக்கும், அத்தை மாமன்மார்களுக்கும், மச்சினருக்கும் கண்டம். சன்னமாயிருந்தால், தரித்திர முள்ளவளாவாள். சன்னமாயும் உருண்டையாயும் இருந் தால் குலத்தையும் தனத்தையும் கெடுப்பாள். நீளமாயி ருந்தால் எல்லா அவலக்ஷணங்களுக்கும் குடியிருப்பா யிருப்பாள். இடது தொடையில் எள்முனை யவ்வளவு கறுப்பு மச்சங்கள் இரண்டிருந்தால், குடிகேடியாய் வீட்டை விட்டுப்போவாள்.

யோனி:—அகலமாய், திரிகோணமாயிருந்தால், ஐசுவ ரிய சம்பத்துகள் விஷேசமாயிருந்து, அற்ளாயுசாயிருப் பாள். சிறிதாயும் அழகாயும் விஷேசமாய் மயிருள்ளதாயு மிருந்தால், தரித்திரத்தையும் துக்கத்தையும் அடைவாள். அரச இலையைப்போ லிருந்தாலும் உள் மடிப்பிருந்தா லும், புண்ணியாத்மாவா யிருப்பாள். நீளமாயிருந்தால், புருஷனுக்கும் கண்டம். இடது பக்கத்திற்கு சுழி திரும்பி யிருந்தால், துக்கத்தை யடைவாள். விசாலமாயிருந்தால், புருஷனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அவமானம் பண்ணுவாள். மேல் பாகம் ஆமை முதுகைப் போல் எடுப்பா யிருந்தால், தனமும் சந்தானமும் உடைத்தாயி ருப்பாள். கறுப்பாயிருந்தால், அற்பாயுசு. உலர்ந்திருந் தால் புருஷனுக்கும் மாமியார் மாமனுக்கும் மச்சினன் மார்களுக்கும் கண்டம். யோனிலிங்கம் காணப்படாமலி ருந்தால், மகா ஐசுவரிய முள்ளவளா யிருப்பாள்.

சூத்தாம் பட்டைகள்:—விசாலமாயிருந்து பெரியனவாய் சதையோடு கூடிக்கொண்டிருந்தால், தனமுள்ளவளாய்

சுகப்படுவாள். வலது சூத்தாம் பட்டை இடத்தைக்காட்டிலும் சிறியதாயிருந்தால், போக பாக்கியங்களையும், பெரியதாயிருந்தால், சமானிய ஸ்திதியுள்ளவளாவாள். மேலே சுழியிருந்தால் இதராளுக்கு ஊழியம் செய்வாள், தட்டையாயிருந்தால், புருஷனுக்கும் அவன் கூடப்பிறந்தவர்களுக்கும், மாமியார் மாமனாருக்கும் கண்டம். தொங்கிக் கொண்டிருக்கிற மாதிரியாகக் காணப்பட்டால், புருஷனுக்கு கண்டம்.

அரை:—எடுப்பா யிருந்தால் தனவந்தியாவாள். மயிரிருந்தால் அபகீர்த்தியும் தரித்திரமும் சம்பவிக்கும். மேலேசுழி யிருந்தால் விபசாரியாவாள். மேலும் கீழுமா யிருந்தால் விதவையாவது விபசாரியாவது தரித்திரம் பிடித்தவளாவது திருடியாவது ஆவாள்.

இடுப்பு:—சன்னமா யிருந்தால், பூஜ்யதை யடைந்து போகபாக்கியங்களை யனுபவிப்பாள். பெரியதாயிருந்தால் தரித்திரியும் விதவையும் ஆவாள்.

வயிறு:—மயிர்களில்லாமல் மூன்று மடிப்புகள் இருந்து வட்டமாயிருந்தால், மஹா ஐசுவரிய முள்ளவளாவாள். பானையைப் போலிருந்தால், துக்கத்திற்குப் பாத்திரியாவாள் பெரியதாயிருந்தால், தரித்திரமும் விதவைத்தனமும் அடைவாள். மிகவும் பெரியதாயிருந்தால் அற்பாயுசு. தொங்கிக் கொண்டிருக்கிறதாகக் காணப்பட்டால், மாமனுக்கு கண்டம். மெல்லியதாயிருந்தால், வெகுகாலம் சுமங்கலியா யிருந்து பிள்ளை பேரன்களை எடுப்பாள். இளைத்திருந்தால், சுபம். பள்ளம் பள்ளமா யிருந்தால் தரித்திரம் உள்ளடங்கி, சேர்ந்தாப்போல் ஒட்டிக் கொண்டிருந்தால், தன சம்பத்தும், சந்தானமும் உண்டாகும். வயிற்றின்பேரில் மயிர்களிருந்தால், நிர்ப்பாக்கியம் விதவையும் விபசாரியும் ஆவாள்.

நாபி:—விசாலமாயும் பள்ளமாயும் இருந்து இடது பக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கு சுழி திரும்பி யிருந்தால், புத்திரவதியும் ஐசுவரியவதியுமா யிருப்பாள். சிறியதாயிருந்தால் தனவதியாவாள். மேலே மயிர்களிருந்தால் சந்தானம் நிற்கமாட்டாது. உள்ளே சுழியிருந்தால் விபசாரியாவாள். உள்ளே மயிர்களிருந்தால் விபசாரத்திலை பிள்ளைகள் உண்டாகும்.

ஸ்தனங்கள்:—வட்டமாய் கெட்டியாய் பெரிதாய் இர ண்டும் சமமாயிருந்தால், மஹா சம்பத்து உள்ளவளா யிருப்பாள். இரண்டும் சமமாயிருந்தால் அநேககாலம் சுமங்கலி யாயிருந்து புத்திர பௌத்திரர்களைப் பெறு வாள். வலது ஸ்தனம் இடது ஸ்தனத்தைவிட சின்ன தாயிருந்தால் போக பாக்கியங்களையும், பெரியதாயிருந் தால் தரித்திர மடைவாள். கலசங்களைப்போல் வட்டமா யிருந்து மயிர்கள் இருந்தால் தனவதியாய் தாயார் வீட்டுக்கும் மாமியார் வீட்டுக்கும் கீர்த்திகொண்டு வரு வாள். மயிர்களை உடையவள் விதவையாய் தரித்திர த்தை யடைந்து வம்சத்துக்கு அபகீர்த்தியைக் கொண்டு வருவாள். முலைக்காம்புகளில் மயிர்களிருந்து சிறிதாய் வட்டமாயிருந்தால், குலத்தையும் தனத்தையும் சம்பத் தையும் அழிப்பாள். மேலே மயிர்களிருந்தால் வித வையோ மலடியோ விபசாரியோ ஆவாள். விசாலமாய் தொங்கிக் கொண்டிருந்தால் சந்தானம் நிற்காது. அதிக உயரமாயிருந்தால், சகல அவலக்ஷணங்களுக்கும், உரிய வளாவாள். குழிகள் விழுந்திருந்தால் எல்லா அனிஷ் டங்களையும் உண்டாக்கும். உலர்ந்திருந்தால் புருஷ னுக்கு கண்டம். காணப் படாமலே யிருந்தால் புருஷ னுக்கும் அவனைச்சேர்ந்தவர்களுக்கும் கண்டம்.

மார்பு:—மயிர் இல்லாமல் மிருதுவாயிருந்த பக்ஷத் தில் அதிக சௌக்கிய மனுபவிப்பாள். விசாலமா யிருந் தால் தனவதியாய் ஆபரணத்தின் பேரில் பிரியமுள்ள வளாயிருப்பாள்.

கக்ஷங்களில்:—அக்குளில் எள்ளைப்போல் கறுப்பு மச்சமிருந்தால் புருஷன் வீட்டை பாழாக்குவாள். மயிர்க ளிருந்தால் எல்லா அவலக்ஷணங்களும் உண்டாகும்.

புஜங்கள்:—அதிக பெரியனவா யிருந்தாலும் காந்தி யில்லாமலிருந்தாலும் துக்கத்துக்கு உரியவளாவாள். மயிர்கள் இல்லாமலிருந்தால், போகங்கள் உண்டாகும். சன்னமா யிருந்தாலும் மயிர்கள் இருந்தாலும் தரித்திரி யும் விதவையும் ஆவாள்.

தோள்:உயரமாயிருந்தால், கூடப் பிறந்தவர்களுக்குக் கண்டம். விசாலமாயிருந்தால் சகோதரவிருத்தி மயிர்க ளிருந்தால் விதவையும் தரித்திரியும் விபசாரியும் திருடி யும் ஆவாள். சந்தானம் நிற்காது மேலே சுழியிருந் தால் விதவையாவாள்.

புருகு:—கறுப்பாயிருந்தால், எல்லா அவலக்ஷணங்களும் உண்டாகும். ஏற்றக்குறைச்சலாயிருந்தாலும் கூனுயிருந்தாலும், துன்மார்க்கியாயும் தரித்திரியாயுமிருப்பாள். பக்கங்கள் சதையில்லாமலிருந்தால், புருஷனுக்குக் கண்டம். மயிர்கள் இருந்தால் விபசாரியோ விதவையோ ஆவாள்.

கைகள்:—சமமாயிருந்தால் தனவதியாவாள். சமமாய் இராமலிருந்தால் குலசம்பத்துகளை கெடுத்து விடுவாள். முழங்கை புஷ்டியாயிருந்தால், விதவையாவாள். கோணையாயிருந்தால், மலடியும் விதவையும் ஆவாள். சன்னமாயிருந்தால் தனவதியவாள். தாமரைபோல் மிருதுவாய் இருந்தால் மஹா ஐசுவரிய முண்டாகும். உலர்ந்திருந்தாலும் நரம்புகள் மேலே தெரிந்து கொண்டிருந்தாலும் இரண்டும் ஒரு மாதிரியாய் இல்லாமலிருந்தாலும் தரித்திரத்திற்கும் துக்கத்திற்கும் உரியவளாவாள். மணிக்கட்டுக்கள் தெரியாமலிருந்தால் சம்பத்துண்டாகும்.

உள்ளங் கைகள்:—மிருதுவாயிருந்தால், தனவதியாய் உலகத்தாரால் புகழப்படுவாள். கொஞ்சம் பள்ளமாயிருந்தால், பசுவிருத்தி. அதிக பள்ளமாவது மேடாயாவது இராமல் முக்கியமான ரேகைகள் மாத்திரமிருந்தால், அநேக காலம் போக பாக்கியங்களோடு சுமங்கிலியாயிருந்து பதிவிரதையாய் சம்போக சௌக்கியத்தை யடைந்து அநேக சந்தானங்களைப் பெறுவாள். மணிக்கட்டிவிடத்தில், ஒரு ரேகை உண்டாய் நடுவிரல் வரையிலும் போனாலும் நீண்ட ரேகைகளிருந்தாலும் போகபாக்கியங்களை யனுபவிப்பாள். சுண்டு விரலின்கீழ் ஒரு ரேகை உண்டாய் மத்திய விரலுக்கும் இரண்டாவது விரலுக்கும் மத்திய பாகம் வரைக்கும் வியாபித் திருந்தால், பூர்ணையுசு. அந்த ரேகை குறுகி அருந்தால் அதினளவைப் பார்த்து, ஆயுசை நிச்சயிக்க வேண்டியது. கட்டை விரலின்கீழ் பெரியரேகைகள் புத்திரிகளினுடைய எண்ணிக்கையையும் தெரிவிக்கும். அந்த ரேகைகள் பூர்ணமாயும் தெளிவாயும் இருந்தால் அந்த குழந்தைகள் தீர்க்காயுசாயிருப்பார்களென்றும், மறைந்திருந்தால் கத்திரி ரேகைகளிருந்தாலும் அற்பாயுசுக் காரர்களென்று அறிய வேண்டியது. மற்றக் கைகளும் அவைகளின் பலன்களும் புருஷ லக்ஷணத்தைப் போலவேயென்று அறிந்துக் கொள்ள வேண்டியது.

நக விரல்கள்:—மிருதுவாயிருந்தால், தனவதியாயும் லோக பூஜ்யத்தையுள்ளவளாயு மிருப்பாள். விசாலமாயிருந்தால், ஊழியம் செய்து ஜீவனம் செய்வாள். சோர்ந்திருந்தால், தரித்திரியாவாள். பெருத்தனவாயிருந்தால், விதவையாவாள். நகங்கள் புழுத்திருந்தால், தரித்திரியாவாள்.

கழுத்து:—குறுகி யிருந்தால் தரித்திரியாவாள். உயரமாயிருந்தால் வெட்கங்கெட்டவளாவாள். ஒட்டையைப் போல் மிகவும் உயரமாயிருந்தால், வம்சத்தை நாசம் செய்வாள். பெருத்திருந்தால், கோபகாரியாவாள். விசாலமாயிருந்தால், குலந்தை விருத்தி செய்வாள். மிகவும் வட்டமாயும் பெருத்தும் இருந்தால், தரித்திரியாவாள். சன்னமாயிருந்தால் ஆயுரா ரோக்கிய ஐசுவரியத்தை உடைத்தா யிருப்பாள். மிகவும் சன்னமாயிருந்தால், சம்போகப் பிரியமுள்ளவளாய் சந்தான மில்லாம லிருப்பாள். சங்கத்தைப் போலிருந்தால் பிறந்த வீட்டுக்கும் மாமியார் வீட்டுக்கும் கீர்த்தி கொண்டு வருவாள். தாமரையைப் போலிருந்தால், புருஷனை விட்டு விட்டு இஷ்டப் பிரகாரம் சஞ்சரிப்பாள் பக்கத்தில் என்ளைப்போல் கறுப்பு மச்சமிருந்தால், முதலில் பிள்ளையைப் பெறுவாள் மேலே சுழியிருந்தால், மலடியாவாள், மூன்று ரேகைகளிருந்தால் பாக்கியவதியாவாள்.

மேவாய் கட்டை:—கறுப்பாயிருந்தால் மிகவும் கெட்டவளாயிருப்பாள். மேவாய் கட்டையின் பேரில் மயிர் இருந்தால், புருஷனோடு சண்டை பிடித்துக் கொண்டிருப்பாள்.

உதடுகள்:—கறுப்பாயிருந்தால், துஷ்டவதியாவாள். பவழத்தைப்போல் இருந்து மிருதுவாயும் சன்னமாயுமிருந்தால், பதிவிரதையாய் கீர்த்தி யடைவாள். பக்கங்கிலாவது மேலேயாவது மயிர்களிருந்தால், தரித்திரியாவது போகியாயாவது இருப்பாள். மேல் உதடின்பேரில் மீசையைப் போல் மயிர்களிருந்தால், துக்கத்திற்குரியவளாவாள். அல்லது புருஷனோடு சண்டை பிடித்துக் கொண்டிருப்பாள் அல்லது விதவையாவாள். மேல் உதடு உயரமாயிருந்தால், சண்டைக்காரியாவாள். பெரியதாயிருந்தால், விபசாரியாய் குலத்தைக் கெடுப்பள். கீழ் உதடு மிகவும் பெரியதாய் தொங்கிக் கொண்டிருந்தால்,

தரித்திரம் துஷ்டியுமாவாள். கீழ் உதடை கொஞ்சம் திறந்தால் தாமரை போல் அல்லது வேப்பம் தழையைப் போல் வர்ணத்தை உடையதா யிருந்தால் ராஜ பத்தினியாவாள்.

வாய்:—மிகவும் பெரியதா யிருந்தால், புருஷனை விட்டு விடுவாள், வெண்மையா யிருந்தால் குரூபியா யிருப்பாள்.

பற்கள்:—சமமா யிருந்தால், ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாகும். கோணலாய் மேலும் கீழுமாயிருந்தால், வம்சத்திற்கு அபகீர்த்தியைக் கொண்டு வரும் திருடியாவாள். சந்து விட்டாவது கனமாயாவது இருந்தால், விசேஷதுக்கம். பள்ளமாயிருந்தால், அதிக துர்மார்க்கியாவாள். உயரமாயிருந்தாலும் வரிசைதப்பியிருந்தாலும், பார்க்கிறதற்கு அசங்கியமா யிருந்தாலும் கறுப்பாய் பாசி பிடித்திருந்தாலும் துக்கத்திற் குரியவளாவாள். மல்லிகை மொட்டைப் போலிருந்தால், புருஷன் தனிகனாவான். மிருதுவா யிருந்தால் சுகவதியாவாள். வெந்தயத்தைப் போலிருந்தால், புருஷனை விட்டுப் பல புருஷனைச் சேருவாள்.

நாக்கு:—பெரியதா யாவது தடித்தாவது இருந்தால், தரித்திரியும் பாபியுமாவாள். பச்சையா யிருந்தால், துராத்துமா ஆவாள்.

கண்டத் தொனி:—நன்று யிருந்தால், ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டா யிருக்கும் கோகில சுரத்தைப் போலாவது கிளி கொஞ்சுவதைப் போலாவது, ஹம்ஸ சுரத்தைப் போலாவது இருந்தால், சுப லக்ஷணங்களை உடைத்தா யிருப்பாள். காக்கைத் தொனியைப் போலிருந்தால், விதவையாவாள். பெண் பூனைத் தொனியைப் போலிருந்தால், முன்கோபியும் திருடியும், பிள்ளைகளைக் கொல்லுபவளாயு மாவாள். எருது சப்தத்தைப் போலிருந்தால், தரித்திரியாய் குலத்திற்கு அபகீர்த்தி கொண்டு வருவாள்.

மூக்கு:—நீண்டிருந்தால் ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாகும். தொள்ளை மூக்குள்ளவள், தரித்திரியும் பாபியும் ஆவாள். பள்ளமாயிருந்தால் புருஷனைப் பாழாக்குவாள். மிருதுவாயிருந்து சிறிய சிறிய துவாரங்

கள் சமமாய் காணப்பட்டால், சம்பத்துள்ளவளாவாள். இடது மூக்கின் பேரில் எள்ளைப் போல் கறுப்பு மச்சங்கள் இருந்தால், தன தானிய முள்ளவளா யிருப்பாள். மயிர்களிருந்தால், திர்தாக்ஷணியமும் குரூரமுள்ளவளுமாவாள். துவாரங்களில் மயிர் சுழி திரும்பியிருந்தால், எல்லா அவலக்ஷணங்களும் உண்டாயிருக்கும்.

கண்கள்: தாமரை இதழ்களைப் போல் அழகாய் விசாலமா யிருந்தால் ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாயிருக்கும். எறும்பைப் போல் சன்னமாயிருந்தால், தரித்திரியும் விசேஷ சம்போகத்தை விரும்புகிறவளுமா யிருப்பாள். கோணையாயிருந்தால், பாபியாயிருப்பாள். வட்டமாய் இருந்தால், புருஷனை பாழாக்குவாள். குமுதத்தைப் போலிருந்தால், சம்பத்து உண்டாகும். பச்சையா யிருந்தாலும் கோதுமை வர்ணமா யிருந்தாலும் விபசாரியாவாள். கபிலவர்ணமா யிருந்தால் குலத்தையும் தனத்தையும் நாசமாக்குவாள். பூனைக் கண்களை உடையவள் துஷ்டையாயும் விபசாரியுமா யிருப்பாள். தேன் நிறக் கண்களை உடையவள் அதிருஷ்டவதியாய் இருப்பாள். வாக்குக் கண்ணையிருந்தால், தனவதியாவாள், கண்கள் வாடினமாதிரியாக இருந்தால், குலத்திற்கு அபகீர்த்தியைக்கொண்டு வருவாள், தரித்திரியாவாள். முட்டைகண்களாவது நாங்கிமூஞ்சி பார்வையாவது மந்த திருஷ்டியாவது இருந்தால், துஷ்டையும் தரித்திரியும் ஆவாள் ஒரே திருஷ்டியுள்ளவள் தீர்த்தயாத்திரை செய்வாள். ஓரப்பார்வையாளல் தரித்திரம். கோணைப்பார்வையுள்ளவள் துர்மார்க்கியாய் குலத்தைக்கெடுப்பாள். சஞ்சல பார்வையுள்ளவள் விதவையாய் விபசாரிதனம் செய்வாள். கண் இரப்பைகள் சிவப்பாயிருந்தாலும் கோணலாயிருந்தாலும், பரமதரித் திரியாவாள்.

கண்புருவம்:—விசேஷ அகலமா யில்லாமல் பாலசந்திரனைப்போல் வளைவாயிருந்தால், தனவதியாவாள். வில்லைப்போல் வளைந்து இரண்டும் சேராமலிருந்தால், சம்பத்து உண்டாயிருக்கும், புருவங்கள் இரண்டும் சேர்ந்திருந்தால். துர்மார்க்கியும் தரித்திரியும் ஆவாள். புருவத்தில் சுழியிருந்தால், குலத்தைக் கெடுக்கும்.

முகம்:—பூர்ணசந்திரனைப் போலிருந்தால் பூஜ்யதையுடையவள் ஆவாள். தாமரைப் போலிருந்தால், சுகமனுபவிப்பாள், கறுப்பாயிருந்தால், துர்மாக்கியாவாள், உப்பியிருந்தாலும் வாடியிருந்தாலும் புருஷனுக்கு கண்டம்,

சன்ன மாயிருந்தால், புத்திரன் பேரன்களைப் பெற்றுச் சுகமனுபவிப்பாள். புருஷ முகத்தைப் போலிருந்தால் பாபியும் குரூரவதியும் தரித்திரியும் ஆவாள்.

நெற்றி:—விசாலமாயிருந்தால், புருஷனுக்கும் மாமனுருக்கும் கண்டம். பள்ளமாயிருந்தால், மச்சினனுக்குக் கண்டம். எள்ளைப்போல் கறுப்பு மச்சமிருந்தால், முதலில் பிள்ளையைப் பெறுவாள். நெற்றியில் சுழியிருந்தால், விபசாரியும் விதவையுமாவாள். மத்தியில் மயிர்களோடு சுழியிருந்தால், விவாககாலத்தில் புருஷன் இறந்து போவான். பக்கத்தில் சுழியிருந்தால், விபசாரியாவாள். நெற்றி அர்த்த சந்திரனைப் போலிருந்தால், சம்பத்து உண்டாகும்.

தாடைகள்:—கறுப்பாயிருந்தால் தரித்திரம், துர்மார்க்கியும் ஆவாள். மயிர்கள் இல்லாமலிருந்தால் போகியாவாள். பக்கத்தில் ஜில்பாக்கள் இருந்தால், எல்லா அவலக்ஷணங்களுக்கும் இருப்பிடமாவாள். மேலே குழிகள் விழுந்திருந்தால், பாபியும் தரித்திரியும் ஆவாள். சிரிக்கும்போது குழிவிழுந்தால், விபசாரியாவாள்.

காதுகள்:—அதிக நீள மில்லாமல் சதை பிடித்திருந்தால் தனவதியாவாள், மிருதுவாயிருந்தால், ரத்தினாபரணங்களை தரிப்பாள். இரண்டும் சமானமாயில்லாமலிருந்தால், துக்கத்திற்குரியவளாவாள். மயிர்கள் இல்லாமலிருந்தால், போகியாவாள். மயிர்கள் இருந்தால், தரித்திரியும் புருஷனோடு சண்டையிடுகிறவளுமா யிருப்பாள்.

கன்னங்களின்:—மயிர்கள் சுழி திரும்பியிருந்தால் சகல அவலக்ஷணங்களும் உண்டாகும்.

தலை:—பெரியதாயிருந்தால், துர்மார்க்கியாவாள். பின் பக்கம் எடுப்பாயிருந்தால், புருஷனுக்கு கண்டம். விசாலமாயிருந்தால், அற்பாயுசுள்ளவளாவாள்.

தலைமயிர்கள்:—சுருள் சுருளாயிருந்தால், ஐசுவரியவதியாவாள். நீண்டு விரிந்திருந்தால், பாபியாவாள். குட்டையாயிருந்தால், தனவதியாவாள். கொஞ்சம் நீலவர்ணத்துடன் குறுகி இருந்தால், புருஷனை தனவந்தனுக்குவாள். அதிக நீளமாயிருந்தால், வேசியாவாள். இந்திர நீலமாயிருந்தால், தனசம்பத்துக்களை அனுபவிப்பாள். மழமழ வென்றிருந்தாலும் கறுப்பாயிருந்தாலும்,



கோ. வெங்கடாசல சர்மா, அரும்... விருதுநகர்

பதிவிரதையும் தனவதியும் ஆவாள். சிவப்பாயிருந்தால், அதிக தரித்திரியாவாள். கபிலவர்ணமாயிருந்தால், சுகவதியாவாள். முனைகள் தெரியாமல் முகத்தில் பட்டுக் கொண்டிருந்தாலும் முரட்டு மயிர்களாயிருந்தாலும் துராத்மாவும் தரித்திரியும் விதவையும் ஆவாள். குதிரை வாலைப்போல் பிசுவாயிருந்தால், புருஷனோடு சண்டை செய்து கொண்டிருப்பாள். முன்மயிர் கோணலாயிருந்து முகத்தில் பட்டால், போகபாக்கியங்கள் உண்டாயிருக்கும் தலையில் மயிர்கள் சுழிபட்டிருந்தால் விதவையாவாள்.

தேகம்:—ரத்த வர்ணமாயிருந்தால் லோக பூஜ்யதையுள்ளவளாவாள். மிருதுவாயிருந்தால், ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாயிருக்கும். மிகவும் உயரமாயிருந்தாலும், மிகவும் குட்டையாயிருந்தாலும், மிகவும் தடித்திருந்தாலும், அதிக சன்னமாயிருந்தாலும், மோசகாரியும் தரித்திரியும் ஆவாள். கெட்டியாயிருந்தாலும் கிழதேகமாயிருந்தாலும் துராத்மா ஆவாள். இளைத்திருந்தால், வேசியாவாள். எந்த அவயத்திலாவது வெட்டுமாதிரியிருந்தால் தரித்திரியாவாள். வலது பக்கத்திலிருக்கும் அங்கம் ஏதாவது இடது பக்க அங்கத்தைக் காட்டிலும் சிறியதாயிருந்தால், போகபாக்கியங்களை யனுபவிப்பாள். பெரியதாயிருந்தால், தரித்திரத்தை யடைவாள்.

ஸ்திரீ லக்ஷணம்

முற்றிற்று.

---

# ஸ்திரீ சாமுத்திரிகம்.

ஸ்திரீகளுக்குகடைந்த இலக்ஷணங்கள் பலவாயினும் அவற்றுள் சிறந்தவை முப்பத்திரண்டாம். அவை யாவன:—

ஐந்து இடம் நீண்டும், ஐந்து மிருதுவாயும், ஆறு உயர்ந்தும், ஏழு சிவந்தும், மூன்று விசாலமாயும், மூன்று குறுகியும், மூன்று தாழ்ந்து மிருக்கவேண்டும்.

நீண்டு இருக்க வேண்டிய ஐந்து இடங்களாவன:— கண், காது, கை, முழங்கால், மூக்கு இவைகளாம்.

மிருதுவாய் இருக்கவேண்டிய ஐந்து இடங்களாவன:— மயிர், விரல், நகம், தோல், பல் இவைகளாம். உயர்ந்து இருக்கவேண்டிய ஆறு இடங்களாவன:— நெற்றி, தோள், வயிறு, அக்குள், மார்பு, புறங்கை இவைகளாம். சிவந்திருக்க வேண்டிய ஏழிடங்களாவன:— கடைக்கண், உள்ளங்கை, உள்ளங்கால், உள்நாக்கு, உதடு, வாய், நாக்கு இவைகளாம். விசாலமாய் இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:— துடை, மார்பு, நெற்றி இவைகளாம். குறுகி இருக்கவேண்டிய மூன்றிடங்களாவன:— கழுத்து, முழங்காலின் கீழ், அல்குல் இவைகளாம். தாழ்ந்திருக்க வேண்டிய மூன்றிடங்களாவன:— நடுமார்பு, நெற்றியின் கீழ்ப்பாதி, உந்தி இவைகளாம். இந்த இலக்ஷணங்கள் முப்பத்திரண்டையும் குறைவின்றி அமையப் பெற்றவள் இராஜ பத்தினியாவாள்.

தலை:— தலையானது நீண்டும், கோணி, மேடுபள்ளமில்லாமலிருந்தால், சிறந்தது. தலையானது பருத்திருந்தால், வறுமை. யானை மத்தகம்போல் திரண்டு, உயர்ந்திருந்தால், தன் கணவனுக்கு தீர்க்காயுள், அரசு. அதிக சிறியதா யிருந்தால், புத்தியின்மை.

தலைமயிர்:— தலைமயிரானது அதிக நீண்டு, பிளவுபடாத நுனியை உடையதாகி, பிரகாசமாகி, மேகம் கருவண்டு இவைகளின் நிறம் போன்று கறுத்து, நுனியில், வளைந்து, மணம்பெற்று நெருங்கி இருந்தால், வளமை, அதிகசெல்வம் குறுகியிருந்தால், வறுமை. மழமழப்பாயும், மெதுவாயும், இரட்டையாகவன்றி, ஒவ்வொன்றாகவும் முளைத்துமிருந்தால், சிறந்தது. அதிக நீலவர்ணமாயிருந்தால், விதவையாதல். கொஞ்சம் நீலவர்ணமா யிருந்தால், பதிக்கு ஐசுவரியம். தொங்குகிற மயிரிருந்தால், தரித்திரம். தலையில் சுழியிருந்தால், விதவை. மழமழப்பில்லாத நுனிமயிரிருந்தால் கலகப்பிரியாள்.

முகம்:—முகமானது தாமரையின் மணத்தைப்போல் மணமுள்ளதும், சந்திரனைப் போன்றதுமா யிருந்தால், நன்று. அதிக விசாலமாய் இருந்தால், கணவனுக்கும், மற்றவருக்கும், அவமானம் வருவித்தல். தவடை பருத்துள்ள முகமானால், செல்வம். நிர்மலமா யிருந்தால் யாத்திரை. முகத்தில் திலகம் போல், கறுத்த ரேகை

யிருந்தால், ஆண்பிள்ளை பெறுதல். முகமானது சிறுத்திருந்தால், சுகம், பிள்ளைப்பேறு. முகத்தில் சுழியிருந்தால் விதவை.

நெற்றி:—நெற்றியானது அர்த்த சந்திரன் போன்று, மயிர் நரம்பின்றி, சதை உடையதாகி, கூந்தலுக்கும் புருவத்திற்கும், இடையில் மூன்று விரல் அகலமிருந்தால், செல்வம், ஆரோக்கியம், சுமங்கிலியம். நெற்றியானது தொங்கியிருந்தால், மைத்துனன் மரணம். உயரமாயிருந்தால், சிறந்தது.

புருவம்:—புருவமானது கறுத்து, வளைந்த வில்லை ஒத்திருந்தால், சிறந்தது. புருவங்கள் ஒன்றோடொன்று சேராமலும், அதிக விசாலங்களாகாமலும், மூன்றும் பிறைச் சந்திரன் போல், கோணியுமிருந்தால், செல்வம் சிறந்தது. உயர்ந்து, அகன்று இருந்தால், சௌக்கியம்.

கண்:—கண்கள் கடையிற் சிவந்து, பசுவின்பால் போல் வெளுத்து, கருவிழி அதிககறுப்பாகி, அழகாய் கறுத்த மயிரையுடைய இமையைப் பெற்றிருந்தால், இன்பம். கண்கள் காய்ந்ததும், பொன்னிற முள்ளதும், கறுப்பும் சிவப்பும் கலந்ததுமாயிருந்தால், விபசாரியாதல். கருநெய்தலின் காந்தியை வெல்லுகிற காந்தியை உடைத்தாயிருந்தால், சிறந்தது. பூனைக்கண்களை ஒத்திருந்தால், வீடுநாசம். உருண்டையா யிருந்தால், கணவனுக்கு தீங்கு. நீர் அடைந்ததாயிருந்தால், விபசாரம். மிருதுவாய் இருந்தால் ரத்திைபரணம்.

மூக்கு:—மூக்கானது உருண்டு, நேராகி, இருதுளையும், சரியாக உடையதா யிருந்தால், சிறந்தது. எள்ளின் புஷ்பத்தைப் போன்றிருந்தால், சுபம். சொட்டையாயிருந்தால், கணவன் வீடுநாசம். மூக்கில் மயிரிருந்தால், பொறுமை. இடது மூக்கில் யவரேகை யிருந்தால் தன தானியம்.

வாய்-பற்கள்-நாவு:—வாயானது கொவ்வைப் பழம் போல் சிவந்து நேர்வரைகளை உள்ளதாயின், தனம். பற்கள் பருத்து, அழுக்கற்று, ஒழுங்கில்லாமல், கறுத்த மாம்சத்தைப் பெற்றிருந்தால் துக்கம், திருட்டுத்தனம். மல்லிகைப்புட்பத்தை ஒத்திருந்தால், பாக்கியம். கனத்திருந்தால், தரித்திரம். பசுவின் பால்போல் வெளுத்து,

மழமழப்புடையதாகி, இரண்டு வரிசைகளும் சரியாகி, முப்பத்திரண்டா யிருந்தால், சுபம். பிரகாசமாயிருந்தால், பிரபுத்நினியாதல். அடர்ந்திருந்தால், புருஷனுடைய வீடுநாசம். ஓணான் பற்களைப்போல் சிவந்திருந்தால், கணவனிடத்தன்பு. குறுக்கத்தியின் மொக்கை ஒத்திருந்தால், சுகம், செல்வம். நாவானது பச்சை நிறமாயிருந்தால், தரித்திரம். நீண்டிருந்தால், பசு உடமை.

உதடு - மேல்வாய்:—மேல் உதடு உயர்ந்திருந்தால், கலகத்தில் பிரீதி. மேல் கீழ் உதடுகளில் மயிர்களடர்ந்திருந்தால், அசுப லக்ஷணம். கீழ்உதடானது, செம்பருத்தி போன்றதும், கோவைப் பழத்தை ஒத்ததும், சதை பருத்து மிருந்தால், சுகம், செல்வம். உதடுகள் பற்களிடமாக நெருங்கி யிருந்தால் துன்பம். மெல்லியதாயிருந்தால், கணவனிடத்தன்பு. சிவந்து உருண்டு, மழமழப்பாகி, நடுவிரல் ரேகையால் அலங்கரிக்கப்பட்டிருந்தால், ராஜ பத்தினியாதல். மோவாய் தசைபற்றி வட்டமாகி, இரண்டு அங்குல நீளமிருந்தால், சிறந்தது. மோவாய்க்கட்டையில் மயிரில்லாதிருந்தால், சௌக்கியம். பெண்களுக்கு மீசையிருந்தால், அசௌக்கியம், பாபம்.

கன்னம் தவடை:—சிரிக்கும்போது ஸ்திரீகளுடைய கன்னங்களில் பள்ளம் விழுந்தால், விபசாரம். தவடையில் மயிரிருந்தால், புத்திரசம்பத்தின்மை. தவடையில் நதியின் சுழியை ஒத்த சுழியிருந்தால், பிரபுவின் பத்தினியாதல். தாடையானது உயர்ந்திருந்தால், பாக்கியம். கன்னமானது பருத்து உருண்டிருந்தால், சுபம்.

செவி:—செவிகள் மெதுவாயிருந்தால், ரத்தினாபரணமுடைமை கெட்டியாயிருந்தால், ஆபரணம். மாம்சத்தைப் பெற்றவைகளும், மெதுவானவைகளும், ஒன்றோடொன்று சரியானவைகளும், சப்தத்தைக் கேட்பதில் ஜாக்கிரதை உடையவைகளுமா யிருந்தால், சிறந்தது. நன்றாகதொங்குகிறவையும், சுபமானசுழலை உடையவையுமா யிருந்தால், சுபம். மயிரில்லாதிருந்தால், சௌக்கியம்.

கழுத்து - பிடரி:—கழுத்தானது குறுகி யிருந்தால், தரித்திரம். நீண்டிருந்தால், வம்சக்ஷயம். பருத்திருந்தால் குரூரசுபாவம். சதைபருத்து, உருண்டை வடிவாயும், நாலங்குல அகலமுள்ள தாயுமிருந்தால், சிரேஷ்டம்.

சங்குபோல் உயர்ந்திருந்தால், தனம், சுபம். கழுத்தில் சுழியிருந்தால், சந்தானமின்மை. திலகம்போல் கறுத்த மச்சமிருந்தால், ஆண்பிள்ளை உடைமை. மூன்று ரேகை யிருந்தால், ராஜ்ஜியம்.

தோள்:—தோள்கள் உயர்ந்திருந்தால், அதிக ஆயுசு. மேற்புஜம் தாழ்ந்திருந்தால், துன்பம். பருத்திருந்தால், அதிக செல்வம். சிறுத்திருந்தால், அதிக துக்கம். மறைந்திருக்கிற எலும்பை உடையவைகளாகியும், மெதுவா யிருப்பவைகளுமாகியும், நரம்பு மயிர்கள் இவைகள் இன்றியும் இருந்தால், சிறந்தது. தோளில் மயிர் மிகுதியாய் இருந்தால், விபசாரம். மயிரில்லாதிருந்தால், சௌக்கியம். இடது தோளில் இடச்சுழி மயிரிருந்தால், அரசாட்சி. இரண்டு தோளிலும் உயர்ந்த ரேகை இருந்தால், செல்வம். தாழ்ந்த ரேகையிருந்தால், ஆயுசு. வலது புஜத்தில் மருவிருந்தால், வெற்றி, அன்னம் கிடைத்தலரிது. இடது புஜத்தில் மருவிருந்தால், போகமின்மை, திரவியச் சேதம், பழிச்சொல்.

கை:—கைகள் முழங்காலுக்குக்கீழ் நீண்டிருந்தால், செல்வம். முழங்கால் வரையில் நீண்டிருந்தால், கற்பு. முழங்காலுக்குமேல், ஒருவிரல் உயரமிருந்தால், நல்ல போஜனம். இரண்டுவிரல் உயரமிருந்தால், விபசாரியாதல். மூன்று விரல் உயரமிருந்தால், அழகு. நான்கு விரல் உயரமிருந்தால், புணர்ச்சியின்மை. ஐந்து விரல் அல்லது அதற்குமேல் உயரமிருந்தால், கிலேசம், வறுமை. கைகள் அதிக குட்டையானால், வசீகரம். பருத்து மிருதுவாயிருந்தால், அழகு, செல்வம். அதிகமாய் பருத்திருந்தால், போகமின்மை. சிறுத்திருந்தால், கிலேசம். உலர்ந்து நரம்புகளால், வியாபிக்கப்பட்டிருந்தால், சுகம். தாமரை மலரின் காந்தியைப் போன்றும், நொருங்காமல் இருக்கிற கணுக்களை உடைய விரல்களை உடையவையுமா யிருந்தால், ராஜ பத்தினியாதல். புறங்கை மிருதுவாயிருந்தால், அதிக செல்வம். கைகளில் நரம்பு பெருத்தால், வறுமை மயிர் அதிகமாயிருந்தால், புருஷனைக் கொல்லல்.

அக்குள்:—அக்குள் உயர்ந்திருந்தால், செல்வம், தாழ்வு, வறுமை. அழல் நாற்றம் உடையதாயிருந்தால், போகம். சுண்ணாம்பு வாசனையை ஒத்திருந்தால்,

வறுமை. யானை மூத்திரம் போன்ற வாசனையை உடைத்தாயிருந்தால், பாடுவதில் இச்சை. அக்குளில் இளநீர் வாசனை வீசினால், நல்ல ஆடை. தாமரைப்பூ வாசனை வீசினால், நல்ல பொசிப்பு. மயிர், நாற்றம் இல்லாமலிருந்தால், அரசு, அற்பபோகம். சிவந்த மயிரிருந்தால், தரித்திரம். கறுத்த மயிரிருந்தால், செல்வம். பருத்த மயிரிருந்தால், பலம். கறுப்பு மச்சமிருந்தால், பதி வீடு நாசம்.

உள்ளங்கை:—உள்ளங்கை அற்பமாய் சிவந்திருந்தால் செல்வம், கறுத்திருந்தால், துக்கம். தாமரை மலரை ஒத்திருந்தால், சிறப்பு. வெளுத்து மழமழப்பின்றி இருந்தால், தரித்திரம். பள்ளமாகாமலும், உயராமலும், சமான ரேகைகளை உடையதுமாயிருந்தால், சுமங்கிலியாதல், பிள்ளை சுகம், தனம்.

## பின்வரும் அஸ்த சாஸ்திரத்தை பெண்களுக்கு இடது கையில் பார்க்கவும்.

உள்ளங்கை ரேகைகள்:—உள்ளங்கையில் கூஜா, சிங்காசனம், குண்டலம், தோரணம், வேதிகை, ஸ்வஸ்திகம், அங்குசம், யவதானியம், மாலை, பாணங்கள், தேர், குதிரை, யானை, கற்பவிருக்ஷம், மத்ஷயம் இவைகளை ஒத்த ரேகைகளிருந்தால், ராஜபத்தினியாதல். சென்னாய், கழுகு, கோட்டான், சர்ப்பம், இவைபோன்ற ரேகைகளிருந்தால், தரித்திரம். சங்கு, சக்கரம் போன்ற ரேகையிருந்தால், அதிகதிரவியம். மச்சரேகையிருந்தால், செல்வம், தானமின்மை. உள்ளங்கையின் ரேகை கும்பம் போன்றிருந்தால், பொறையுடையவளாயிருத்தல். வெண்சாமரை போன்றிருந்தால், வெகுபெயர்களுடன் வாழ்தல். தாமரைபூப்போன்றிருந்தால், லக்ஷ்மிவாசம். மாதுபோன்றிருந்தால், போகம். ரிஷபம் போன்றிருந்தால், வாகனங்கள். உள்ளங்கையில் நடுரேகையானது, மணிக்கட்டிலிருந்து இடது நடுவிரல் நுனிமட்டும் போயிருந்தால், அதிக செல்வம், பதிவிரதை. நடுவிரல் அடிவரையும் நின்றால், திரவியம். சிறுவிரல் அடிவரையுமிருந்தால், செல்வம். சிறுவிரல், நடுமட்டுமிருந்தால், ஆடையாபரணம், மனக்கிலேசம். தர்ஜனிவிரல் அடிபட்டும் இருந்தால், காமம், சொற்சிரேஷ்டம். பெருவிரல் மட்டும் நின்றால், அநேகபுருஷரைச் சேரல். உள்ளங்கை வரையும் நின்றால், செல்வம், பிள்ளை. அந்த நடுரேகை உள்

ளங்கையில் இல்லாமலிருந்தால், மூடம். ரேகைகள் பருத்து குகை நிறமாயிருந்தால், பாபம். சுவல்பமாயிருந்தால், சுபம்.

கை பெருவிரல்:—கை பெருவிரலானது சிவந்து, நீண்டு, திரண்டிருந்தால், அழகு, செல்வம். பருத்து, குறுகியிருந்தால், உழைப்பு. பெருவிரலின் அடிவரை பருத்து ஒன்ருனல் செல்வம். பலவானல், துன்பம். நடுவரை ஒன்ருனல், தானியமுடமை. பலவானல், போகம். மேல்வரை ஒன்ருனல், அலைந்து திரிதல். பலவானல், அழகு. ஈகை, உடமை. பெருவிரலின் இறைக்கு மேல் வலச்சுழி யிருந்தால், செல்வம். இடச்சுழியிருந்தால், விபசாரம், ஆயுசு, துன்பம். பெருவிரலின் அடியில் உள்ள ரேகைகள், பிரசவத்தை அறிவிக்கின்றன; அவை நீண்டு இருந்தால், பிள்ளையுடமை. குறுகியிருந்தால் பெண்களுடமை. நடுவிரல் அருமலிருந்தால், தீர்க்காயுசு உடைய குழந்தைகள். அறுந்திருந்தால், அற்பாயுசு உடைய பிள்ளைகள். இடது பெருவிரலில் மருவிருந்தால், போகம். வலது பெருவிரலில் மருவிருந்தால், பாவச் செயல்களைச் செய்தல்.

கை சுட்டுவிரல்:—சுட்டுவிரல் சிவந்து, திரண்டு நீண்டிருந்தால், அழகு. சுட்டு விரலின் அடிவரை ஒன்ருனல், கற்பு. பலவானல், விபசாரியாதல். நடுவரை ஒன்ருனல், அதிக விபசாரம், மனக்கிலேசம். பலவானல், உபசாரவார்த்தை உடையவளாதல். மேல்வரை ஒன்ருனல், அற்பசுகம். கற்பு. பலவானல், விபசாரம், மறைக்கப்படாமை. மேல்வரைக்கு மேல் வலச்சுழியானல், தெய்வபக்தி உடமை. மேல் இரைமடிப்பாகவிருந்தால், அதிகசெலவு. சுட்டு விரலில் மருவிருந்தால், மந்தபுத்தி.

கை நடுவிரல்:—நடுவிரல் சிவந்து, திரண்டு, நீண்டிருந்தால், வெகுலக்ஷண முடமை. நடுவிரலின் அடிவரை ஒன்ருனல், அதிக சலிப்புடமை. பலவானல், அற்பாயுள், அற்பசுகம். நடுவரை ஒன்ருனல், ஆயுசு சுகம். பலவானல், ஊனுடமை. மேல்வரை ஒன்ருனல் போகம், பலவானல் அதிகசெல்வம். மேல் இறைக்குமேல் வலச்சுழி இருந்தால், எல்லாரிடத்தும் நன்மையா யிருந்தால், இடச்சுழி இருந்தால், கோபமுடைமை. மேல் இறைமடிப்பாயிருந்தால், அமங்கிலியாதல். நடுவிரல் மருவிருந்தால், ஆயுசு.

கை அணிவிரல்:—அணிவிரலின் அடிவரை ஒன்ருனல், பூஷணம். பலவானல், அதிகசெல்வு நடுவரை ஒன்ருனல், வறுமை, பலவானல் சிறிது நாள் செல்வம், சிறிது நாள் வறுமை, மேல்வரை ஒன்ருனல். யாத்திரை. பலவானல், காமம். மேல் இரைக்கு மேல் வலச்சுழி இருந்தால், உபகாரியாதல். இடச்சுழி இருந்தால், ஆங்காரியாதல். மோதிரவிரலில் மரு இருந்தால், அதிக செல்வம்.

கை சிறுவிரல்:—சிறுவிரலின் அடிவரை ஒன்ருனல் ஒரு விவாகம். இரண்டானல், இரண்டுவிவாகம். மூன்று அல்லது பலவானல், மூன்றுக்குமேல் விவாகம் சிறுவிரலில் மரு விருந்தால், மலடு. சுண்டு விரலின் அடியின்றி உண்டான ரேகையானது சுட்டுவிரலுக்கும், நடு விரலுக்கும் நடுவில் நின்ருல், தீர்க்காயுசு இந்தரேகை முறையே குறைந்தால், ஆயுசானது முறையே குறையும்.

கை விரல்கள் பொது:—விரல்கள்சிவந்து மிருதுவாயுமிருந்தால், அழகு, ஆயுசு. பருத்து குருகியிருந்தால், உழைப்பு. அழகிய கணுக்களை உடையவையும், உருண்டு, நீண்டிருப்பவையுமாயிருந்தால், சுகம், செல்வம். நிமிர்ந்திருந்தால், பசுக்கள் உடமை. இடது கையில் ஆறு விரலிருந்தால், சம்பத்து. விரல்களில் ரேகைகள் பிரகாசமாயிருந்தால், சிறந்தது.

கை நகங்கள்:—நகங்கள் மழமழப்பாயும், உருண்டும், உயர்ந்தும், சிவந்தும் இருந்தால், அதிக செல்வம். வெளுத்திருந்தால், சீலமின்மை. விகார வர்ணமாயிருந்தால், தரித்திரம். சொற்றையாயிருந்தால், உழைப்பு. தட்டையாயிருந்தால், வஞ்சனை.

மார்பு:—மார்பானது அகலமாயிருந்தால்,கண்டாபரணம் தரித்தல். தன்கையால் பதினெட்டு அங்குலமிருந்தால், உலகாளல், பதினேழு அங்குலமானல், செல்வம். இதற்கு குறைந்தால், அதிக செல்வம். இருபது அங்குலமிருந்தால், அநேகம் பெண்கள் தனக்கு வேலைசெய்தல். இதற்குமேல் எத்தனை அங்குலம் விசாலமாயிருந்தாலும், அற்பாயுசு. பருத்து, உயர்ந்து, மயிர்களின்றி யிருந்தால், சிறந்தது. மிருவாயிருந்தால், தனம், சுகம்.

ஸ்தனம்:—இரண்டு ஸ்தனங்களும் ஒரு பக்கமாய் சாய்ந்தாலும் ஒருஸ்தனம் இரண்டாக காணப்பட்டாலும்,

கெடுதி. இரண்டு ஸ்தனங்களுக்கு நடுவிரல் நாலங்குல மிருந்தால், கபடு. ஸ்தனங்கள் சுரக்காய்போன்றிருந்தால், வாதநோய். அந்த பெண்ணைச் சேரும்போது துர்க்கந்தம் வீசும். சரிந்து பிறகு கூர்மையிருந்தால், விபசாரியாதல். கிண்ணம் கவிந்தாற்போல் வட்டமாயிருந்தால், அழகு. ஆயுசு. கடினமாயிருந்தால், எவரிடத்தும் அன்பில்லை, இடது கொங்கை மிருதுவாயிருந்தால், புணர்ச்சியில் நல்லவளாயிருந்தால், வலது கொங்கை மிருதுவாயிருந்தால், கோபம். வலத்தில்சரிந்தாற்போல் தோன்றினல், முதல் பிறக்கும் பிள்ளை ஆண் பிள்ளையாகும். தொங்குகிறதால், பிள்ளை பிறத்தலரிது. ஸ்தனங்கள் இரண்டும சமமாயிருந்தால், பாக்கியம். அழுக்கடைந்து பிரகாசமாகி ஒன்றுக்கொன்றுஒவ்வாதிருந்தால், துக்கம்திருட்டுத்தனம். உருண்டு உயர்ந்து கடினங்களாகியிருந்தால், சிறந்தது. பதினைந்து அங்குலம் நீண்டிருந்தால், யாவருக்கும் வசப்படுதல், காமம், வியாதி. நடக்கும்போது முலையானது பின்புறத்தில் பிதுங்கக்கண்டால், அவளை யெத்தனை விசை புணர்ந்தாலும் இந்திரியமூறும், சத்தம்பிறக்கும். முலைக்கண் கருத்திருந்தால், அழகு, ஆயுசு புத்திரர். குழிந்திருந்தால், மலடு. பதிந்திருந்தால், விபசாரம். சிவந்திருந்தால், அடக்கமான விபசாரம். நீண்டு பருத்து ஆணி நாட்டினாற்போலிருந்தால், மலடு. ஸ்தன்னியத்தில் அதிகமாக நரம்பு தோன்றினல், சேனையுடைமை. இடது கொங்கையில் பிறவி மருவாது வடுவாவது இருந்தாலும், இடப்புறச்சுழி இருந்தாலும், இராஜபத்தினியாதல், பதிவிரதாதனம். இடது கொங்கையில் வலச்சுழி யிருந்தால், இராஜ பத்தினியாயும், விபசாரியாயும் இருத்தல். இந்த குறிகளெல்லாம் வலது கொங்கையிலிருந்தால், கிலேசம், வறுமை. வலது கொங்கையில் வலச்சுழிமயிரிருந்தால் கொலை செய்தல்; மலடு. முலையில் மயிரிருந்தால், விபசாரியாய் எங்குந்திரிதல். இரண்டு கொங்கை நடுவில் பிறவி வடுவாகிலும் மருவாகிலுமிருந்தால், வித்தை, புத்தி, அவளை கூடினபிறகு மறுபடியும் கூட இஷ்டமிராது. வலது கொங்கையின் கீழிலாகிலும் மேலிலாகிலும் பக்கத்திலாகிலும் மயிரிருந்தால், சேதம். இடது கொங்கையில் வலச்சுழி யிருந்தால், ஆதாயம். கொங்கையின் கண்ணில் மருவிருந்தால், அதிக செல்வம் புணர்ச்சி குறைவு. கொங்கையானது குடம்போலவும் ஈர்க்கு இடையே போகாமல் தம்முள் ஒத்து மிருந்தால், அழிவில்லா செல்வம்.

வயிறு:—அடிவயிறானது கீழ் கனத்து மேல் சிறுத்திருந்தால், அன்பு செல்வம். வயிறு கடினமாயிந்தால், மலடு. கீழ் சிறுத்து மேல் பருத்திருந்தால், கடின குணம் அழகு. வயிறு மெதுவாயிருந்தால், போகம். அடிவயிறும் மேல் வயிறும் ஒத்து பூசனை பழம்போன்றிருந்தால், வெகு பொசிப்பு, காமம். வயிறு ஒட்டினைப் போலிருந்தால், கிலேசம். பருத்திருந்தால், தரித்திரம். வயிற்றில் தொனியானல், மாமன் மரணம் மயிர் நெருங்கியிந்தால், விபசாரம். மயிரிருந்தால், காமம். நாபி முதல் ஸ்தன்னியம் வரையும் மயிர் கீழ்நோக்கி யிருந்தால், அழகு, ஆயுசு, சோரச் சிலவு. மேல் நோக்கியிருந்தால், யாவரையும், தூஷித்தல். வயிற்றில் ரோமம் இல்லா திருந்தால், பதிவிரதை யாதலால். நரம்பு இடமாய் உள்ளே குவிந்திருந்தால், செல்வம், நற்குணம், பதிவிரதா தன்மை. அதிக கடினமா யிருந்தால், கிலேசம். வயிற்றில் ஒன்று அல்லது மூன்று மடிப்பிருந்தால், செல்வம், காமமின்மை. இரண்டு அல்லது நான்கு மடிப்பிருந்தால், பெற்ற பிள்ளைகள் சாதல். மூன்று மடிப்பும், மயிர்சுழியும் இருந்தால், பெண் பிள்ளைப்பேறு. நான்கு மடிப்பும் சுழியுமிருந்தால், சண்டைக்காரியாதல். ஐந்து மடிப்பிருந்தால் சுழியுமிருந்தால், கபடு அலைச்சல் கிலேசம். வயிற்றில் சுழி மாத்திரம் இருந்தால், அதிக காமம் பதிவிரதாதத்வம் செல்வம் ஜயம். வயிற்றின் மடிப்புகள் சிறுத்திருந்தால், வித்தை கோபம். வயிற்றில் மடிப்பில்லாதிருந்தால், புத்திர சம்பத்து. வயிற்றை தட விப்பார்க்கையில் சிறுபயர் போல் தென்பட்டால், மலடு. அடிவயிற்றின் மடிப்பில் மயிர்ச்சுழி யிருந்தால், புணர்ச்சியின்மை. மடிப்புகள் மிருதுவாயிந்தால், அதிக புத்திரப்பேறு.

தொப்புள்:—தொப்புளானது ஆழ்ந்து வலச்சுழியை உடையதானல், சுகம், செல்வம். உயர்ந்திருந்தால், விசாரம். தொப்புளில் இடச்சுழி யிருந்தாலும், தொப்புள் குழியாயிருந்தாலும், நற்குணமுடமை பதிவிரதை, வலச்சுழி யிருந்தால், மிடி, விசாரம். தொப்புளில், காஷ்டவாசனை வீசினல் கிலேசம். சுண்ணம்பு வாசனை விசினல், பொய் சொல்லல், இலுப்பைப்பூ வாசனை யானல், கண்டபுருஷரை இச்சித்து கூடினலும் மறுபடியும் பிரியாமை.

விலா:—விலாப்புறத்தில் நரம்பு தோன்றியிருந்தால், துன்பம் உயர்த அரவப்படமிருந்தால், சுமையெடுத்தல் அரவப்படம் தாழ்ந்திருந்தால், அலைச்சல். வலச்சுழி மயிரி

சோ. சிவகடாட்ச சர்மா,
"அருள்மயில்" அச்சகம்,
ஊர்க்காவல், (இலங்கை.

ருந்தால், நினைத்தது முடித்தல். இடது விலாப்புறத்தில் இரண்டு மயிர்சுழி யிருந்தாலும், வலது விலாவில் வலச்சுழி மயிரிருந்தால், அதிக காமம். வலது விலாப்புறத்தில் ஒரு மயிர்ச்சுழி யிருந்தால், வறுமை. இடது விலாப்புறத்தில் ஒரு மயிர்ச்சுழியிருந்தால், அனேகரை ரக்ஷித்தல். விலாப்புறத்தில் மூன்றுக்கு மேற்பட்ட சுழி ஆனால், விபசாரியாதல். வலது விலாவிலும் இடது விலாவிலும் ஒவ்வொரு மயிர்ச்சுழி யிந்தால், மலடு. இடது விலாவில் இடச்சுழி இருந்தால், விபசாரம் காமமின்மை.

முதுகு:—முதுகானது ஆமையைப்போல் உயர்ந்திருந்தால், தீர்த்தயாத்திரை செய்தல். ஒன்றாக யிருந்தால், கற்பு. இரண்டாக தோன்றினால், பழிச்சொல், முதுகில் மயிர் மிகுதியானால், திருடு. ஒரு வலச்சுழி யிருந்தால், விபசாரியாதல். ஒரு இடச்சுழி யிருந்தால் உலகாளல். வலப்புர மயிர்ச்சுழி யிருந்தால், பாபம். இடப்புற மயிர் சுழியிருந்தால், மலடு மயிர்தோன்றி யிருந்தால், யாவரிடத்தும் இஷ்டமுள்ளவளாதல். கீழ்முதுகில் மயிர் மிகுதியானலும், கருத்துப்பருத்து மிருந்தாலும், கபடு. முதுகில் நடுவெலும்பு மறைந்து, மயிரில்லாமலிருந்தால், வியாதி.

இடை:—இடையானது சிறுத்து நடக்கையிற் கொடி போல் துவண்டிருந்தால், பக்திஉடமை, உத்தமியாதல். வெள்ளைத்தண்டு போன்றிருந்தால், பலபேரை இச்சித்தல் பருத்து ஒதிபோலிருந்தால், காமம், அச்சமின்றி பலதேசம் திரிதல். சிறுத்திருந்தால், ஆபரணம். இடுப்பின் முன் புறமானது ஆமை முதுகு, யானையின்கும்பஸ்தலம் இவைகளை ஒத்திருந்தால், சுபம். இடுப்பின் பின்புறமானது பருத்துயர்ந்து, பஞவுடையதுமா யிருந்தால், விலை உயர்ந்த ஆபரணம் பூணல். இடுப்பில் மயிரின்றி, மூன்று சதை மடிப்பிருந்தால், தனம், சுகம், மருவாவது, மச்சமாவ திருந்தால் போகம்.

அல்குல்:—நிதம்பமானது இடையில் மயிர் நரம்பற்று இருபத்திநான்கு அங்குலமுடையதாகி வட்ட வடிவமாய் சிறுத்து மெல்லியதாகி மத்தகம் யானையின் முதுகு இவை போன்றிருந்தால், நன்று அதிக விசாலமாயிருந்தால், கணவனை அவமதித்தல். யோனியானது அரசமரத்தின் இலைபோன்றதும் விசாலமானதுமாயிருந்தால், அதிக செல்வம். ஆழ்ந்து சூக்ஷ்மமாயிருந்தால், துக்கம். யோனி

யின் மேற்புறமானது ஆமைபோல் உயர்ந்திருந்தால், செல்வம். யோனியின் உட்புற லிங்காகார நாடியானது மறைந்திருந்தால், சம்பத்து. யோனியானது சுஷ்கமாகி பல சந்துவிட்டிருந்தால், தரித்திரம். பிரதக்ஷிணமான மயிர்சுழி யிருந்தால், வறுமை. குதமானது தொங்கியிருந்தால், கணவனுக்கு மரணம்.

துடை:—துடையானது கடினமாயிருந்தால், விகார குணம். துடைகள் ஒன்றோடொன்று நெருக்கமுற்று யானை துதிக்கையோடொத்துமிருந்தால், அதிக செல்வம். வாழைமரத்தை ஒத்து மயிர் நரம்பின்றி யிருந்தால், சிறந்தது. துடையில் மயிர் அதிகமாயிருந்தால், அமங்கிலியாதல். நரம்பு தோன்றியிருந்தால், வறுமை. மயிர்ச்சுழி யிருந்தால், மலடு. வலது துடையில் மரு இருந்தால், நன்மை. இடது துடையில் மரு இருந்தால், வறுமை. எள்ளைபோன்ற இரண்டு கறுப்பு மச்சம் இருந்தால், நீச்சப்புணர்ச்சி செய்தல்.

முழங்கால்:—முழங்காலானது எலும்பு தோன்றாமல் வட்டவடிவமாய் தசைபற்றி இருந்தல், சிறந்தது. முழங்கால்கள் ஒன்றோடொன்று சரியானதாகி சந்தியில் பருத்திராமல் ஒரேவிதமா யிருந்தால், அதிக செல்வம். வட்டமாய் ஆனை முதுகுபோன்றிருந்தால், அழகு. நீண்டிருந்தால், விசாரம். முழங்காலில் மயிர் அற்பமாயிருந்தால் செல்வம், ஆயுசு. ஒரு மயிர்ச்சுழி யிருந்தால், சரிபோகம், அதிக காமம், கபடு.

ஜங்கை:—ஜங்கைகள் உருண்டு ஒன்றோடொன்று சரியாகி மழமப்பாகி மயிர் நரம்புகளின்றி இருந்தால், இராஜபத்தினியாதல். ஜங்கையில் மயிர் முளைத்திருந்தால், விதவையாதல். ஜங்கையானது சதை பருத்ததாகில், செல்வம். நாய், காக்கை இவைகளின் ஜங்கையை ஒத்திருந்தால், தரித்திரம்.

கணைக்கால்:—கணைக்கால் வரால் மீன்போன்றிருந்தால், அநேகம் பெண்களுக்கு எஜமாட்டியாயிருத்தல். கணைக்கால்கள் சரியாகி நரம்பில்லாமல் உருண்டு சதையால் மறைந்திருந்தால், சுபம். கணைக்காலில் நரம்பிருந்தால், கோபம். மயிர் பருத்து கறுத்து நெருங்கியிருந்தால், மலடு. மயிர் சிவந்து நுனிமயிர் பிளந்திருந்தால், மாமி முதலானவருக்கும் அஞ்சி நடத்தல்.

**பரடு-குதிக்கால்:**—பரடானது பந்துபோன்றிருந்தால், ஆயுசு. பருத்திருந்தால், கபடு. குதிக்கால் நீண்டிருந்தால், வறுமை. நடக்கும்போது காலில் நட்டம் ஒடிந்தால், அசுசி, பதியின்மை. குதிக்காலில் சுழியாவது மருவாவதிருந்தால், அதிர்ஷ்டம். மேற்சொன்ன இலக்ஷணங்கள் வலது காலில் இருந்தால், குபேரசம்பத்து.

புறங்கால்:—புறங்காலானது திரண்டிருந்தால், புருஷனை எதிர்த்து பேசல். எலும்பு தோன்றாமல் சதைபிடித்து ஆமை முதுகு போலுயர்ந்து பார்வைக்கு அழகாயிருந்தால், அரசன் மனைவியாதல். புறங்காலில் மயிரிருந்தால், காமம். நரம்பு தோன்றியிருந்தால், வறுமை. மயிர்ச்சுழியிருந்தால், செல்வம். காலடியில் மயிர் முளைத்திருந்தால், பெண்குலை செய்தல்.

**பாதம்:**—பாதமானது வெதும்பியிருந்தால், அதிக செல்வம். குளிர்ந்திருந்தால், வறுமை. பாதங்கள் மழமழப்பாயும், உயர்ந்த நுனியைப்பெற்றும், சிவந்த நகங்களையுடையவையும், மேடு பள்ளமில்லாமல் சதை பருத்தவையும், அழகுள்ளவையு மாயிருந்தால், ராஜபத்தினியாதல். மிருதுவாயிருந்தால், வீரியம் முந்திப்போதல். கடினமானால், வீரியம் விடாது, பாகித்தலும் அலைச்சலுமுண்டு. பாதத்தில் உள்ளரேகை கறுத்திருந்தால், அன்னிய தேசம்போதல்.

உள்ளங்கால்:—உள்ளங்காலானது பதிந்து பூமியில் பட இருந்தால், க்ஷேமமாயிருத்தல். உள்ளங்கால்கள் நடுவில் ஒரு எறும்பு போக இடம் இருந்தால், முன்கோபியாதல். மயிர் போக இடம் இருந்தால், செல்வம். கடினமானல், போகம். சதைபருத்து, மெதுவாகி மழமழப்படைந்து, வேர்வையற்று, உஷ்ணமாகி சிறந்திருந்தால், சகலபாக்கியம் உண்டு. சதையுள்ளவையும், மெல்லியவையும், தம்முள் ஒத்தவைகளுமாகில், சிறந்தது.

**பின்வரும் கால் லக்ஷணத்தை ஸ்திரீகளுக்கு இடதுகாலில் பார்க்கவேண்டும்.**

உள்ளங்கால்ரேகை:—உள்ளங்காலில் ஒருரேகை கொடிபோன்றிருந்தால், அழகு உள்ளங்காலின் ரேகை மீன் போன்றிருந்தால், அதிக காமம். சக்கரம் போன்றிருந்தால், நூறுவயசு. மத்தளம் போன்றிருந்தால், வெளியிலே மன

துள்ளவளா யிருத்தல். வாள் போன்றிருந்தால், கொலைபாதகம் செய்தல். பாம்பின் படம், எலி, கழுதை இவை போன்றிருந்தால், வறுமை. நாற்சதுரமாய் இருந்தால், சரிபோகம். மீன், அங்குசம், நவதானியம், வஜ்ராயுதம், கலப்பை, கத்தி, இவைபோன்றிருந்தால், சிறந்தது. கூஜா, சிங்காசனம், குதிரை, யானை, தேர், கற்பகவிருஷம், தூபஸ்தம்பம், பாணம், மாலை, குண்டலம், சாமரம், மலை, டக்கயம், தோரணம், ஸ்வஸ்திகம், வேதிகை இவை போன்றிருந்தால், இராஜபத்தினியாதல், சிவந்திருந்தால், தூரதேசம் போதல். கறுத்திருந்தால், அந்நிய தேசம் போதல். உள்ளங்கால் குதி தொடுத்து, கால் விரல் நுனிமட்டும், ஒரு ரேகையிருந்தால், செல்வம். லக்ஷ்மி விலாசம். உள்ளங்கால் ரேகை நடுவே ஒரு புள்ளடி இருந்தால், அதிக வறுமை. உள்ளங்காலில் ரேகை இல்லாமலிருந்தால், அற்பபோகம். பைசாசபுணர்ச்சியில் திருப்தி. மற்றப்புணர்ச்சியில் இஷ்டமின்மை.

கால் பெருவிரல்:—கால் பெருவிரல் மிக நீண்டிருந்தால், அழகு. மற்ற நான்கு விரல்களும் சிறுத்து உட்குறுகியிருந்தால், நுட்பபுத்தி. தட்டையாக விருந்தால், கைம்பெண்ணாதல். மற்ற நான்கு விரல்களைப் பார்க்கிலும், நீண்டிருக்கில் வறுமை. நீண்டிருந்தால், பதிவிரதை.

கால் பெருவிரலை அடுத்தவிரல்:—கால் பெருவிரலை அடுத்தவிரல் நீண்டிருந்தால், சிறுபோது விளையாடும் பிள்ளைகளுடன் புணர்ந்து பின் பதிவிரதையாதல். மிகநீண்டிருந்தால், வெகுபூஷணம். மிதமாய் நீண்டிருந்தால், சோரம். பெருவிரலுக்கு முன் நீண்டிருந்தால், விபசாரம்.

நடுவிரல்:—நடுவிரல் நீண்டிருந்தால், சோரத்தனம். பழிச்சொல். கொஞ்சமாக நீண்டிருந்தால், நூறு வயசு, செல்வம். இடது காலின் நடுவிரல் கீழ் நீண்டிருந்தால், வாகனம், நல்லவீடு. நடுவிரலில் மயிரும் மருவும் இருந்தால், நினைத்தகாரியம் முடியாமை,

கால் சிறுவிரலை அடுத்தவிரல்:— காற் சிறுவிரலை அடுத்த விரல் சரியாக நீண்டிருந்தால், விபசாரம். பூமியில் படுவதாயிருந்தால், பாபம். தூக்கிக் கொண்டிருந்தால், தரித்திரம்.

சிறுவிரல்:—சிறுவிரல் நீண்டிருந்தால், விபசாரம். படுத்திருந்தால், புருஷரை வெறுத்தல், சிறுவிரலில் மயிரிருந்தால், திரவியம்.

கால்விரல் போது:—கால் பெருவிரல் தவிர மற்றவிரல்கள் நான்கும் மிக நீண்டிருந்தால், அன்னிய புருஷனிடத்தில் அன்பு, ஆனல் புணர்ச்சியின்மை. நெருங்கியிருந்தால், வெட்கம். ஒன்றுக்கொன்று கலக்காமலிருந்தால், விர்த்தியின்மை. கால் விரல்கள் குறுகியிருந்தால், அற்பாயுசு. ஒன்றுக்கொன்று குறுகி ஒன்றின்மேல் ஒன்றிருந்தால், அமங்கிலியாதல். அவளைக் கூடினவன் மறுபடியும் கூடான். ஒன்றுக்கொன்று குறைந்து சிவந்து புத்தகம் போன்றிருந்தால், ஆயுசு, அழகு, செல்வம். சரியாயிருந்தால், கிலேசம். வளைந்து சுருண்டிருந்தால், காமம், புணர்ச்சியின்மை, வறுமை. உயர்ந்திருந்தால், வாழ்வு இழத்தல். நெருங்கி உருண்டு மெதுவாகி மேடு பள்ளமின்றி உயர்ந்திருந்தால், சுகம். கால் விரல்களில் நரம்பெழும்பி இருந்தால், வறுமை. மயிர் பருத்து நெருங்கியிருந்தால், அதிக உழைப்பு. மயிர் சிறுத்து நெருங்கியிருந்தால், அக்ரமம். துன்பம்.

கால் நகங்கள்:—கால் நகங்கள் வட்டமாயிருந்தால், அழகு. சிவந்திருந்தால், தீர்க்காயுள். குறுகியிருந்தால், இராஜ பத்தினியாதல். மிருதுவாயிருந்தால் எப்போதும் புணர்ச்சியில் இஷ்டம். வெளுத்திருந்தால், பக்ஷணத்தில் இஷ்டம். முதிர்ந்திருந்தால், ஒன்றுமில்லாமை. நீண்டிருந்தால், பக்தி, சுத்தம். அர்த்த சந்திரன் போன்று மெதுவாகியிருந்தால், சுபம். கோணியிருந்தால், விதவையாதல்.

தேக வாசனை:—தேகத்தில் நன்ருய் அலர்ந்த செங்கழுநீர் தாமரை, பாதிரி, ஷெண்பகம் இவைகளின் வாசனையை யொத்த வாசனை வீசினல், மங்களகரம். கழுதைமேல் வீசும் வாசனை வீசினல், கெட்ட புத்தி. கற்ருழை நாற்றம் வீசினல், அனேகம் பிள்ளைகளைப் பெறுதல், தரித்திரம், கடைசியில் விதவையாதல். துற்கந்தமான வாசனை அல்லது சுண்ணும்பு வாசனை வீசினல், தரித்திரம். தேகமானது எப்போதும் சூடாயிருந்தால், மூதேவி வாசம்.

தேகம்:—கறுத்து மெதுவானதா யிருந்தால், ரத்னுபரண முடமை. மாந்தளிர் போலவும், பொன்னைப் போலவும், வேர்வையற்று இருந்தால், செல்வம். தேகத்தின் வலதுபுற அங்கங்கள் இடதுபுற அங்கங்களுக்கு சிறியதாயிருந்தால், போகபாக்கியம்.

நிரேகத்தின் வர்ணம்.—பொன், தாமரை, சண்பகம் இவைகளின் வர்ணத்தை ஒத்திருந்தால், சுபம். கறுத்திருந்தால், பாக்கியம். வெண்மையா யிருந்தால், அசுபம். வெளுப்பும் கறுப்பும் கலந்த நிறமாயிருந்தால், சிறப்பின்மை.

நடை:—ஸ்திரீகள் நடக்கும்போது சப்தமில்லாமலிருந்தால், விபசாரம் செய்தல். பூமி அதிர்ந்தால், தரித்திரம், நடையானது அன்னம், மதயானை இவைகளின் நடையை ஒத்திருந்தால், ராஜபத்தினியாதல். பசு, விருஷபம், சிங்கம், மயில், பூனை, இவைகளின் நடையை ஒத்திருந்தால், ஐஸ்வரியம். தவளை, காக்கை, கொக்கு இவைகளின் நடையை ஒத்திருந்தால், தரித்திரம். மானின் நடையை ஒத்திருந்தால், ஊழியம் செய்தல்.

ஸ்வரம்:—ஸ்வரமானது பெண்குயில், பெண்கிளி, வீணை, குழல், இவைகளின் தொனியை ஒத்திருந்தால், பாக்கியம். பெண் பூனையின் தொனியை ஒத்திருந்தால், பிள்ளைகளைக் கொல்லல், திருடு. உடைந்த வெண்கலம், குள்ளநரி, கோட்டான் இவைகளின் ஸ்வரத்தை ஒத்திருந்தால், துக்கம், நோய். ஸ்திரீகளுடைய சம்பாஷணையானது நயத்தோடு கூடினதாகில், சுகம். சமத்காரமானதாயும், சிரிப்போடு கூடினதாகில், விபசாரம் செய்தல்.

கயிறு அளக்கும் விதம்:—ஓர்கயிற்றால் விரல்களைந்தையும் முறையே அளந்து, அந்த அளவையுடைய கயிற்றை முழங்கையில் வைத்து அளக்கில், அக்கயிறானது நடுவிரல் நுனிவரையில் வந்தால், இராஜபத்தினியாதல். நடுவிரலின் மேல் இரையில் வந்திருந்தால், மந்திரியின் தேவியாதல், நடுவிரலின் நடு இரையில் வந்துநின்றால், திரவியம். அடி இரையில் வந்துநின்றால், நன்று. உள்ளங்கை ரேகையில் வந்துநின்றால், வறுமை. இடதுதோள், தொடுத்து கைநடுவிரல் நுனிமட்டும் வந்த நூலை இரட்டித்து இடது காலின் பெருவிரல் நுனியில் வைத்து அளக்கையில் அக்கயிறானது நெற்றிமயிர் வரையில் வந்தால், நூறுவயசு, செல்வம் நெற்றிவரையும் வந்தால், எண்பதுவயசு, செல்வம். புருவம்வரையில் வந்தால், எழுபதுவயசு, அதிக செல்வம், மூக்கின்வரையில் வந்திருந்தால் அறுபதுவயசு, திரவியம். மூக்கின் நுனிவரையில் வந்தால், ஐம்பத்தைந்து வயசு சகலருக்குந் துன்பம். வாயில்வந்து நின்றால், செல்வம்.

வரையில் வந்தால், நாற்பத்தைந்து வயசு. கழுத்து வரையில் வந்தால், நாற்பதுவயசு முழுவறுமை. மேற்சொன்னவற்றிற்கு கீழ் இருந்தால், அற்பாயுசு.

முன்சொன்னவாறே அளக்கிற நூலுக்கு மஞ்சல், சந்தனம் வாசனைத்திரவியம் முதலியன பூசி கற்பூரதீபம், தூபம் காண்பித்து விக்கினங்களைப் போக்கு பவராகிய விநாயக மூர்த்தியை மிகுந்த அன்புடன் தியானித்து அளக்க வேண்டியது. வெறுங் கயிற்ருல் அளந்தால் ஆயுசு குறையும்.

மேற்சொன்ன லக்ஷணங்களை பெண்களுக்கு 12 வயதுக்கு மேல்பார்க்க வேண்டும்.

பின்வருவது ஸ்திரீகளுக்குள்ள லக்ஷண மல்லவாயினும், இதையாவரும் அறியவேண்டிய தாகையால் இவ்விடத்தில் சேர்க்கப்பட்டது.

ஒருவனுடைய விவாகத்திற்காக ஓர்பெண்ணை முதலில் பார்க்கப்போகும்போது, அப்பெண் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தால், ரோகம் அழுதுகொண்டிருந்தால், அமங்கிலியாதல் தூங்கிக்கொண்டிருந்தால், மரணம். விவகாரத்தி லிருந்தால், வீட்டில் இருப்பவர்களை துரத்தல். நிர்வாணமா யிருந்தால், புருஷனை விட்டுவிடல். மேல் ஆடையின்றி யிருந்தால், துக்கம். இருட்டிலிருந்தால், அஞ்ஞானம். வெளிச்சத்தி லிருந்தால், நற்பேறு. போஜனம் செய்து கொண்டிருந்தால், பிள்ளைப்பேறு மாதவிடாயாய் இருந்தால், மரணம். அப்படியன்றி பிழைத்தால், விபசாரியாதல். அலங்கரித்துக் கொண்டிருந்தால், சுபம்.

ஸ்திரீயானவள் துஷ்டசீல முடையவளா யிருக்கில், அழகிய லக்ஷணங்களைப் பெற்றிருக்கினும், அவள் விபரீத லக்ஷணங்களையுடையார்களில் சிரோமணியாகிருள்.

சுபலக்ஷணங்களையும், சுபமான சீலத்தையு முடையளாகித் தன்வசமுள்ள கணவனுகிய தேவதையையுடைய புண்ணியவதியானவாள் ஸர்வேஸ்வரனது அநுக்கிரகத்திஞல் ஒரு புருஷனுக்கு மனைவியாகிருள்.

பூர்வ சன்மத்தில் எந்த ஸ்திரீகள் சுமங்கிலிகளை பற்பல அலங்காரஞ் செய்தனர்களோ அவர்களே இந்த ஜன்மத்தில் மிக ரூபவதிகளாய் ஜனிக்கின்றனர்.

எந்த ஸ்திரீகளால் சரீரமானது புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து அலம்பப்பட்டதோ அல்லது (விடப்பட்டதோ) அந்த ஸ்திரீகள் லாவண்ணியமென்னும் அதிசயித்த சோபைக்கு ஓர் நதி போன்றவர்களாகவும், மிகுந்த லக்ஷணத்தைப் பெற்றவர்களு மாகின்றனர்.

சகல லோகமாதாவாகிய பார்வதி, எந்த ஸ்திரீகளால் முந்திய ஜன்மத்தில் பூஜிக்கப் பட்டாளோ அந்த ஸ்திரீகள் இந்த ஜன்மத்தில் நன்னடத்தையைப் பெற்றும், தன்வசமாகிய பதியையுடையவர்களுமாகின்றனர்.

பதியை தன்வசமாக்கிக் கொண்டு, புகழத்தக்க சீலத்தைப்பெற்றிருக்கிற ஸ்திரீகளுக்கு, ஸ்வர்க்க போகமும் நிறதிசயானந்த ரூபமான முத்தியும் இப்பிறவியில் தானே உண்டாகின்றன. இவ்விதபாக்கியம் சரீரத்தின் லக்ஷணத்திற்கு பலனாகும்.

ஸ்திரீகள் தங்களது சரீர லக்ஷணங்களாலும், நல் நடத்தைகளாலும், தன்பதி அற்பாயுளா யிருக்கினும், அவனை தீர்க்காயுளையுடையவனாகவும் மிகுந்த ஆனந்தத்தையடைந்தவனாகவும் செய்கின்றனர். அதாவது ஸ்திரீயானவள் சுபலக்ஷயத்தைப் பெற்றிருக்கில், அவளது பாக்கியத்தினால், புருஷன் மிகுந்த வாழ்வை யடைகிறான்.

ஆகையால் விவேகிகளாகியபுருஷர்கள் ஸ்திரீலக்ஷணங்களைச்சாஸ்திரத்தின்படியே நன்காராய்ந்து விபரீத லக்ஷணங்களை நீக்கிச் சுபலக்ஷணங்களை யுடையவர்களாகிய ஸ்திரீகளை விவாகம் செய்யக் கடவார்கள்.

பத்மினி ஜாதியான நாயகியானவள் பரிபூரண சந்திர பிம்பத்தை யொத்த முகத்தை யுடையாளும், அசைவற்ற கண்பார்வை யுடையாளும், பருத்த ஸ்தனங்களை யுடையாளும்,வல்லவளும், மெதுவான அவயவங்களை யுடையாளும், அலர்ந்த தாமரைமலரின் மணம் பெற்றவளும், கறுத்து அல்லது சிவந்த தாகிய நிறத்தையுடையாளும், சிற்றுண்டியில் அல்லது ஆகாரத்தில் அற்பமாகிய ருசியை யுடையவளும் காமலீலையில் வல்லவளும், ஹம்சத்தின்

குரலை யொத்த குரலைப்பெற்றவளாகி தானம் செய்கிறவளும், குரு, தேவதை இவர்களுடைய பூஜையில் மிகுந்த சிரத்தை யுடையாளுமாகிருள்.

சித்தினி ஜாதி ஸ்திரீயானவள் கறுத்த நிறமுடையாளும், தாமரை மலர்போன்ற முகத்தைப் பெற்றவளும், மான் விழியாளும், மழமழப்புடையதாகி அழகிய சரீரத்தையுடையாளும், ஸங்கீதசாஸ்திரம் சிற்பசாஸ்திரம், இவைகளைக் கற்றுணர்ந்தவளும் உயர்ந்த கொங்கைகளையும், சிறந்த அங்கங்களை யுடையாளும், எப்பொழுதும் வித்தியாப்பியாசத்தில் சிரத்தை யுடையாளும், நடையினால் மதத்தயானையையும், தொனியினால் மதத்த மயிலையும், ஒத்திருப்பவளும் விசித்திரமாகிய தொனியைப் பெற்றவளும், சிறந்த மகா கவிகளுக்கு இஷ்டையுமாக அறியத்தக்கவள்.

சங்கினி ஜாதி ஸ்திரீ என்பவள் மெல்லிய அவயங்களையும், கோணியபார்வையையும், சிறிய ஸ்தனங்களையும், பெரும் பாலும் நீண்ட தலைமயிர்களையும், பொன்னிறத்தையும், கர கரவென்று பேசுகிற குரலையும் உடையாளாகி அதிகமாக அன்னத்தைப் புசிப்பவளும் ஸ்வபாவத்தில் கோட்சொல்லுகிறவளும், காமலீலையில் புருஷனல் வருந்தி அநுபவிக்கத்தக்கவளும், அசைந்து நடப்பவர்களும் சிவந்த வஸ்த்திரத்தில் பிரீதியுடையவளும், காமலீலையில் பற்பலவிடங்களில் நாகலீலையைச் செய்ய விருப்பமுடையவளுமாக அறியத்தக்கவளாகிருள்.

ஹஸ்தினி ஜாதி ஸ்திரீயானவள் மிகப்பருத்தும் குறுகியு மிருக்கிற அங்கங்களையும், மெதுவாகிய நடையையும், கொடியதாகிய ஸ்வபாவத்தையும், வணங்கிய கழுத்தையும் சற்றுப் பொன்னிறங்களாகிய முன்னெற்றி மயிர்களையும், பருத்து அகன்ற ஸ்தனங்களையும், வெட்கத்தையடையாத முகத்தையும், கோவைப்பழம்போன்ற உதடுகளையும் உடையாளாகியும், வெகுவாகப் பண்டம் புசிக்க விருப்ப முடையாளும், சிவந்த நிறத்தைப் பெற்றவளும், புருஷனல் மிகவருந்தியே புணரத்தக்கவளாகவும், யானையின் மதஜலத்தின் மணத்தைக் குஹ்யத்தில் பெற்றவளுமாக நிச்சயிக்கப் படுகிருள்.

## பத்மினி முதலிய ஜாதிகளைப் புணரத்தக்க காலத்தைச் சொல்லுகிருர்

பத்மினி ஜாதி ஸ்திரீயின் புணர்ச்சியில் நான்கு, ஒன்று ஐந்து, இரண்டு இந்த திதிகள் தக்கவைகள்.

சித்தினி ஜாதி ஸ்திரீயானவளை பத்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இந்த திதிகளில் புணரில் பிரீதி யடைவாள்.

சங்கினி ஜாதி ஸ்திரீயானவள், பதினொன்று, பதின் மூன்று, ஏழு ஆகிய இந்த திதிகளில் புணரில் மிகுந்த திருப்தியைப் பெறுவாள்.

ஹஸ்தினி ஜாதி ஸ்திரீயின் புணர்ச்சியில் பெற்றுள்ள மூன்று, ஒன்பது, பதினான்கு, பதினைந்து, ஆகிய இந்த திதிகள் பிரீதியைத் தருவனவாகின்றன.

பத்மினி ஜாதி ஸ்திரீயின் புணர்ச்சிக்கு இரவில் நான்காவது ஜாமமும், சித்தினியின் புணர்ச்சிக்கு இரவில் முதல் யாமமும், சங்கினிக்கு மூன்ருவது யாமமும், ஹஸ்தினிக்கு இரவிலும் பகலிலும் நடுப்பாகமாகிய இரண்டாவது யாமமும் ஏற்றவைகளாகச் சொல்லப்பட்டன.

பத்மினி ஜாதி ஸ்திரீ ஒருவனும் இரவில் தன்னைப் புணருகிற புருஷனை சுகிக்கச் செய்யாள். (தான் திருப்தியடையாள்.) ஆகையால் அவளை இரவில் புணரலாகாது. காம லீலைகளில் தெளிவுருத சிறு குழந்தையாகிலும், பகலில் பத்மினியைப் புணர்ந்ததாகில், அவள் இரவியின் சம்பந்தத்தினுல் தாமரைக் கயம் மலருவதுபோல் விரைவில் திருப்தி அடைகிருள்.

### மூலதேவரால் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திரீகளின் ஸத்வத்தை (சுபாவத்தை) சொல்லுகிருர்.

தேவ சுபாவத்தை உடைய ஸ்திரீயானவள் இடையில் திரிவல்லி என்னும் மூன்று சதை மடிப்புகளைப் பெற்றும், சங்குபோன்ற கழுத்தை யுடையாளும், வல்லவளும், தாமரை மலரின் மணம் வீசுகிற சரீரத்தையுடையாளும், தாழம் பூவின் உள்போன்றழகிய ரூபத்தைப் பெற்றவளும், சுகியான சரித்திரங்களால் ஆச்சரியத்தை தருகிறவளும், சீலம் சந்தோஷம் இவைகளை விடாதவளும், இனிய குயில் குரலைப் பெற்றவளுமாகிருள்,

கந்தருவ சுபாவத்தையுடைய ஸ்திரீயானவள் ஆசையுடன் அசைவுற்றிருக்கும் பார்வையுடையாளும், ஆடல் பாடல்களில் வல்லவளும், போஜனத்தில் வெகுவாகிய

திருப்தியுடையவளும், நற்சந்தனம், மாலை இவைகளில் அன்புடையவளும், சிசிரருது, வஸந்தருது இந்த மாசங்களில் கிரீடிப்பதில் மிகுந்த சிநேகத்தை யுடையாளும், கெட்டியான சரீரத்தை யுடையாளுமாகிறாள்.

பருத்துயர்ந்த ஸ்தனங்களையும், சிவந்து மிக உயர்ந்து பருத்த சரீரத்தையும் உடையாளாகி, யௌவனப் பருவமுடைய மானினுடைய விழியைப் போன்ற விழியையுடையாளும், வெட்கமற்றவளும், பலவிதத்திலும் மனதிற்கினியதான சரீரத்தை யுடையாளும், மச்சம் மற்றும் மாம்ஸங்கள் இவைகளை ஆகாரமாக உடையவளுமாகிய இவள் மிகவும் உத்தமமான யக்ஷஸ்வபாவத்தை (இயக்கரின் ஸ்வபாவம்) யுடையவளாக முனிவர்களால் சொல்லப்படுகிறாள்.

காடுகளில் கிரீடிக்கும் வகையறிந்தவளும், இரவில் திரிகிற ஸ்வபாவமுடையவளும், குற்றமுடையதாகி கோட்சொல்லுகிற மனமுடையாளும், நிந்திக்கப்பட்டவைகளான ஆஹாரம், தொழில் இவைகளைப் பெற்றவளும், விகாரமாகிய முகத்தையுடையாளும் கறுத்த நிறத்தைப் பெற்று மிகவும் குள்ளமாகிய சரீரத்தை யுடையாளும், அழுக்கடைந்த ஆடையில் ஆசையற்றவளுமாகிய ஸ்திரீயானவள் பிரேதங்களின் ஸ்வபாவத்தை யுடையவளாகச் சொல்லப்படுகிறாள்.

### ஸ்திரீ புருஷர்களின் ஜாதிவேறுபாடுகளுக் கீடாகப்புணர்ச்சியின் பேதத்தை சொல்லுகிறார்

ஆறு, ஒன்பது, பன்னிரண்டு அங்குல அளவு நீளமாகிய லிங்கத்தையுடைய புருஷர்கள், கிரமமாக சசன் (முயல்ஜாதியன்) விருஷன் (எருதுஜாதியன்), துரகன், (குதிரைஜாதியன்) என்றும், இந்த ஆறு, ஒன்பது, பன்னிரண்டு அங்குல அளவு ஆழ்ந்த அல்குலையுடைய மாதர்களும், கிரமமாக மிருகீ (பெண்மான் ஜாதியாள்) அசுவீ (பெண்குதிரை ஜாதியாள்), கரிணீ (பெண்யானை ஜாதியாள்) என்று இவ்விதமாக பண்டிதர்களால் புருஷனுக்கும் ஸ்திரீகளுக்கும் பிரித்துச் சொல்லப்படுகிறார்கள். அதை முழுது முரைக்கில் கிரந்தம் வளருமென்று அஞ்சி இங்கு சுருக்கிச் சொன்னோம்.

ஆறு அங்குல அளவு உடையார்களாகிய சசஜாதி புருஷன், பெண்மான் ஜாதி ஸ்திரீ ஆகிய இவர்களுக்

கும் ஒன்பது அங்குல அளவைப் பெற்றவர்களான விருஷபஜாதி புருஷனுக்கும், பெண்குதிரை ஜாதி ஸ்திரீக்கும், அப்படியே பன்னிரண்டு அங்குல அளவையுடையார்களான அசுவஜாதி புருஷனுக்கும், பெண் யானை ஜாதி ஸ்திரீக்கும் உண்டாகிற புணர்ச்சியானது ஏற்றதாகி சமரத் மென்னப்படும் இவ்விதமான சேர்க்கையினல், பிரீதியானது மிகவு முண்டாகிறது. இவ்விதமன்றியே தகாதநாகச் செய்கிற வெவ்வேறு ஜாதிகளின் சேர்க்கையை ஸ்திரீ எப்படி அங்கீகரிப்பாள்.

மிருகஜாதி ஸ்திரீ, விருஷபஜாதி புருஷன் ஆகிய இவர்களுக்கும், அசுவஜாதி ஸ்திரீ, அசுவஜாதி புருஷன் இவர்களுக்கும் உண்டாகும் புணர்ச்சியை மத்தியமாகச் சொல்லுகின்றனர். அசுவஜாதி ஸ்திரீயுடன் சசஜாதி புருஷனுக்கும், விருஷபஜாதி புருஷனுடன் கரிணீ என்னும் பெண் யானைஜாதி ஸ்திரீக்கும் உண்டாகும் புணர்ச்சி நீசரதம் (அதமம் புணர்ச்சி) என்று பெயர் பெற்றதாகி அந்த ஸ்திரீ புருஷாளுக்குச் சந்தோஷகாரணமாகிறதில்லை.

மிருகஜாதி ஸ்திரீயுடன் துரகனென்னும் அசுவஜாதி புருஷனுக்கும், கரிணி என்னும் பெண்யானைஜாதி ஸ்திரீயுடன் சசமென்னும் முயல்ஜாதி புருஷனுக்குண்டானதுமான புணர்ச்சியாய், கிரமமாக மிகவும் அதிகமானதும் மிகவும் குறைந்ததாகவும் சொல்லுகின்றனர். ஆகையால் ஏற்றதாகாமல் விபரீதமாக நடக்கும் விஷமபுணர்ச்சியில் புராண சம்சயத்தைப் பெறினும், இவர்கள் காமகலை உருகிறதில்லை. ஆகையால் அவர்கள் திருப்தியடைகிறதில்லை.

### ஸ்திரீகளின் சிறப்பு.

ஓர் அரசன் வெற்றியினல், அடைந்த தேசத்தில் முக்கியமானது பட்டணம். பட்டணத்தில் முக்கியமானது வீடுகள். அவ்வீடுகளில் முக்கியமானது படுக்கை அறை அதில் முக்கியமானது கட்டிலும், மெத்தையும், அக்கட்டிலில் நன்ருய் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்திரீ சயனிப்பது இராஜபோகமாம்.

ஸ்திரீகளால் இரத்தினங்களுக்கு அழகு உண்டாகிறது, ஸ்திரீகள், இரத்திஙங்களால் அழகடைகிறதில்லை ஏனெனில் ஸ்திரீகள் இரத்தினங்களால் அலங்கரிக்கப்

படாமலிருக்கும் போதும், புருஷனுக்கு மனோகரமான வர்களாகவும், அவர்களின் ஆசையை விர்த்தி செய்கிற வர்களும் ஆகின்றனர். ஆனால் இரத்தினங்களோ அப்படி ஆகிறதில்லை.

தங்கள் எண்ணத்தை யாவரும் வெளிப்படுத்தக் கூடாதவரும், சத்துருக்களை ஜெயிக்க விருப்பமுள்ளவரும் அரசுக்குரிய அநேக தந்திரங்களில் தாங்கள் மந்திரிகளின் யோசனைகட்கு உட்படத்தக்கவரும் தாங்கள் செய்யும் காரியங்களால் பயமும், தோற்பும் சம்பவிப்பதாக சந்தேகிப்பவரும், அநேகவிதமான கவலைகளிலும் ஆசைகளிலும் மூழ்கினவருமான அரசர்களுக்கு அழகிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்த மாதின் ஆலிங்கனமே உரிய இன்பமாம்.

பிரம்மாவானவர் ஸ்திரீ ரத்தினத்திற்கு மேலான ஓர் இரத்தினத்தை எவ்வுலகிலும் சிருஷ்டிக்கவில்லை; ஏனென்றால் அவர்களுடைய வார்த்தை, நோக்கம், ஸ்பரிசம், எண்ணம் இவைகள் புருஷனுக்கு மனோகரமான எண்ணங்களை உண்டுபண்ணுகின்றன.

அந்த ரத்தினம் ஒருவனுக்குப் பெண் உருவமாய்க் கிடைப்பது அவன் செய்த புண்ணியத்தின் பலனாம். அந்த ஸ்திரீ ரத்தினத்தினால் புருஷன் மக்களையும், இன்பத்தையும் அடைகிறான். ஆதலால் ஓர் குடும்பத்தில் ஒரு ஸ்திரீயானவள் லட்சுமி போன்றிருக்கிறாள். ஆகையால் அவளை மரியாதை செய்து, அவளுக்கு வேண்டுவன கொடுத்து திருப்தி செய்யவேண்டும்.

உலகத்தை முழுதும் வெறுத்தவர்கள், ஸ்திரீகளைப் பற்றி கெடுதியாகப் பேசுகிறார்கள்; அவர்கள் மிகவும் கெட்டவர்களாக எனக்குத் தோற்றுகிறது. இவர்கள் ஸ்திரீகளின் நற்குணங்களைப்பற்றி ஒருபோதும் பேசுகிறதில்லை.

ஸ்திரீகள் புருஷர்களால் சாற்றப்படாத குற்றம் ஏதாவது உண்டா; உண்மையைச் சொல்? ஸ்திரீகளை வெறுக்கிறவர்களே அவர்களின் புத்தியீனத்தினால் அப்படிச் சொல்லுவார்கள்; மனுநீதிப் பிரகாரம் ஸ்திரீகள் புருஷரைவிட நல்லவர்கள்.

